www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමී

Puthiya Poomi

சுற்று 16 நவம்பர் 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 127



# மூன்று தலைகளும் பேரினவாத முதலாளித்துவமும்

ஜனாதிபதியும் அரசாங்கமும் ஜனாதிபதித் தேர்தலை அவசரமாகவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் நடாத்தத் திட்டமிட்டு வருகிறார்கள். இவற்றுக்கான அரசியல் வியூகங்களை மட்டுமன்றிப் பிரபல சோதிடர்களையும் கலந்தாலோசித்து முடிவுகளை எடுத்துள்ளார்கள். அதே வேளை மேற்படி தேர்தல்களில் தமது இழந்து போன பலங்களைப் பரீட்சித்துப் பார்க்கவும் சந்தர்ப்ப சூழல் கிடைத்தால் அதிகாரத்திற்கு வந்து கொள்ளவும் எதிர்க் கட்சிகள் பெரு முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடாத்தப்பட வேண்டுமானால் இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதனைத் தவிர்த்தே அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜனாதிபதி முன் வந்திருக்கிறார். இவ்வாறு தேர்தல் நடத்துவதால் பதவிக் காலத்தின் இரண்டு வருடங்களை இழக்காமல் எவ்வாறு பதவியை அனுபவிக்கலாம் என அரசியலமைப்பு சட்ட நிபுணர்கள் ஆராய்ந்தனர். அதற்கு இடம் இல்லை என்றதும் ஜனாதிபதி இரண்டு வருடங்களைப் பதவித் தியாகம் செய்து தேர்தலுக்கு முன்வந்திருப்பதாக கதை அளக்கப் பட்டும் வருகிறது. இவ்வாறு முன் கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படுவது ஏதோ இந் நாட்டிற்கும் மக்களுக்கும் ஜனநாயகம் என்பதற்குரியலை என யாரும் எடுத்துக் கொள்வதில் அர்த்தம் இல்லை. அதாவது 5/19 க்குப் பின்னான போர் வெற்றியின் முழக்கங்களின் ஓசையும் வெறுமையடைந்த வெற்றி உணர்ச்சிகளும் சிங்கள மக்களிடம் மங்கி மறைவதற்கு முன்பாகவே ஜனாதிபதித் தேர்தலாகும். இதற்கான ஒப்பு தலை தமது கட்சியான சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடெனக் கூறி கட்சி உறுப்பினர்களையும் கூடுதலான ஆதரவாளர்களையும் கொழும்பில் கெத்தாராம விளையாட்டரங்கில் கூடச் செய்து ஜனாதிபதி மேடையில் நின்று எந்தத் தேர்தல் வேண்டும் எனக் கேட்டார். அதற்கு ஜனாதிபதித் தேர்தல் எனக் கை உயர்த்தி சம்மதம் தெரிவித்தனர். இது மாநாடா அல்லது பொதுக் கூட்டமா என்பது எவருக்கும் புரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி மட்டும் நிற்குமா மூன்றாவது பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவாரா என்பது சில நாட்களிற் தெரியவரும். ஆனால் இப்போது வேட்பாளர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவாக இருப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அவரது பூடகமான கருத்துக்களும் இறுதியாக வகித்த பாதுகாப்பு அதிகாரி பதவியை ராஜினாமாச் செய்து கொண்டமையும் அரசியல் பிரவேசத்தையே எடுத்துக்காட்டி நிற்கின்றன. முப்பது வருடப் போரை முடிவுக்கு கொண்டு வந்து புலிகளை அழித்தொழித்த கதாநாயகன் பாத்திரத்தைக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் வாக்குகள் திரட்டி விடலாம் என்றே சரத் பொன்சேகா நம்புகிறார். அந்தக் கதாநாயகனைத் தமது பக்கம் இழுத்து பொது வேட்பாளராக்குவதன் மூலம் தற்போதைய ஜனாதிபதியைத் தோற்கடிக்கலாம் என நம்புகிறார்கள் ஐக்கிய தேசிய முன்னணியினர். அத்தகையதொரு நிலையில் யுத்தத்திற்கு எண்ணெய் வார்த்து நின்ற ஜே.வி.பியும் அதற்குச் சம்மதம் தெரிவித்து வருகின்றது. ஜே.வி. பியோடு ரணில் இணங்கிப் போவதை விரும்புகிறார். அவர் அண்மையில் கருத்துத் தெரிவிக்கையில் கொள்கைகளை ஒரு புறத்தில் வைத்துவிட்டுக் கூட்டுச் சேரக் கூடிய தளங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

2ம் பக்கம் →

# தமிழ்த் தலைமைகளின் ஐக்கியம் எதற்காக?



தமிழ் மக்களின் தலைமைகள் என மார்தட்டி வந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இன்று தலை குனிந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. வெட்கம் ஒரு புறமும் இயலாமை மறுபுறமும் அவர்களைப் பீடித்துள்ளன. சாத்தியமற்றதெனச் சுட்டிக் காட்டிய தமிழீழப் பிரிவினைக் கொள் கையை தலையில் தூக்கி முப்பத்தி மூன்று வருடங்களாக அதற்காகப் போராடி வந்துள்ளனர். பாராளுமன்றத்திலும் பின் ஆயுதப் போராட்டத்திலும் புலிகள், இந்தியா, அமெரிக்கா, மேற்குலகம் ஆகியவற்றை நம்பி இறுதியில் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகளை அழிவுக்கு உள்ளாக்கினர். அத்துடன் இரண்டு லட்சம் வரையான மக்களின் அழிவுக்கு வழி வகுத்தனர். மூன்று லட்சம் மக்களை முட்கம்பி வேலிகளுக்குள்ளும் வெளியே அகதி முகாம்களுக்குள்ளும் முடக்கக் காரணமானார்கள். புலம் பெயர்ந்து தமிழர்கள் தம் தாய் மண்ணிலிருந்து வேரறச் செய்தார்கள். புலிகள் தாங்களும் அழிந்து கொண்டார்கள். அத்துடன் மக்களை அழிய வழிவகுத்ததுடன் இறுதி நேரத்தில் தாங்களும் முன் நின்று மக்களை அழித்தார்கள்.

இத்தகைய புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட தமிழ்க் கூட்டமைப்பினர் பரிதாபத்திற்கு உரியவர்களாகினர். இப்போது மெல்ல மெல்லத் தலை நிமிர்த்தி ஜனாதிபதியைச் சந்தித்து உரத்த ஏச்சும் பேச்சும் வாங்கிய பின் பதுங்கிப் பதுங்கி அரசியல் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். "பட்டது போதும் இனிமேல் தமிழீழம் என்னும் பிரிவினைப் பக்கம் தலை வைத்துப் படுக்க மாட்டோம். பட்டதுபோதும் சாமி" என மூச்சு வாங்கும் குரலில் கூறியும் கொள்கின்றனர்.

இதே வேளை, தமிழீழக் கோரிக்கைக்கு ஆயுதம் தூக்கிப், பின்பு புலிகளால் வேட்டையாடப் பட்டு அதன்பின் அரசாங்கத்துடன் இணைந்து நின்ற தமிழ்க் கட்சிகள் இப்போது தம்மைத் திடப்படுத்தி நிற்கின்றனர். காரணம் தாம் ஏற்கனவே தமிழீழத்தைக் கைவிட்ட நிலையில் இப்போது இடம்பெற்ற ஒட்டு மொத்தத் தோல்வியால் நிம்மதி பெற்றுள்ளனர். இவ்வாறு அரசாங்கத்தோடு நின்று சில சலுகைகளை அனுபவித்த இரண்டு இயக்கங்கள் பாராளுமன்றப் பதவிக்காக புலிகளோடு பகை மறந்து தமது அணிகளில் புலிகளால் கொல்லப்பட்டவர்களின் புதைகுழிகளுக்கும் மேலால் ஏறிச் சென்று ஏகப் பிரதிநிதிகளைக் கட்டித் தழுவினர். அதற்காகப் பாராளுமன்றப் பதவிகள் கிடைத்தன. இவர்கள் எல்லோருமே அழிவுகளுக்கும் பேரவலங்களுக்கும் இழப்புகளுக்கும் காரணமானவர்கள். பேரினவாதம் ஒருபுறத்தில் இழப்புகளுக்கும் காரணமானவர்கள். பேரினவாதம் ஒருபுறத்தில் என்றால் குறுந் தமிழ்த் தேசியவாதிகளான இவர்கள் மறுபுறத்தில் இருந்தனர்.

இவர்கள் எல்லோரும் இப்போது ஒன்று கூடி அடுத்து என்ன செய்யலாம் என ஆலோசனை நடத்தி வருகிறார்கள். தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கோ விடிவிற்கோ அல்ல. பாராளுமன்றத்தில் உள்ள தமிழர் ஆசனங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்கேயாகும். இதற்காகவே இளம் இரத்தம் புது இரத்தம் தமிழ்க் கூட்டமைப்பிற்குப் பாய்ச்ச வேண்டும் என்ற பேச்சு எழுந்துள்ளது. வயதானவர்கள் ஒதுங்க வேண்டும் இளம் தலைமுறையினர் முன்னுக்கு வரவேண்டும் என்கின்றனர்.

நாம் கேட்பது, எதற்காக இளம் தலைமுறையும் புது இரத்தமும் கேட்கிறீர்கள் என்பதேயாகும். அறுபத்தி இரண்டு வருடப் பாராளுமன்றப் பாதையைத் தொடர்வதற்கா அன்றி முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தை மீண்டும் முன்னெடுப்பதற்காகவா? ஆண்ட பரம்பரைச் சிந்தனையும் தமிழர் பழைமைவாதப் பிற்போக்குத் தனங்களையும் அவற்றினடியான தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியலைத் தொடர்வதற்கே ஐக்கியம், புது இரத்தம், இளம் தலைமுறை தேவையென்றால் அதனால் தமிழ் மக்கள் விடுதலை பெற முடியாது. மீண்டும் மீண்டும் அழிவுகள் மட்டுமன்றி உரிமைகள் எதுவும் பெற முடியாது என்பதைப் பரந்துபட்ட தமிழ் மக்கள் தமிழ் இன உணர்ச்சிக்கு இரையாகாமல் நிதான அரசியலில் இறங்க வேண்டும்.

# மலையகத்தில் அடிபிடி சூரிச்சில் கை குலுக்கல்



அண்மையில் சூரிச் நகரில் தமிழ் முஸ்லீம் கட்சிகளின் ஒற்றுமை பற்றிய கூட்டம் நடைபெற்றது. அதில் மலையகத்தின் தலைமைகள் என்று கூறிக் கொள்ளும் இ.தொ.கா. வின் தலைவர் பொதுச் செயலாளர் இருவரும் ம.ம.மு. யின் தலைவரும் கலந்து கொண்டனர். இவர்கள் ஏன் எதற்காக யாரால் அழைக்கப்பட்டு அவ்வாறு சென்றனர் என்பது ஒருபுறம் இருக்கட்டும். இவர்கள் எப்போதாவது மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுவதற்கும் அல்லது பெற்றெடுப்பதற்கும் என்ன செய்யலாம் என்பதற்காக சந்தித்துப் பேசி இருக்கிறார்களா? அண்மைய 500ரூபா சம்பள உயர்வை வென்றெடுக்க ஒரு நாள் தானும் சந்தித்துப் பேசியிருக்கிறார்களா? ஒரு முறை ஆறுமுகன் தொண்டமானும் பெ. சந்திரசேகரனும் ஜனாதிபதி முன்பாக நின்று கைகுலுக்கியிருக்கிறா ர்கள். அது நீங்கள் இருவரும் எமக்கு அடி பணிந்து சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவேயாகும். மலையகத்தின் இன்றைய அவல நிலைக்கும் அதனை மாற்றுவதற்கும் ஒன்றுபட முடியாதவர்கள் சுவிற்சிலாந்து சென்று ஏனையோரிடமும் தங்களுக்கிடையிலும் கை குலுக்குவதில் என்ன பயன் என்றே மலையக மக்கள் கேட்கின்றனர். இம் மலையகத் தலைவர்கள் அங்கிருந்து திரும்பியதும் தாங்கள் சூரிச்சி நகரில் ஐக்கியத்திற்காகவும் மலையக மக்களுக்காகவும் எதை எதை எல்லாம் எடுத்துக் கிழித்தோம் என்பதை மலையக மக்களுக்கு எடுத்துக் கூறுவார்களா. உழுகிற மாடுகள் என்றால் உள்ளூரில் உழும் என்பது இவர்கள் எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாகும்.



## நமது தோழர்களை தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பது ஏன்?

நமது கட்சித் தோழர்களான ஆர். ஜெயசீலன் எஸ்.சுகேசனன் (ஆசிரியர்கள்) நீ.பிரதீபன் (வெளிவாரிப ட்டப்படிப்பு மாணவன்) ஆகிய மூவரும் தொடர்ந்து விளக் கமறியலில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத பொலிஸ்ரால் ஏதேதோ கூறப்பட்ட கூற்றச்சாட்டின் கீலோ நமது தோழர்கள் சிறை வைக்கப்பட்டனர் 2 1/2 வருடங்களாகியும் இன்றுவரை விசாரணையும் இல்லை விடுதலையும் இல்லை என்ற நிலைதான் இவ்வாறு சுமார் 600 க்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் சிறைகளில் இருந்து வருகிறார்கள் அவர்கள் சிறைகளில் பல்வேறு விதமான துன்பங்களையும் பேரி னவாத அடக்கு முறைகளையும் அனுப வித்து வருகின்றனர் எனவே நமது தோழர்களையும் ஏனைய அரசியல் கைதி களையும் உடன் விடுதலை செய்யுமாறு எமது புதிய ஜனநாயகக் கட்சியும் புதிய பூமியும் மீண்டும் வலியுறுத்துகின்றன.

### இலங்கையில் இந்திய ஆளும்

6ம் பக்க தொடர்ச்சி

அம்சங்கள் காரணமாக வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் 2002 ஆம் ஆண்டிற்குள் 5:1 என்ற விகிதத்திற்குக் குறைந்தது. இது 1998 இல் 6:1 என்ற விகிதத்தில் இருந்தது. 2003 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா மாறியது.

இந்தியத் தரப்பு 3 ஆண்டுகளில் 4150 பொருட்கள் மீதான இறக்குமதி வரியை ரத்து செய்தது. இலங்கை 8 ஆண்டுகளில் 3932 பொருட்கள் மீதான வரியை ரத்து செய்தது. சுதந்திர வர்த்தக ஒப்பந்த அடிப்படையிலான சலுகைகள் மட்டுமே இலங்கையின் ஏற்றுமதி அதிகரிப் பிற்குக் காரணம்.

அதேசமயம் இலங்கையின் ஏற்றுமதி பிரதானமாக வேளாண் பொருட்கள், தேயிலை, ரப்பர், தாவர எண் ணெய், மரங்கள் - மரச் சாமான்கள், ஏலம், மிளகு போன்ற வாசனைப் பொருட்கள், மீன் உணவு, தாதுப் பொருட்கள், ஆடைகள் போன்ற தாழ்நிலை முதன்மைப் பொருட்களே இவற்றுக்கு அளிக்கப்படும் சலுகைகளின் உள்நோக்கம். இந்தியத் தரகுமுதலாளிகளின் நலன்தான் மலிவான முதன்மைப் பொருள் இறக்குமதியால் அவர் களது இலாபம் கூடுகிறது. இறக்குமதியால் பாதிக்கப்படும் உள்நாட்டு சிறு உற்பத்தியாளர்களைப் பற்றி அவர்களு க்குக் கவலையில்லை.

இலங்கை முதலாளிகள் இந்தியாவில் முதலீடு செய்வதும் அதிகரித்துள்ளது. அவர்கள் மரச்சாமான்கள் நிறுவனமான தாம்ரோ, சிலோன் பிஸ்கெட்ஸ், மாஸ் ஹோல்டிங்ஸ் பிராண்டிக்ஸ் ஆடைகள் போன்றோர் இலங்கையில் செய் யப்பட்டுள்ள இந்திய முதலீடுகளோடு ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லை.

மேலும், இந்தியப் பொருளாதாரம் இலங்கையைக் காட்டிலும் சுமார் 40 மடங்கு அதிகமானது. எனவே இல ங்கையின் ஏற்றுமதி அதிகரிப்பும் மேற்கூறிய முதலீடுக ளும் துரும்புக்குச் சமம் அதே சமயம் தனக்கு ஆதரவான தன்னைச் சார்ந்து நிற்கும் நிலையில் ஒரு அடிவருடி முதலாளி / அதிகாரவர்க்கப் பிரிவை இலங்கையில் உருவாக்கவும், வளர்ச்சிப் போக்கில் இந்தியாவை விட்டு அகல முடியாத நிலையை இலங்கைப் பொருளாதாரத்துக்கு உருவாக்கவும் ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் இச்சலு கைகள் வழங்கப்படுகின்றன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் வெற்றிகர மான முன்னேற்றத்தைத் தொடர்ந்து 2005 முதல் CEPA (comprehensive Economic Partnership Agreement) ஒட்டு மொத்தப் பொருளாதாரக் கூட்டு நடவடிக்கைக்கான ஒபந்தம் என்ற வகையில் இருதரப்புப் பேச்சுவார்த்தை முன்னேறியுள்ளது. வர்த்த கத்துக்கு அப்பால் மேலும் விரிந்த அள வில் தொழில், சேவைத்துறை முதலீடுகள் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செயல்பாடுகளிலும் ஒத்துழைப்புக்கான முன்னேற்றத்தை நோக்கிய நடவடிக்கை யாக இது அமைந்துள்ளது. CEPA இறுதி செய்யப்படும் நிலையை எட்டியுள்ளதாக இருநாடுகளுமே கடந்த ஜுலை 2008இல் அறிவித்துள்ளன.

இவ்வாறாக இலங்கையின் பொருளாதா ரத்தில் மேலாதிக்கம் வகிக்கவும், இந்திய ஆளும் வர்க்கங்களின் தேவையை இலங் கையில் நிறைவு செய்து கொடுக்கவும் இந்திய அரசு மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. இப்பிராந்தியத்தில் அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்க நிலையை உறுதிசெய்து கொள்ளவும் அனைத்து எத்தனிபுகளையும் செய்கிறது இந்திய அரசு.

நன்றி : புதிய ஜனநாயகம்

### மூன்று தலைகளும்

1ம் பக்க தொடர்ச்சி

என்று கூறி இருக்கிறார். இது யூ.என்.பி.-ஜே.வி.பி. நெருக்க த்திற்கான சமிக்ஞையே ஆகும். ரணில் எப்படியாவது பதவிக்கு வந்துவிடத் துடித்து நிற்கிறார். அதற்கு அமெ ரிக்க மேற்குலகம் பக்கபலமாகச் செயற்பட்டும் வருகிறது.

அதே நேரம் பொது வேட்பாளராக சரத் பொன்சேகா வருமிடத்துத், தமிழ், முஸ்லீம் வாக்குகள் இல்லாது போகும் அபாயத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர் நோக்கி நிற்கிறது. அத்தகையது ஒரு நிலையைத் தமிழில் உரையாற்றி வரும் மகிந்த ராஜபக்ஷ தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்படுவார். அதன் முன்னோ டியாக மீள் குடியேற்றத்தை ஏ9 நெடுஞ்சாலைக்கு மேற்கே சிறிய சிறிய அளவில் செய்யவும் ஆரம்பித்துள்ளார். அத்துடன் மக்களாலும் கட்சிகளாலும் வற்புறுத்தப்பட்டு வந்த வடபுலத்து மக்களின் பயணக் கட்டுப்பாடும் கட்டணைக் குறைப்பும் நீக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் உள்ளன.

அதே வேளை, வேலைவாய்ப்பு நிரந்தரமாக்கல், சம்பள த்தைச் சிறிய அளவு உயர்த்தல், அத்தியாவசியப் பொரு ட்கள் விலைக் குறைப்பு என வாக்குச் சேகரிக்கும் நட வடிக்கைகளும் அரசாங்கப் பக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

எவ்வாறாக இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியினது வேட்பாளரோ அன்றி பொது வேட்பாளர் எனப் படுப வரோ அல்லது தற்போதைய ஜனாதிபதியோ யாராகினும் இந்த நாட்டினதும் மக்களினதும் தற்போதைய தலை விதியை மாற்றக் கூடியவர்கள் அல்லர் என்பது தெளி வான விடயமாகும். அத்துடன் அத் தலைவிதியின் பிர தான அம்சமாக இருந்து வரும் தேசிய இனப் பிரச்சினை க்கும் தீர்வு காணும் ஆற்றலோ ஆளுமையோ இவர் களில் எவருக்கும் இல்லை என்பது தெளிவானதாகும். ஏனெனில் இவர்கள் யாவரும் பேரின வாதத்தையும் முதலாளித்துவத்தையும் அந்நிய மேலாதிக்க சக்திகளையும் அரவணைத்து நிற்பவர்களே யாவர். அத்துடன் இப் பேரினவாத முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாடானது கடந்த முப்பது வருட காலத்தில் ராணுவ மயப்பட்ட சிந்த னையாகவும் செயற்பாடாகவும் வளர்க்கப் பட்டும் வந்துள்ளது. இச் சிந்தனையும் செயற்பாடும் தமிழர்களுக்கு மட்டும் எதிரான ஒன்று மட்டுமல்ல. சிங்கள மக்க ளையும் ஏனைய தேசிய இனங்களையும் சுட்டி உங்களுக்கும் இது தான் நடக்கும் என முன்னெச்சரிக்கை செய்து நிற்பதா கவும் உள்ளது.

அடிப்படையான அரசியல் மாற்றமும் அதற்கான கொள்கை வழிமுறைகள் பற் றிச் சிந்திக்காமல் மகிந்த, ரணில், சரத் என்போரில் யாரைத் தெரிவு செய்வது எனச் சிந்திப்பது அரசியல் வறுமையும் அறியாமையுமாகும். அது மட்டுமன்றி, மன் னர்களையும் அவர் தம் பெருமைகளையும் நினைவூட்டித் தம்மை அத்தகையவர் களாகக் காட்டும் ஆண்ட பரம்பரையினரின் ஆதிக்க அரசியலுக்கு அடிமைச் சேவகம் செய்பவர்களாக இருப்பது மக்களின் பலவீனமாகும்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப்பது எவரை எதிர்ப்பது என்பதில் கட்சிகளும் தலைமைகளும் எவர் ஒருவரையாவது ஆதரிக்கும் நிலைப்பா ட்டை எடுக்கலாம். ஆனால் நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் என்போர் தமது உறுதியான எதிர்ப்பு நிலைப்பாட்டை முன் நிறுத்துவதே சரியான தெரிவாக இருக்க முடியும். அண்மைய வட புலத்துத் தேர்தலில் தமிழ் மக்கள் தத்தமது தலைமைகளுக்கு மேலால் தமது தெரிவையும் தீர்ப்பையும் வழங்கியமை தாக்கம் மிக்க செய்தியாகும் என்பது இவ் வேளை மேலும் ஆழமாகவும் அரசியல் மயப்பட்டும் சிந்திக்கப்படுவது அவசியம்.

## நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

### வெளிவந்திருக்க வேண்டிய ஒரு நேர்காணல்

''தமிழர் தேசியக் கூட்டணியை ஒரு கட்சியாகப் பதிவுசெய்வது பற்றிப் பேசப்படுகிறது. அதன் கொள்கை என்ன?''

''அதிலே இணைந்திருக்கும் நாலு கட்சிகளுக்கும் என்ன கொள்கையோ அது தான் அதன் கொள்கை''

''நாலு கட்சிகளுக்கும் என்ன கொள்கை?''

''கேள்வி விளங்கவில்லை''

''நாலு கட்சிகளுக்கும் என்ன இலட்சியம்''?

''எப்படியாவது தமிழ் மக்களுடைய ஆதரவுடன் பாராளுமன்ற ஆசனங்களை வெல்வது''

''நாலு கட்சிகளுக்கும் என்ன கருத்து வித்தியாசம்?''

''என்ன பொய்யைச் சொல்லி மற்றவர்களை முந்துவது என்பது தான்''.

### ஆவதும் அவராலே தமிழர் அழிவதும் அவராலே

போரின் இறுதி மாதங்களில் நடந்த அவலங்கட்கு யாருடைய தவறான வழிகாட்டல் காரணமாயிருந்தது என்று கேட்டுப் பாருங்கள். வினோதமான விடைகள் கிடைக்கும். ஒரு சர்வதேசக் கூட்டணியே சேர்ந்து விடுதலைப் புலிகட்கு எதிராகச் சதி செய்தது என்கிற மாதிரி விளக்கங்கள் எல்லாம் வட்டுக் கோட்டைக்குப் போக வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்று மறுமொழி வருகிற மாதிரித்தான் புலம்பெயர்ந்த எங்கள் அறிஞர்களின் விளக்கங்கள் இருக்கும்.

என்றாலும் அந்தச் சதிகாரக் கூட்டத்தில் ஒரு பகுதியோடு சினேகிதம் பிடித்தால் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று மட்டும் எங்களுக்குச் சொல்லிக் கொள்வார்கள்.

### ஒக்ரோபர் சதிப் புரட்சி?

இலங்கையில் ஒரு இராணுவச் சதிப்புரட்சி ஒக்றோபர் மாத நடுப் பகுதியில் நடக்கவிருந்ததாகப் புரளி கிளப்பப்பட்டு இந்தியத் தூதரகத்தின் ஆலோசனையுடனும் இந்தியப் பாதுகாப்புப் பிரிவினரது அதிரடிப் பிரிவு ஒன்றின் உதவியுடனும் மாற்று நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டதாகச் செய்திகள் கூறின. பின்பு அந்தச் சதி பற்றிய பேச்சே வெறும் புரளி என்று தெரிய வந்துள்ளது. அப்படியானால் புரளியைக் கிளப்பி விட்டது எந்த வட்டாரம்? அதன் நோக்கம் என்ன?

அமெரிக்கா சென்றிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவை அமெரிக்கக் காவல் துறை உயர் நிறுவனம் விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் இலங்கைப் பாதுகாப்பு ஆலோசகருக்கு எதிராகச் சாட்சியங்களை வழங்குமாறு கேட்கப்பட்டதாகவும் தளபதி சரத் பொன்சேகா மூலமே தகவல் வெளி வந்துள்ளதாகவுங் கூறப்ப டுகிறது.

தென்னாசியாவில் அடுத்தடுத்து அடி சறுக்குகிற அமெரிக்காவும் தனது திட்டங்கள் எதிர் பார்த்த விதமாக நிறைவேறாதது குறித்து அவதிப்படுகிற இந்தியாவும் இலங்கையில் என்ன விதமான நாடகங்களை நடத்தத் திட்டமிடுகின்றன? அவர்களது காய் நகர்த்தல்கள் நாட்டை எங்கு கொண்டு செல்லும் என்பது பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தேவைப்படுகிறது.

### சிதம்பர ரகசியம்

தில்லை வாழ் அந்தணர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற, பார்ப்பனியச் சாதி வெறியும் தமிழ் விரோதமும் நிறைந்த சிதம்பரம் நடராசர் கோவிற் தீட்சிதர்கள் கோவிலினுள்ளே தமிழிற் பாடத் தடை விதித்த கதையும் அத் தடையை மீறி மக்கள் முன்னெடுத்த போராட்டமும் பற்றிப் பலரும் அறிவோம். தமிழிற் பாட நீதிமன்றத் தீர்ப்பை மக்கள் வென்றெடுத்த பின்பும் தீட்சிதர்கள் இவ்வூர் இனவாதப் பிக்குமார் போல வெறித்தனமாக அதை மறித்ததையும் சிலராவது அறிவோம். தீட்சிதர்கட்குச் சிவபெருமானால் வழங்கப்பட்டது என்று உரிமை கொண்டாடப்பட்ட கோவில், தீட்சிதர்களின் உடைமையல்ல எனவும் நீதிமன்றம் கூறிவிட்டது. ஆனாலும் சாதித் திமிரும் ஆதிக்க வெறியும் ஆளைச் சும்மா விடுமா? தமிழர் விரோதம் மிக்க சுப்பிரமணியசாமி, வி. எச். பி. எனும் இந்த மத வெறி நிறுவ னத்துடன் சேர்ந்து எதிர் வழக்காடப் போகிறார். இங்கே மாவிட்டபுரத்திலும் வழ க்குப் பேசப்பட்டதல்லவா!

இந்த நிகழ்வுகள் பற்றித் திரிபுவாத சி.பி.எம்மின் அரசியல் தரகர் என். ராம் நடத்தும் ஏடான ·.புறொண்ட்லைன், ஒக்றோபரில் ஒரு 5 பக்கக் கட்டுரை வெளியிட்டது. அதில் போராட்டத்தை முன்னின்று நடத்திய மக்கள் கலை இலக்கியக் கழகத்தினதோ அதற்கு ஆதரவளித்த பா.ம.க. உட்பட்ட கட்சிகள் எவற்றினதோ பேர் குறிப்பிடப்படவில்லை. போதாதற்கு, இரண்டு "தீவிர" அந்தங்களிலும் நில்லாமல் சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகியன ஒதுங்கிக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. சி.பி.எம்மின் தயக்கத்துக்குக் காரணம் "பார்ப்பனச் சாதி வெறியை எதிர்ப்பது" என்ற கருத்து முழக்கமே என்ற உண்மை மூடப்பட் டுவிட்டது.

இந்த விதமான மோசடிக்காரர்களை விடச் சாதி வெறி பிடித்த தீட்சிதர்கள் பரவாயில்லை. அவர்களது நிலைப்பாடு வெளிவெளியானது. எனவே எதிர்த்துப் போரட இயலுமானது.

### நன்றி மறவாமை

"போக விடை தாருமையா ராஜபக்ச சாமி" என்று கெஞ்சி இரந்து வன்னிக்குப் போய்வந்த தமிழ்த் தேசிய முன்னணியினருள் ஒருவரான பா.உ. சிறீ காந்தா, அங்கே உள்ளவர்கள் மிகுந்த மன நிறைவோடு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அவர் ஒரு மாதம் முன்பு அரசாங்கத்துக்கு நன்றி சொன்னபோதே நினைத்தேன், சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று. இந்த அறிவித்தல் எதற்கான நன்றிக் கடன்? பெற்றவைக்கா, பெற உள்ளவைக்கா?

அவர்கள் அங்கேயேஇருக்க விரும்புவதாகப் புண்ணியவான் சொல்லவில்லையே. அதற்காக அவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டாமா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்க் கூட்டமைப்பு தனிக் கட்சியாகுமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்பது 2004ம் ஆண்டு தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இதனை உருவாக்குவதில் புலிகள் இயக்கம் முன்னின்றது. இதில் அன்றைய புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் முக்கிய பாத்திரம் வகித்தார். இக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், புலிகள் இயக்கம், ரெலோ இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பன இணைக்கப்பட்டன. தேர்தல் சின்னமாகத் தமிழரசுக் கட்சியின் வீடு தூக தட்டி முன்வைக்கப்பட்டது. அத்துடன், பாவம், ஆனந்தசங்கரியும் அவரைத் தலைமையாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவை முற்றிலும் பாராளுமன்றப் பதவிகளை ஒன்றும் விடாமல் கைப்பற்றிப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை உள் நாட்டிலும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக் காட்டுவதே புலிகளின் பிரதான நோக்கமாக இருந்தது. இதில் உள்ளூர இக் கட்சிகளுக்கு உடன்பாடு இருக்கவில்லை. ஆனால் மூன்று காரணங்களால் கூட்டுக்கு ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. ஒன்று புலிகளின் மிரட்டல். இரண்டாவது புலிகளை எதிர்த்துத் தேர்தலில் வெல்லமுடியாது. மூன்றாவது எப்படியாகிலும் ஏற்கனவே உள்ள பாராளுமன்றப் பதவிகளைத் தக்கவைப்பதுடன் தவறிப்போன ஆசனங்களை மீளப்பெறும் நோக்கு. புலிகளின் நேரடி உதவி ஒத்துழைப்புடன் தேர்தலில் கள்ள வாக்கு முன்னிலை வகிக்க 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏகப் பிரதிநிதிகளாக பாராளுமன்றப் பதவிகட்குத் தெரிவானார்கள். இது ஐந்து வருடங்களுக்கு முந்திய கதை. இதனை ஞாபகப்படுத்துவது கூட்டமைப்புக்கு ஒவ்வாத ஒன்றாகும்.

இப்போது அண்மைய பேரழிவுகள் இழப்புக்கள் இடப்பெயர்வுகள் என்பனவற்றின் ஊடே தமிழ் மக்கள் பட்டவை வரலாற்றுத் துன்பியலாகியுள்ள சூழலில் தமிழ்க் கூட்டமைப்பு என்ன செய்வது என்று தெரியாது விழிக்கிறது. இதில் தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் போட்டி அன்று மட்டுமன்றி இன்றுவரை உள்ளூர இருந்து வருகிறது. தமிழரசு மேலோங்கினால் தமிழ்க் காங்கிரஸ் தனியாகச் செல்ல நேரிடும். கூட்டாக ஒரு கட்சியாகினால் யார் தலைவர், யார் செயலாளர் என்பதில் போட்டி ஏற்படும். இவற்றின் மத்தியில் முன்பு தமிழ்ச் சுயாட்சிக் கழகமாகி பின் ரெலோவின் அரசியல் ஆலோசகராக வந்து இப்போது பாராளுமன்ற உறுப்பினரான என். சிறிகாந்தா ரெலோவைத் தனிக் கட்சியாக்கிக் கொள்ள முயலுகிறார். இந்த எல்லாத் தமிழ்க் கட்சிகளுக்கும் தேர்தல் திணைக்களத்தில் அங்கீகாரம் ஏற்கனவே இருந்து வந்த முரண் நகையை என்னவென்று



சொல்வது. ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிரேமச் சந்திரன் ஏற்கனவே ஜனாதிபதியுடன் இருந்தவர் நெருங்கி, வவுனியாவிற்குச் சென்று திரும்பிய கூட்டமைப்பினர் திருப்தியும் நல்லெண்ணமும் தெரிவித்த செய்திகள் ஆங்கில ஊடகங்களில் வெளிவந்தன. அங்கு மக்கள் சந்தோசமாக இருப்பதாக ஒரு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. கூறியிருந்தார். அப்போது அண்மையில் இலங்கை வந்த தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியவை சட்டென நினைவுக்கு வந்தன. அது மட்டுமன்றி கூட்டமைப்பின் மற்றொரு பா.உ., கிசோர் சிவநாதன் அண்மைக் காலமாக அரசாங்க உயர் மட்டத்தினருடன் நெருக்கமாகி நின்று வருகிறார் என்பது பகிரங்கமான தாகும். இதன் உச்ச வெளிப்பாடாக ஜனாதிபதியின் பிறந்த தினத்திற்கு வாழ்த்துத் தெரிவித்து அலரிமாளிகையில் ஜனாதிபதியைக் கட்டித் தழுவவும் செய்தார்.

இவ்வாறு கூட்டமைப்பினர் எத் திசையில் செல்வது என்பது தெரியாது ஆளுக்காள் ஒவ்வொரு திசையில் செல்லத் தயாராகி வருகின்றனர். இதனிடையே இவர்கள் எல்லாம் தலைவர் இயக்கம் இருந்திருந்தால் இப்படிப் போயிருப்பார்களா எனப் புலம் பெயர்ந்த நாடு ஒன்றிலிருந்து பேசிய ஒரு தடித்த புலி ஆதரவாளர் அதே பழைய வன்முறைத் தொனியில் பேசியதையும் கேட்டுத் தொலைக்க வேண்டியிருந்தது.

இவை எல்லாம் தமிழரின் தலைவிதியா? இல்லை. பணம் பதவி அந்தஸ்து பழைவாதம் குறுந்தேசியம் என்பனவற்றின் தொடர்ச்சியாகும். இதனைத் தமிழ் மக்கள் அறுத்தெறியாது விட்டால் அதற்கான மாற்று அரசியலை தெரிந்திருக்காது விட்டால் வேதாளம் மறுபடியும் முருங்கையில் என்ற கதை தான் மிஞ்சும்.

- தமிழ்ப் பிரியன்

# சுவிஸ் போய் வந்த அரசியல் அகதிகள்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஏனைய தமிழர் தரப்பு தலைமைகளும் முஸ்லீம் பிரதிநிதிகளும் அண்மையில் சுவிஸ்லாந்து சென்றனர். அங்குள்ள அன்பர்களது அழைப்பின் பேரில் இவர்கள் அழைக்கப்பட்டனர். ஏன்? இங்கே வெட்டி விழுத்தாத எதையும் அங்கே போய் வெட்டி விழுத்தவா? விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்ற விடுதலையைக் கெண்டாடவா? அரசியல் அனாதைகளானோர் ஆளுக்காள் ஆறுதல் கூறவா? அல்லது அடுத்த தேர்தலுக்கு நிதி திரட்டவா? தமிழ் மக்களுக்கு பதில் செல்வார்களா.

# பட்டினிப் பூவுலகமா நாங்கள் வேண்டுவது?

உலகில் இப்போது 100 கோடிக்கும் மேலான மக்கள் (1.02 பில்லியன்) பட்டினியில் வாடுகின்றனா என்று ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்புக்களான ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியன அறிவிக்கின்றன. உலக மக்கள் தொகையில் ஆறில் ஒருவர் பட்டினியால் வாடுவதாக இவை தயாரித்துள்ள 'உலக உணவு பாதுகாப்பின்மையின் நிலை' (The State of Food Insecurity in the World) என்ற ஆய்வு கூறுகிறது. இதன்படி பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை ஓராண்டில் 100 மில்லியன் அதிகரித்துள்ளனர். உலகப் பட்டினியில் தீவிர அதிகரிப்பு மோசமான அறுவடை அல்லது இயற்கைப் பேரழிவுகளால் விளைந்தது அல்ல என்றும் அதிக உணவு விலைகள், பெருகிய வேலையின்மை மற்றும் சரிந்துள்ள வருமானங்கள் என்று மனிதனால் உருவாக்கப்பட்ட செயல்களாலேயே இவை ஏற்பட்டுள்ளது என அவ்வறிக்கை ஆய்வுபூர்வமாக விளக்குகிறது. அந்த அறிக்கை சொல்கிற பிரதானமான விடயங்கள் இவை தான்.

- 1.02 பில்லியன் மக்கள் தினமும் பட்டினியால் வாடுகிறார்கள் (உலகில் ஆறு பேருக்கு ஒருவர் பட்டினியால் தவிக்கின்றனர்).
- போசாக்கின்மையானது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2007இல் மேலதிகமாக 75 மில்லியன் மக்களும் 2008இல் மேலதிகமாக 40 மில்லியன் மக்களும் புதிதாக போசாக்கின்மைக்கு உட்பட்டிருக்கின்றனர்.
- வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டும் 907 மில்லியன் மக்கள் பட்டினியால் தவிக்கிறார்கள்.
- உலகில் பட்டினியால் அவதிப்படும் மக்களில் 60% பெண்களாகும்.
- உலகின் 65% வறுமையை வெறும் 7 நாடுகள் நிரப்புகின்றன. (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், எத்தியோப்பியா, கொங்கோ, சீனா, இந்தோனேசியா)
- உலகில் ஒவ்வொரு ஆறு செக்கனுக்கும் ஒரு குழந்தை பட்டினியால் மரணமடைகிறது.
- வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆண்டொன்றிற்கு 5 வயதுக்கு குறைவான 10.9 மில்லியன் குழந்தைகள் பட்டினியால் சாகின்றன.
- வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள குழந்தைகளில் 4 இல் ஒருவர் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றனர்.
- போசாக்கின்மையால் ஆண்டொன்று 9.7 மில்லியன் 5 வயதுக்கு குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள குழந்தைகள் இறக்கின்றன.
- விட்டமின் A குறைபாட்டினால் மட்டும் ஒரு மில்லியன் பிறந்த குழந்தைகள் ஆண்டொன்றுக்கு மரணமடைகின்றன.

இப்படி ஒரு உலகம் இருப்பது எம்மில் பலருக்குத் தெரிவதில்லை. ஊடகங்களும் அதை எமக்குச் சொல்வதில்லை. எமது அக்கறையெல்லாம் நேற்று நடந்த சின்னத்திரை தொடர்பற்றியதாகவோ, இன்று நடக்கின்ற கிரிக்கெட் போட்டி பற்றியதாகவோ அல்லது நாளை வெளியிடப்பட இருக்கும் திரைப்படம் பற்றியதாகவுமே இருக்கிறது. அவற்றில் கவனம் செலுத்துமாறே எமக்குச் சொல்லப்படுகிறது. உலகமோ பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறது. அந்நிலை மேலும் வளர்கிறது.

இவை இவ்வாறு இருக்க உலக உணவுத் திட்டத்திற்கு நாடுகளும் பிறரும் வழங்கும் உதவிகள் சரி அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் உணவு உதவி நடவடிக்கைகளை அரைவாசியாக்க வேண்டிய கட்டாயத்திற்கு உலக உணவுத் திட்டம் தள்ளப்பட்டுள்ளது. FAO வின தலைமை இயக்குனர் Jacques Diouf பின்வருமாறு சொல்கிறார் "பட்டினியை அழித்துவிடக்கூடிய பொருளாதார, தொழில்நுட்ப வழிவகைகள் நம்மிடம் உள்ளன. ஆனால் பட்டினியை என்றென்றும் அகற்றிவிட வேண்டும் என்னும் அரசியல் விருப்பு பெரிய உலக நாடுகளிடே துளியும் கிடையாது." எனவே பட்டினியை அழித்துவிடுவதற்கோ அல்லது பட்டினிக்கெதிராக போராடுவதற்கோ ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றியெல்லாம் வாய்கிழியப் பேசுகிற மேற்குலக நாடுகள் தயாரில்லை. அமெரிக்காவோ திவாலாகி கந்தறுந்து கிடக்கிறது. அமெரிக்காவில் 2007 இல் 36.2 மில்லியன் மக்கள் (இவற்றில் 12 மில்லியன் குழந்தைகள்) பட்டினியால் அவதிப்பட்டனர். இது பொருளாதார நெருக்கடி வருவதற்கு முன்பான புள்ளிவிபரம். பொருளாதார நெருக்கடியின் பின் இது இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்திருக்கிறது என அமெரிக்க விவசாயத்துறை மற்றும் கணக்கெடுப்பு அலுவலகம் கூறுகிறது. வேலையின்மை உலகில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. அமெரிக்காவில் கடந்த ஆறுமாதங்களில் சராசரியாக 67,000 பேர் மாதமொன்றுக்கு வேலை இழக்கிறார்கள். இது கடந்த ஒக்டோபர் மாதம் வேலையின்மை வீதம் 15.7%யால் அதிகரித்துள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) 2009இல் மட்டும் உலகில் 51 மில்லியன் பேர் தமது வேலையை இழப்பார்கள் என்று எதிர்வுகூறியுள்ளது.

பட்டினியும் போசாக்கின்மையும் நீண்டகாலப்பிரச்சனைகளை உருவாக்கக்கூடியவை. உணவின்மையால் மக்கள் தமது சுகாதாரத்திலோ, மருத்துவ வசதிகளையோ கவனிப்பதில்லை. அரசாங்கங்களும் பட்டினியை கவனத்தில் எடுக்கும் போது மருத்துவ சுகாதார வசதிகளை கவனத்தில் கொள்வதில்லை. மிகச்சாதாரண தீர்க்கக்கூடிய நோய்களாலெல்லாம் மக்கள் அநியாயமாக உயிரிழக்கிறார்கள். அதே வேளை கல்வி என்பது எட்டாக்கனியாகின்றது. மொத்தத்தில் மிகப்பெரிய சமூகஅவலத்தின் தோற்றுவாயாக பட்டினி இருக்கிறது. இவை எல்லாமிருக்கின்ற உலகில் தான் பல மில்லியன் டொலர்கள் செலவிலான விண்வெளிப்பயணங்களும், புதிய புதிய ஆயுதக் கண்டுபிடிப்புகளும் நடைபெறுகின்றன.

- அஸ்வத்தாமா -

# சீமானின் இனவெறிக் கூச்சல்

மும்பையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் நாம் தமிழர் என்ற தமிழர் அரசியல் அமைப்பின் துவக்கத்திற்கான பிரச்சாரத்தை ஆரம்பித்துப் பேசிய திரைப்பட இயக்குனர் சீமான், "பெரு மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அரும்புதல்வர் ராஜ் தாக்கரே ஐயாவை பார்த்தாவது நாம் திருந்த வேண்டும். மராட்டிய இனத்திற்காக அவர் எவ்வாறெல்லாம் போராடுகிறாரோ அதையெல்லாம் பார்த்தாவது நாம் இன உணர்வு கொள்ளவேண்டும்".

"சே குவேரா உருவம் பொறித்த டீ சர்டை ஆரம்பத்தில் நான் தான் அணிந்திருந்தேன்.அதை தமிழகத்துக்கும் நான் தான் அறிமுகம் செய்து வைத்தேன். பிறகு 'தம்பி' படத்தின் மூலம் கதாநாயகனையும் அணியவைத்து பரவலாக பிரபலமாக்கினேன்.எனது காரிலும் 'சே' ஸ்டிக்கர் தான் ஒட்டியிருந்தேன்.ஆனால் அவருடைய நாடு(கியூபா) இன்று சிங்களவனுக்கு ஆதரவாய் ஐ நா அவையில் வாக்களித்து விட்டது.எனவே அன்றிலிருந்து இந்த டீசர்டை அணிவது தவறு என்று உணர்ந்து அதை அணிவதில்லை."

"பாலஸ்தீனம், கொசாவா போன்று உலகம் முழுவதும் நடைபெறும் விடுதலை போராட்டங்களை ஆதரிக்கும் இந்தியா தமிழ் ஈழ விடுதலையை ஆதரிக்கவில்லை."


நாம் தமிழர் இயக்கம் சார்பாக திருப்பூரில் கடந்த 08-11-2009 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சீமான் "தமிழர்கள் தமிழீழத்திலும் தமிழகத்திலும் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், இங்கு சிங்களவர்கள் நிம்மதியாக பட்டப்படிப்புக்களை தொடர்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். ஒரு தமிழன் தாக்கப்பட்டால் இங்குள்ள சிங்களவன் மீது தாக்குதல் நடத்தி பதிலடி கொடுக்க வேண்டும்." இது தான் தமிழ்த் தேசியத்தின் வெறிப்பார்வையாகும்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தலவாக்கெல்லையில் அதியுயர் பாதுகாப்பு வலயம்



அந்த வீடுகள் அழகாகவும் நேர்த்தியாகவும் நிர்மாணிக்க ப்பட்டிருந்தன. தலவாக்கெல்லைக்கு பஸ்ஸில் போகும் போது அந்த வீடுகளை அவதானிக்கலாம். அவை மேல் கொத்மலை நீர் மறிப்பினால் வீடுகளை இழந்தோர்க்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை அந்த மக்கள் ஒவ்வொருவரினதும் கனவு இல்லமாக இருக்கலாம். இப்படி ஒரு வீட்டைக் கட்ட யார் தான் கனவு காணாமல் இருப்பார்கள்? வசிப்பதற்கான வீடு எல்லா மனிதர்க்கும் அவசியமாது தான். வீடுகள் கிடைத்த சந்தோஷத்தில் கண்முன் நடக்க இருக்கும் அநியாயத்தை யாவரும் மறந்திருப்பர்.

தலவாக்கெல்லை பிரசித்தமான சாதாரணமான நகரம். சந்தடி மிக்கதும் போராட்டங்கள் பல கண்ட இடமுமாகும். பீத்தறுவெவ தடுப்பு முகாம் படுகொலைக்கு எதிராயும் மேல் கொத்மலை நீர்மறிப்புத் திட்டத்துக்கெதிராயும் போராட்டங்கள் நடந்த இடம். மேல் கொத்மலை நீர்தேக்கத் திட்டதுக்கெதிரான மக்கள் இயக்கத்தின் மீது அரச காடையர்களின் தாக்குதல் நடந்த இடமும் அது தான். போராட்டங்கள் கைவிடப்பட்டதும் மக்கள் இயக்கத்தின் சிதைவும் திரும்பிப் பார்க்கப்பட வேண்டியவை. அதற்குக் காரணமான கருங்காலிகளையும் திட்டத்துக்கு ஆதரவாய்ச் செயற்பட்ட மலையகத் தலைமைகளை அம்பலப்படுத்துவதும் அவசியமாகும். அத் திட்டத்துக்கு, அந்த அழிவுச் செயலுக்குத் தமது உறுதியான எதிர்ப்பைக் காட்டும் நேர்மையான புரட்சிகர முற்போக்கு சக்திகள் இன்னும் இருக்கின்றார்கள்.

அத் திட்டத்துடன், தலவாக்கலையின் இயல்பு, 'அதியுயர் பாதுகாப்பு வலயமாக' மாற்றப்பட்டுள்ளது. எத்தனையோ அடக்குமுறைகளை கண்ட இடத்துக்கு இது புதிய விடயமல்ல. இனி அடக்கு முறைக்கு அரச அனுமதி உத்தியோக பூர்வமாகவே கிடைக்கும். மனிதர்களின் நடமாட்ட சுதந்திரம் கூட கேள்விக்கு உட்படுத்தப்படலாம். இதன் பாதிப்புக்களை இன்னும் சில காலத்தில் கண்கூடாகக் காணலாம். டெவன் நீர்த் தேக்கத் திட்டம் 1970களின் நடுப்பகுதியில் ஆரம்பித்து அண்மை வரை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்த திட்டமாகும். 1978ம் ஆண்டு அதற்கு எதிரான போராட்டத்தில் பொலிஸ் துவக்குச் சூட்டுக்கு இலக்காகி சிவனு லட்சுமணன் தியாகி ஆனான். கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலான மக்கள் போராட்டங்களின் மூலம் தடுத்து வைக்கப் பட்டிருந்த அத் திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு பாதி வேலைகள் முடிந்துவிட்டன. அரசு இதை மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டம் என பிரச்சாரப்படுத்திக் கொண்டிருக்கின்றது?. ஹட்டன் போகும் வழியில் மிகப்பெரிய கட்-அவுட்களும் வைக்கப்பட்டு இருக்கின்றன. யாருக்கான அபிவிருத்தி என்பது கேட்கப்படவேண்டிய கேள்வியாகும். மீண்டும் வீட்டு உரிமையாளர்களிடம் வருவோம். இவர்கள் அனைவரும் சந்தேகத்திற்கு இடமின்றி நல்ல வசதியான தமது தேவைகளை பூர்த்தி செய்து வாழ்வதற்கு உரிமை உடையவர்கள் ஆவார்கள். அவர்களது நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். இவ்வளவு நாளும் மலையகத் தலைமைகள் எனப்படுவோரும் அரசும் ஏறெடுத்துப் பாராத மக்களின் பால் திடீரென கரிசனை ஏற்பட்டு வீடு கட்டிக் கொடுத்த காரணம் அவர்கள் இத் திட்டத்தினால் வசிப்பிடங்களை இழந்தது மட்டுமல்ல. அந்த அழிவுகரமான செயலுக்கு எழக்கூடிய எதிர்ப்பை மழுங்கடிக்கவும் தான் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

அதே வேளை, மலையகத்தில் அதிகரித்தளவில் இடம் பெறும் மண்சரிவுகளுக்கும், நிலத்தடி நீர் பெரிதும் உறிஞ்சப்படுவதற்கும் காலநிலை மாற்றங்களுக்கும் தூண்டுதலாய் இருப்பவை பெரியளவில் நீரைத் தேக்கி வைத்தலாகும். பேராசிரியர்கள் பலர் இத் திட்டத்தின் நன்மை பற்றிச் சொல்லிப் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள். அதேபோல இதை விடச் செலவு குறைந்தளவில் கூடியளவு மெகாவாட் மின்சாரம் பெறக்கூடிய வழிமுறைகளையும் இதன் தீமைகள் பற்றிய எதிர்வு கூறல்களையும் பிரச்சாரப்படுத்திய, பிரச்சாரப்படுத்திக் கொண்டிருக்கும் முற்போக்கான கல்வியியலாளர்கள் சூழலியலாளர்களும் உள்ளனர். இவர்களின் கருத்துக்கள் மிகவும் சிந்திக்கத் தக்கன. அந்த எதிர்வு கூறல்கள் ஆவணமாக வெளிவருவது காலத்தின் தேவையாகும். நடக்கப்போகும் உண்மைகளின் ஆவணமாகவும் இருக்கும்.

பயிர் செய்யக் கூடிய வளமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் நீருக்குள் மூழ்கப்போகிறது. எதிர்காலத்திற்கு உணவு உற்பத்தியிலும் தேயிலை உற்பத்தியிலும் பாரிய பாதிப்பை இது ஏற்படுத்தும். பெறுமதியான இயற்கை வளங்கள் அனைத்தும் நீருடன் ஒன்றித்து ஒன்றுமில்லாமல் ஆகப்போகின்றன. இந்த அபிவிருத்திப் பணியின் போது எமது தலைமைகள் கூறித்திரிந்த வேலைவாய்ப்பு எமது இளைஞர் எத்தனை பேருக்கு கிடைத்ததோ தெரியவில்லை. அவர்களுக்கு என்றால் பலவிதமான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டு விட்டன. உண்மையில் இதனால் அபிவிருத்தியடையப் போவது ஜப்பான் நிறுவனம் தான்.

நிர்மாணப் பணிகள் யாவும் முடிவடைந்து இதன் செயற்பாடு தொடங்கியதும் இன்னும் பல பாரிய உண்மைகள் வெளிவரும். அப்போது அபிவிருத்தி என்று நம்பி ஏமாந்தவர்கள் போராடமல் விட்டதற்காகவும் இத்திட்டத்தைத் தடுக்காதற்காகவும் மிகவும் வருத்தப்படலாம். ஆயினும் அந்த வருத்தம் எந்தத் தீங்கையும் தடுக்கும் அளவிற்கு வலுவானது இல்லை. ஏதேனும் நிகழ்வின் மீது எழுப்பப்படும் நியாயமான கேள்வியும் நியாயமான பதிலைத் தரும். எந்த விடயத்தையும் கேள்விக்கு உட்படுத்துவதும் அதனூடாக அதன் தன்மையைப் புரிந்து கொள்வதும் தீங்குகளுக்கு எதிராய் எந்நேரமும் போராடுவதும் சமூக அக்கறை மிக்க உறுப்பினர் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். அபிவிருத்தி எனும் பெயரில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் அழிவுகளுக்கும் அதைச் செயற்படுத்தும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைவதும் வெகுஜன இயக்கங்களை கட்டி எழுப்பி போராடுவதும் தவிர்க்க முடியாததாகும்.

மலை ரோக்கன்

# பண்பாட்டுச் சீரழிவின் மிருகத் தோற்றம் என்.ஜீ.ஓ.களின் பங்களிப்பு

இலங்கைச் சமூகங்களில் அதிகரித்துவரும் குற்றங்கள் எம்மை அதிர்ச்சியடைய வைக்கின்றன. மலையகச் சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல. தற்போது சிறுவர்கள் மீதான பாலியற் குற்றங்கள் அதிகரித்துவிட்டன. கல்வி நிறுவனங்களும் இதற்கு விலக்கல்ல. பாடசாலை தொடங்கி பல்கலைக்கழகம் வரையிலும் இடம்பெறும் துஷ்பிரயோகங்களை உத்தியோக பூர்வமான உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் எமக்கு அறிவிக்கின்றன.

அண்மையில் அக்கரப்பத்தனைக்கு அண்மித்த பகுதியான தோர்ன்பீல்ட் (Thronfield) தோட்டத்துப் பாடசாலையில் 7 வயது நிரம்பிய 2ம் வகுப்பு மாணவி மீது புரியப்பட்ட பாலியல் குற்றம் அதிர்ச்சியடையக் கூடியதாக விருந்தது. சுமார் ஒன்றரை மாதத்திற்கு முன்பு குறிப்பிட்ட பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரால் மேற்படி சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அறியக் கிடைத்த தகவலின்படி குற்றம் புரிந்து கொண்டிருந்த போதே கையும் மெய்யுமாக பிடிபட்டார் என்றே கூறப்படுகிறது. அத்துடன் இவ்வாசிரியர் இன்னும் பல சிறுமிகள் மீதும் இவ்வாறு குற்றம் புரிந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. மேற்படி நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. பாடசாலையிலிருந்தோ கல்வித் திணைக்களத்திலிருந்தோ இதற்கெதிராக உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுத்ததாக அறிய முடியவில்லை.

சமூகத்தில் மதிக்கப்படுகிற உயர் அந்தஸ்த்தில் வைத்து நோக்கப்படுகிற ஒரு நபர் கல்வி தொடர்பாகவும் ஒழுக்கம் தொடர்பாகவும் வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டிய ஒரு நபரே மேற்படி குற்றத்தில் ஈடுபட்டுள்ளார். சில விடயங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியன. சமூகத்தில் சில விடயங்கள் பொதுப் புத்தியில் பதித்துள்ளன.

அவையாவன:

'குற்றமொன்று புரிபவர் சமூகத்தின் நோக்கில் சமூக மட்டத்தில் தாழ்ந்தவராக வறுமையில் பீடிக்கப்பட்டு பண்பாடு நாகரீகம் இல்லாதவராக இருப்பார். கல்வி வளர்ச்சி சமூகத்தை முன்னேற்றும்.

இந்த மாதிரியான குற்றமொன்று இடம்பெறும் போது குற்றத்தை அம்பலப்படுத்துவதிலும் அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதும் குற்றம் யார் மீது புரியப்பட்டதோ அவரை கேவலப் படுத்துவதாக அமையும்.

எப்போதும் குற்றம் புரிபவர் பற்றி நாம் நோக்கும் போது சமூகத்தில் இரண்டாந் தரப் பிரஜையாகவோ வறுமையில் பீடிக்கப்பட்டு பண்பாடு நாகரீகம் அற்றவராகவும் இருப்பார் எனும் கருத்து இவ்விடத்தில் எப்படியும் பொருந்தாது. இவர் ஒரு ஆசிரியர். சமூகத்தில் மதிப்பு மிக்கவர். ஏன் இவருக்கு இப்படி ஒரு மனவிகாரம் அல்லது வக்கிரம்? குழந்தையிடம் கூட தனது உடல் நமைச்சலை தீர்த்துக் கொள்ள இந்த மிருகத்தால் எப்படி முடியுமாகியது? பண்பாட்டு சீரழிவின் முகங்கள் எப்படி யெல்லாம் தோற்றம் காட்டுகின்றன.

நவகாலனித்துவ நுகத்தடியில் பயணிக்கும் நாட்டில் சீரழிந்த பண்பாட்டு அம்சங்களை திணிப்பது அவ்வளவு கடினமானதல்ல.எம் மூளைகளெல்லாம் தினமும் குரூரமான நினைவுகளுடனே அந்த சிந்தனைகளுடனேயே தொடர்பைக் கொண்டுள்ளன. ஊடகங்கள் திரைப்படங்கள் தினம் தினம் எதைப் பிரச்சாரப் படுத்துகின்றன என்பதைப் பார்த்தால் இது புரியும். எல்லோரையும் மன விகாரங்களாக்கி நுகர்வுக் கலாச்சாரப் பேயின் வாய்க்குள் எம்மை நாமே நுழைத்துக் கொள்கிறோம்.

கல்விகற்று சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொண்டால் அந்த சமூகம் முன்னேறும் என்பது எவ்வளவு அபத்தம் ஒரு ஆசிரியரே இப்படியென்றால் அவர் என்னத்தைப் படிப்பித்து கிழிக்கப் போகின்றார்கள். ஒட்டுமொத்த ஆசிரியர். சமூகத்தையும் நாம் சாடவில்லை. மலையகத்தின் கல்வி வளர்ச்சியில் அவர்களின் பங்கு அளப்பரியது. ஆயினும் இம்மாதிரியான புல்லுருவிகளைப் பிடுங்கியெறியவும் அவற்றை இல்லாமலாக்கவும் அவர்கள் போராட வில்லை. இந்த விடயத்தில் அந்த பாடசாலையின் சக ஆசிரியர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததாக அறிய முடியவில்லை. அந்தத் தோட்ட மக்களும் எதுவும் செய்யவில்லை.

இவ்வாறான குற்றம் இடம்பெற்ற போது குற்றம் யார் மீது புரியப்பட்டதோ அவருக்கு ஆதரவாக இருந்து குற்றத்தை அம்பலப்படுத்துவது சமூகப்பற்றுமிக்க மனிதநேயமிக்க மனிதர்களின் கடமையாகும். குற்றத்தை அம்பலப்படுத்துவது பாதிக்கப்பட்டவரை பாதிக்கும் அல்லது அவமானப்படுத்தும் எனும் கருத்தியலை பண்பாட்டுரீதியாக அடித்து நொருக்க வேண்டும். சமூகநீதியை நிலைநாட்ட போலீசை நம்ப வேண்டியதில்லை. அவர்கள் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் சமூக நீதியை நிலைநாட்ட எம்மிடமே சக்தி உள்ளது. அதை நடைமுறைப்படுத்த போராட வேண்டும்.

நம் ஊடகங்கள் இது தொடர்பாக எந்தவிதமான முக்கியத்துவம் கொடுக்கவில்லை. காத்திரமான எந்த விடயத்துக்கும் அவர்கள் முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள் என்பது வேறு விடயம். வக்கிரத்தை வளர்க்கும் நிகழ்ச்சிகளையாவது நிறுத்திக் கொண்டால் நன்று.

இந்த மாதிரி ஒன்றிரண்டாய் மேலெழும் குற்றங்கள் சமூகத்தின் அடிப்படையான பண்பாட்டு பிறழ்வின் காரணமாக ஏற்படுவது பண்பாட்டு ரீதியாக எம்மை சீர்படுத்திக் கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அத்துடன் இவ்வாசிரியர் மாதிரி மிருகங்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்பட வேண்டும்.

- கிட்டு -



**நமது இளந்தலை முறையினரிடையே பண்பாட்டுச் சீரழிவின் ஒரு பகுதியாக மதுபானப்பாவனை அதிகரித்து வருகிறது. அதனை ஊக்குவிக்கவும் இளைஞர்களை திட்டமிட்டே சீரழிக்கவும் என்.ஜி.ஓ.க்கள் என்பன தமது ஒன்று கூடல்களில் தாராளமாக மதுவகைகள் வழங்கி வருகின்றன. கொழும்பில் ஒரு என்.ஜி.ஓ நடாத்திய இளைஞர்களுக்கான ஒன்று கூடலில் இப்படி நடந்தது.**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 16 ஒக்ரோபர் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 126

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# பாழ் நரகத்தில் கூட்டணிகள் தீர்மானிக்கப்படுகின்றன

கூட்டணிகள் பலவிதம் ஆனாலும் தேர்தல் கூட்டணிகள் எல்லாமே ஒரு சில வகைகட்டுக்குள் அடங்கிவிடும். இலங்கை அரசியலில் யார் யாரெல்லாம் கூட்டணி அமைக்க வேண்டுமோ அவர்கள் உரிய நேரத்தில் கூட்டணி அமைக்காததாலே தான் இன்று நாடே கூட்டணிகளின் அரசியலால் நாறிக் கிடக்கிறது. இலங்கையின் இடதுசாரிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டும் பெரும்பான்மையினரின் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டிப் போராடக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பாராளுமன்றச் சந்தர்ப்பவாத அரசியல் பறித்து விட்டது. ஆனால் மக்களைச் சுரண்டிக் கொள்ளையடித்துத் தங்களை வளப்படுத்திக் கொள்கிறவர்களால் தங்கள் வர்க்கத்தை, அந்தச் சிறிய வட்டத்தின் நலன்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கூட்டணி அமைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. அந்தக் கூட்டணிகள் மூலம் ஆட்சியைப் பிடித்துக் கொள்ள முடிந்திருக்கிறது.

1947ம் ஆண்டு முதலாளிய நிலவுடைமை வர்க்கங்களைக் கொண்ட ஒரு கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியாக உருவாக்கப்பட்டது. அதில் ஏற்பட்ட உட்பூசலால் பிரிந்து சென்ற ஒரு முதலாளியக் கட்சி பொதுமக்களுடைய அதிருப்தியைப் பயன்படுத்தி ஒரு கூட்டணி அமைத்து 1956ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்தது. அதன்பின்பு ஆட்சியைப் பிடிக்கப் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் கூட்டணிகள் ஏற்படுத்தப்பட்டன. 1977ம் ஆண்டு யூ.என்.பி ஆட்சி அதில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. அந்த ஆட்சி 1994ம் ஆண்டு முறியடிக்கப்படும் வரை யூ.என்.பி ஆட்சியே இருந்தாலும் பிற கட்சிகளில் இருந்து கட்சி தாவியும் கட்சியாகவே இணைந்தும் சிலர் அரசாங்கத்தில் பங்கு பற்றினாலும் ஒரு கட்சி அரசாங்கமே நிலைத்து வந்தது. 1994ல் யூ.என்.பியை முறியடிக்க ஒரு கூட்டணி உருவானது முதலாக இந்த நாட்டில் ஏதோ வகையான கூட்டணி ஆட்சிகளே நடந்து வருகின்றன.

1980கள் வரை சிங்கள அரசியற்கட்சிகளிடையே சிறிதளவேனும் எத்தகைய கட்சிகள் ஒரு கூட்டணியில் இருக்கும் என்று கூறக் கூடியவாறு இருந்தது. பேரளவிலானது ஒரு இடதுசாரித் தோற்றமும் ஏகாதிபத்திய விரோதத் தோற்றமும் இருந்து வந்தன. தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் அவர்களிலும் குறைந்த அளவுக்குத் தெற்கில் வாழ்ந்து வந்த தமிழர்கட்கும் ஏதாவது தென்னிலங்கைக் கட்சி அடையாளம் இருந்தது. எனினும் கிழக்கிலங்கை முஸ்லிம் அரசியல் வாதிகளும் மலையக அரசியல்வாதிகளும் எப்படியாவது ஆளுங்கட்சிக்குத் தம்மை நெருக்கமாக்கிக் கொள்ள முற்பட்டு வந்தன. 1980களில் இது யூ.என்.பியுடனோ சில சுதந்திரக் கட்சியுடனோ தனிப்பட்ட முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் போய் ஒட்டிக் கொள்வதாகத் தொடங்கிப் பின்னர் கட்சிகளே போய் இணைவதாகிப் பின்பு கட்சிகளை உடைத்துக் கொண்டே ஒடுவதாக விருத்தி பெற்றது. தமிழ் அரசியற் கட்சிகளுக்கு அத்தகைய வாய்ப்பைப் போர்ச் சூழல் மறுத்தது. எனினும் விடுதலை புலிகளின் ஆணையின் பேரிலான வாக்களிப்புத் தடை ஈ.பி.டி.பிக்கு ஆளுங்கட்சிக்குப் பெரும்பான்மைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது அதன் பின்பு ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற வலிமை குறைந்தாலும் அது எப்படியும் ஆளுந்தரப்பிலேயே தன்னை வைத்துக் கொண்டது.

இந்தச் சீரழிவுக்குப்பின்பு, ஏறத்தாழ எவருமே எந்தக் கட்சிக்கும் தாவலாம் என்கிற ஒரு நிலவரமாகியது. அதைவிட மோசமாக, யூ.என்.பியும் விடுதலைப் புலிகளும் தமது பேச்சு வார்த்தைகளைப் பயனுள்ள திசையில் முன்னெடுக்காததன் விளைவாக இன்று நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்தாலும் போரின் முடிவு சிங்கள மக்கள் நடுவே ஒரு வெற்றிக்களிப்பு மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் நடுவே அரசியல் பற்றிய ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் போரின் வெற்றிக் கொண்டாட்டங்கள் போய் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் சட்டம் ஒழுங்கு பற்றிய கவலைகளையும் ஊழலையும் பிற விடயங்கள் பற்றி மக்களின் கவனம் திரும்புவதற்கு முன்னரே அரசியல் அதிகாரத்தை இறுகத் தன் வசமாக்க ஜனாதிபதி ராஜபக்ச தேர்தல்களை நடத்தத் திட்டமிடுகிறார். அதற்கான வெள்ளோட்டங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் அமைந்தன.

யூ.என்.பியின் விரக்தியும் தம்மை யூ.என்.பியுடன் அடையாளப்படுத்தினாலே எதிர்காலத்தில் அரசியற் பிழைப்பைத் தொடர இயலும் என்று சிந்திக்கிற கட்சிகள் இப்போது யூ.என்.பியுடன் ஒரு 16 கட்சிக் கூட்டணியாகியுள்ளன. இதில் பெரும்பான்மையானவை சிங்களப் பேரினவாத உதிரிக் கட்சிகள். தேர்தலை வெல்வதற்கு யூ.என்.பி வேட்பாளர் எவருக்கும் இயலாத நிலையில் இந்தக் கூட்டணியும் ஜே.வி.பியும் ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நிறுத்தி ராஜபக்சவை மறுபடி ஜனாதிபதியாகாமல் தடுக்க முனைகின்றன. நாட்டை எந்தச் சர்வாதிகாரியிடம் ஒப்படைப்பது என்பது தான் மக்கள் முன்னுள்ள தெரிவாகிவிடக் கூடிய ஒரு சூழ்நிலையையே இரண்டு தரப்புக்களும் உருவாக்கியுள்ளன. இந்த அழகில் சரத்பொன்சேகாவுக்கும் தமிழருக்கும் இடையே பொதுவாக ஒன்றுமே இல்லை என்று வீர வசனம் பேசிய மனோ கணேசன் இப்போது சரத்பொன்சேகாவுக்கு இணங்கிப் போவதற்கான பாதை அமைக்கத் தொடங்கிவிட்டார். தான் முன்வைத்துள்ள பத்து நிபந்தனைகள் என்ற பேச்செல்லாம் கக்கின சொற்களை எல்லாம் விழுங்குவதற்கான அவலமான முயற்சிகள் தான். தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்த யூ.என்.பி தொழிற் சங்கத்துடனான கூட்டமைப்பிலிருந்து விலகத் தயங்கிய வீராதி வீரரல்லவா. ரவூப் ஹக்கீம் எப்படி இலங்கையில் சிங்கள இனம் மட்டுமே உள்ளது என்று சொன்ன சரத் பொன் சேகாவைக் கிழக்கின் முஸ்லிம்கட்கு விற்பார் என்று தெரிய வில்லை. சங்கடமானது மட்டுமல்ல பரிதாபகரமானதுமான ஒரு நிலைமை இது.

அது பரிதாபம் என்றால் ஆறுகட்சிச் சிறுபான்மைக் கூட்டணியின் நிலைமை அதைவிடப் பரிதாபமானது. விடுதலை புலிகளின் தோல்வியால் அனாதரவாகிவிட்ட தமிழ்த்தேசிய முன்னனி இப்போது தன்னை ஒரு கட்சியாக்கப் பார்க்கிறது. அதில் இணைந்திருந்த ஒவ்வொரு கட்சியும் செயலிழந்து பல ஆண்டுகளாகி விட்டது. இப்போது ஜனாதிபதி வீட்டுக்கு முன் வாசலாற் போவதா பின் வாசலாற் போவதா என்று தங்களுக்குள் விவாதித்துக் கொண்டு அரசாங்கத்தையும் பகைக்காமல் தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றுவதற்கு வழி தேடிக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டமும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ள நிலையில் வாடுகிற அரசாங்க ஆதரவுத் தமிழ்க் கட்சிகளும் கட்சிகளும் பிரமுகர்களும் இந்தப் பரிதாபமான கூட்டணியில் உள்ளனர். முஸ்லிம் காங்கிரசும் ஆண்டுக்கு ஒரு பேர் வைத்துக் கொள்ளும் மனோ கணேசனின் கட்சியும் இந்த ஆறு கட்சிக் கூட்டத்தில் அடக்கம்.

போர் முடிவதற்கு முன்பே மாக்சிச லெனினிசவாதிகள் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அமைப்புக்கள் கூட்டாக இயங்க வேண்டிய தேவையையும் சனநாயக தேசிய இன உரிமைக்கான ஒரு பரந்துபட்ட முன்னணி பற்றியும் பேசி வந்தனர்.

தொடர்ச்சி 9 பக்கம்

# இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகளும் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியும்

**வெகுஜனன்**

கடந்த 5/19ல் முப்பது வருட யுத்தம் மிகக் கொடூரமான முறையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. நான்கு படையணிகளையும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் தம்மகத்தே கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கமும் தோற்கடிக்கப்பட்டு அதன் தலைமையும் அழிக்கப்பட்டது. இதன் எதிரொலி தெற்கே பெரு வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. இந்த வெற்றிக் களிப்பில் ஏதோ பல்லாயிரம் சிங்கள மக்கள் கலந்து கொண்டதாக எவரும் கூற முடியாது. அரசாங்க ஆதரவாளர்களும் பேரினவாதக் கடும் போக்காளர்களும் மட்டுமே கலந்து கொண்டு பெரும் பிரசாரமாக்க முன்னின்றனர். ஆனால் சிங்களச் சாதாரண மக்களிடையே புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டதில் ஒருவகையான வரவேற்பு அவர்களில் இருந்தது. அதற்குரிய ஏற்கத்தக்க காரணங்களையும் அவர்கள் கொண்டிருந்தனர். சிங்கள மக்களைப் பொறுத்தவரை அதனை ஒரு நல்ல முடிவும் நல்ல செய்தியும் என்பதற்கு அப்பால் இனவெறிக் கூத்தாடி வீதியில் இறங்கி தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கவில்லை. அவ்வாறான சம்பவங்களைத் தென்னிலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களிடம் இருந்து கேட்கவும் முடியவில்லை. ஆனால் புலம் பெயர்ந்த தமிழ்க் குறுந்தேசியவாதிகளின் பரப்புரைகளில் இட்டுக்கட்டிய செய்திகள் வந்துள்ளன. இவ்விடத்திலே தான் சாதாரண சிங்கள மக்களையும் பேரினவாதக் கருத்தியற் சிந்தனை நடைமுறையாளர்களையும் பிரித்துப் பார்க்க வேண்டும். பேரினவாதிகள் சிங்கள மக்களை மேய்ப்பவர்கள். சிங்கள மக்கள் மேய்க்கப் படுபவர்கள்.

யுத்தத்தின் வெற்றியையும் புலிகளின் தோல்வியையும் கொண்டாடிய பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினர் அரசாங்கப் பக்கத்திலும் இருந்தனர். எதிர்க் கட்சிகளிலும் இருந்தனர். அரசு யந்திரத்தின் நிர்வாக மட்டங்களிலும் காணப்பட்டனர். ராணுவத்திலும் ஏனைய படையணிகளிலும் இருந்தனர். இவர்கள் எல்லோரிடமும் காலிமுகராணுவ வெற்றிக் கொண்டாட்ட விழாவை ஒரு சுதந்திரமான அணிவகுப்பு போன்று நடாத்திக் கொண்டதுடன் வெவ்வேறு பிரதேசங்களில் ராணுவத்திற்கு வரவேற்புகளும் நடாத்தினர். பள்ளிப் பிள்ளைகளுக்குப் பௌத்த மத பிக்குகளுக்கும் ராணுவ வெற்றியை வரலாற்று வெற்றி என ஏற்குமாறு நிர்ப்பந்தப் படுத்தும் நிகழ்வுகளை நடாத்தினர். அதன் ஊடே அரசாங்கத் தரப்பு தமது இழப்பையும் எதிர்காலத்தையும் உறுதிப் படுத்தியது. எதிர்க் கட்சிகள் அவற்றை விமர்சிக்கத் தயாரில்லாது ராணுவ வெற்றியைப் போற்றியும் அரசாங்கத்தின் வழிகாட்டல் பற்றிய மௌனத்தையும் காட்டினர். இதே நிலையில் எதிர்க் கட்சியானது அரசாங்கப் பக்கத்தில் இருந்திருந்தால் தற்போதைய அரசாங்கம் செய்து கொண்டதையே அவர்களும் செய்திருப்பார்கள். யுத்தத்திற்குப் பறையடித்த ஜே.வி.பியும் இதற்கும் மேலாக வெற்றிவிழா நடாத்தியிருப்பார்கள்.

இவ்வாறு ராணுவ வெற்றியில் ஒரே திசை நோக்கி நின்ற சிங்கள பௌத்த பேரினவாதிகளிடையே ஆறு மாதங்கள் முடிவடைவதற்குள் நீயா நானா வெற்றியின் நாயகன் என்ற கர்வம் கூட்டிக் கொள்ளும் பெரும் போட்டி ஆரம்பமாகி இருக்கிறது. யுத்தத்தின் வெற்றிக்கும் புலிகளை அழித்ததிற்கும் வெண் உடை தரித்தவர்களா அல்லது சீருடை தரித்து தலைமை தாங்கியவர்களா காரணம் என்ற வாதமும் போட்டியும் எழுந்துள்ளது. மகிந்த சிந்தனையா? அல்லது சரத் வல்லமையா? என்ற வாதத்தை மையமாகக் கொண்ட கருத்துக்கள் விவாதிக்கப்பட ஆரம்பித்துள்ளன. இவை இந்த நாட்டில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் தேசிய இனங்களின் ஐக்கியத்தையும் மையப்படுத்திய ஒரு விவாதம் அல்ல என்பது தெளிவானதாகும். இவ் விவாதத்தின் சாராம்சம் ஆட்சி அதிகாரம் பற்றியதேயாகும். இது ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்குமிடையிலான ஒன்றல்ல.

இப்பொழுது இலங்கையில் ஜனநாயக ஆட்சி என்பதற்குரிய எந்தவொரு எச்சமும் இல்லாது போய் விட்டது. 1978ல் ஜே.ஆர். ஆரம்பித்து வைத்த வெண் உடைச் சர்வாதிகாரமே இடம்பெற்று வந்துள்ளது. அதன் ஊடே ராணுவ மயப்பட்ட சிந்தனை வளர்க்கப்பட்டது. இன வர்க்க ஒடுக்குமுறைக்கு ராணுவம் பயன்படுத்தப்பட்டது. கடந்த முப்பது வருட தேசிய இனப்பிரச்சினையில் இன ஒடுக்குமுறையை முன்னெடுக்க ராணுவச் சிந்தனை வெண் உடைச் சர்வாதிகாரச் சிந்தனையுடன் சேர்ந்து செயல்பட்டது. இதே பாணியிலான நடைமுறைதான் 1971லும் 1988-89லும் தெற்கே வர்க்க முரண்பாட்டால் எழுந்த எழுச்சியை ஒடுக்கப் பின்பற்றப்பட்டது. அதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் சிங்கள இளைஞர் யுவதிகளும் மக்களும் பலிகொள்ளப்பட்டனர். அவை யாவும் பாடம் படிக்கப்படாத வரலாற்று நிகழ்வுகளாகும். இலங்கையில் சிங்கள மக்களாயினும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களாயினும் வரலாற்றிலிருந்து அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் பட்டறிவு கொள்ளவோ மாற்று அரசியல் சிந்தனைகளுக்கு உட்படவோ கணிசமான பகுதியினர் கூட முன்வரவில்லை. இது சிந்தனைக்கும் ஆய்வுக்கும் செய்யப்பட வேண்டிய அரசியல் முன்னெடுப்புகளுக்கும் அவசியமான தொன்றாகும். அவை பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் பற்றிய மயக்கம், அந்த மயக்கத்தை வைத்தே நிலவுடைமை வழிவந்த முதலாளித்துவ சக்திகளின் அரசியல் ஏமாற்று அந்த ஏமாற்றுக்கு மக்களிடையே பிளவு நிலையை உருவாக்கி நிரந்தரமாக்கும் தேசியவாதப் பிற்போக்குத் தனங்கள் ஏகாதிபத்தியத்தையும் இந்திய பிராந்திய மேலாதிக்கத்தையும் நம்பி மோசம் போதல் போன்ற முக்கிய விடயங்களில் தெற்கிலிருந்து வடக்குவரை ஒரே விதமான போக்கே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இன்றும் இவை முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றன் மத்தியிலேயே இப்பொழுது இலங்கையின் ஆளும் வர்க்கமாக உள்ள பௌத்த சிங்கள மேட்டுக்குடி சக்திகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. அதிகாரத்தைத் தக்கவைத்து நீடிக்க ஒரு பிரிவும் அதனைத் தேர்தல் என்பதற்கு ஊடாகக் கைப்பற்றிக் கொள்ள மற்றொரு பிரிவும் போட்டியில் இறங்கியுள்ளன. ஒன்று மகிந்த ராஜபக்ஷ தலைமையிலும் மற்றையது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலும் அணிவகுத்து நிற்கின்றன. இவர்கள் இரு தரப்பும் இலங்கையின் சொத்து சுகம் அனுபவிக்கும் மேட்டுக்குடி முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதிகளே யாவர். அவர்களது அரசியல் மக்களுக்குரிய ஜனநாயக அரசியல் அல்ல. முற்றிலும் முதலாளித்துவ அரசியலேயாகும். இவர்கள் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் நம்பிக்கைக்குரிய ஆளும் வர்க்கத்தினராவார். அதனாலேயே இரு தரப்பினரும் ஏகாதிபத்திய உலக மயமாதலை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதில் தொடர்ச்சியை முன்னெடுத்தும் வந்தனர்.

இத்தகைய இருதரப்பு ஆளும் வர்க்க சக்திகளிடையே இந்திய பிராந்திய மேலாதிக்க சார்பும் அமெரிக்க மேற்குலக மேலாதிக்க சார்பும் இருந்து வருகிறது. ஐக்கிய தேசியக்கட்சியானது அமெரிக்க மேற்குலக விசுவாசியாக நீடித்து வந்துள்ளது. அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்பு இந்திய மேலாதிக்க சார்பாகி இப்பொழுது முற்று முழுதான இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் நம்பகரமான கூட்டாளியாகவும் ஆகிக் கொண்டது. இத்தகைய பின்னணியிலேயே அண்மைய வருட யுத்த சூழலில் காய்கள் அரசியல் ராணுவ நிலைகளில் நகர்த்தப்பட்டன. இதனால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் இருந்து வந்த அமெரிக்க இந்திய கெடுபிடியானது தமிழ் மக்களுக்கு அழிவாகவும் இந்திய மூலதன ஊடுருவலுக்கு வழிவகுப்பதாகவும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையை விழுங்கி வரும் இந்திய ஆளும் வர்க்க மூலதனம்

இந்தியா இலங்கை இடையே 1998 இல் கையெழுத்தான இந்திய சிறீலங்கா சுதந்திரம் வர்த்தக ஒப்பந்தம் (ISLFTA) தான் அதுவரை போடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களிலேயே பொருளாதாரத் தன்மை கொண்டதாகும். பொருளாதார ஒருங்கிணைப்பே இதன் அழுத்தமாக இருந்தது. மார்ச் 2000 இல் இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்ததிலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்து கொண்டேயிருந்தது தான் இந்தியா - இலங்கை இடையிலான உறவின் முதுகெலும்பாக மாறியது. இந்த உறவு ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் புதிய மட்டங்களை எட்டியது.

இரு நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதியில் வரிகளற்ற முறையைப் புகுத்துவது முன்னுரிமை தரப்படும் பொருட்களுக்கு வரிக்குறைப்பு ஆகிய முறைகள் மூலம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சுதந்திர வர்த்தகப் பகுதியாக உருவாக்குவது என்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்திய முதலீடுகள் இலங்கையில் அதிகரித்தன. வர்த்தகமும் பெருகியது. 2006 இல் மொத்த வர்த்தக அளவு 260 கோடி டாலர்களுக்கு உயர்ந்தது. இது பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த அளவை விட ஐந்து மடங்கு அதிகமாகும். 1990 களில் இந்திய முதலீடு 40 இலட்சம் டாலர்கள் என்ற அந்த அளவிலிருந்து 2006இல் 1500 இலட்சம் டாலர்களாக உயர்ந்தது.

2006ல் ஆண்டில் சார்க் நாடுகளில் இந்தியா செய்திருந்த மொத்த முதலீடுகளில் பாதி இலங்கையில் மட்டும் செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் இலங்கையின் நான்காவது பெரிய முதலீட்டாளராக இந்தியா உயர்ந்தது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement) 1998 இல் இந்திய - இலங்கை அரசுகளிடையே கையெழுத்தானது. மார்ச் 2000 முதல் அமலுக்கு வந்தது. 2000ம் ஆண்டில் 658 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்திய - இலங்கை வர்த்தகம் 2007 இல் 3266 மில்லியன் டாலராக (7 ஆண்டுகளில் 5 மடங்கு) அதிகரித்தது. இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஆறில் ஒரு பங்கு (16.8வீதம்) இந்தியாவுடன் நடக்கிறது. (1 மில்லியன் 10 இலட்சம் இந்திய ரூபாய் கணக்குக்கு 50 ஆல் பெருக்குக).

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் பெரிய வர்த்தகப் கூட்டாளியாக இலங்கை உருவெடுத்தது. உலக அளவில் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இந்தியா மாறியது. இலங்கையின் நான்காவது பெரிய முதலீட்டாளர் இந்தியா. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதியின் அளவு 2800 மில்லியன் டாலர்கள். இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி 516.5 மில்லியன் டாலர்கள். இலங்கை முதலீட்டு வாரியத் தலைவர் ஆர். வாதவாலா, அமலுக்கு வர இருக்கும் 'சிபா' (CEPA) மூலம் இருநாட்டு வர்த்தகம் மேலும் விரிவடையும் என்றும், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியாவுக்கு அதியுயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறினார். செப்டெம்பர் 2006 இல் இந்தியா-இலங்கை தொழில் வர்த்தகக் கழகத்தை இந்திய நிதி அமைச்சர் தொடங்கி வைத்தார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன. 2007இல் இந்தியாவின் மொத்த முதலீடு மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

சார்க் பிராந்தியத்திற்குள் இந்திய முதலாளிகள் தங்களது நேரடி முதலீட்டிற்கான முன்னுரிமை தரும் நாடாக இலங்கை இருக்கின்றது. இந்த பிராந்தியத்திற்குள் இந்திய முதலாளிகள் பிறருடன் வைத்திருக்கும் கூட்டு நிறுவனங்கள் இந்தியர்கள் முழுவதும் உடைமை கொண்டுள்ள துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் 50வீதத்திற்கு மேல் இலங்கையில் தான் உள்ளன. பிராந்திய அளவில் கூட்டு நிறுவனங்களில், இந்தியக் கம்பெனிகள் செய்துள்ள முதலீடுகளில் 54வீதம் இலங்கையில் செய்யப்பட்டுள்ளன. 1991இல் இலங்கை ரூபாயில் 74 கோடி மதிப்புள்ள 23 திட்டங்களுக்கான முதலீடுகள் வெளியிலிருந்து வந்தன. இது 2000 இல் 1250 கோடி ரூபாய்கள் உயர்ந்தது (150 திட்டங்கள்).

இலங்கையின் முதலீடுகளை ஈர்த்த முக்கிய துறைகள் இரும்பு, சிமெண்ட், ரப்பர் பொருட்கள், சுற்றுலா, கணனி மென்பொருள், தகவல் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் பிற தொழில் முறைச் சேவைகள். இலங்கையில் அண்மைக் காலமாக முதலீடு செய்துள்ள சில முன்னணி இந்திய நிறுவனங்கள் குஜராத், அம்புஜா, ஏசியன் பெயின்ட்ஸ், லார்சன் அண்டு டுப்ரோ, டாடா இன்ஃபோடெக் ஆப்டெக் லிமிடெட், பெங்கால் வாட்டர் ப்ரூஃப் லிமிடெட் கல்கத்தா, சிரீ இஷார் குருப் இன்டோர் நீல்கமல் பிளாஸ்டிக்ஸ் மும்பை குஜராத் கிளாஸ் லிமிடெட் என்ஐஐடி அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ், அன்சால் ஹவுசிங் கன்ஸ்ட்ரக்சன் லிமிடெட், மகிந்திரா பிரிட்டிஷ் டெலிகாம். இவையன்றி சியட் கம்பெனியும் தாஜ் ஹோட்டல்ஸ் நிறுவனமும் தங்களது செயல்பாடுகளை விரிவாக்கி வருகின்றன.

மொத்தத்தில் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் அன்னிய முதலீடுகளில் பாதிக்கு மேல் இலங்கையில் செய்யப்பட்டுள்ளது. மேற் கூறிய விவரங்கள் எல்லாம் ஒரு புதிய பரிணாமத்தின் தொடக்கம் மட்டுமே.

துறைமுகம், ரயில்வே, மின் உற்பத்தி மற்றும் விநியோகம் பெட்ரோலியத் துரப்பணம், கனிவரளம், சுற்றுலா, கல்வி மருத்துவம் ஆகிய எல்லாத் துறைகளிலும் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. தொலை தொடர்புத் துறையிலும் ஐ.டி.பி.பி.ஓ துறையிலும் அபரிதமான முதலீட்டு வாய்ப்புகள் அவதானிக்கப்பட்டு முதலீடுகள் மும்முரமாகியுள்ளன. இலங்கை முன்மொழிந்த இந்தியா - இலங்கை இடையிலான பாலம் அமைப்பு பரிசீலனையில் உள்ளது.

எனினும், இலங்கையில் சீன முதலீடு 10 மடங்கு அதிகரித்துள்ளது. இது இந்தியாவுக்கு உறுத்தலாகவே உள்ளது. இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதியும் செழித்து வளர்ந்தது. வர்த்தக உடன்பாடுகள் இலங்கைக்கு மிகமிகச் சாதகமாகப் போடப்பட்டிருந்தன. வர்த்தக ஏற்றத்தாழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவை இவை. ஒப்பந்தம் போட்டதற்குப் பின் இரு ஆண்டுகளிலேயே இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதி 342 வீதம் அதிகரித்தது. குஜ்ரால் கோட்பாடுகளின் (Gujral principles) கீழ் இலங்கைக்கு அளிக்கப்பட்டிருந்த மிகவும் சாதகமான

தொடர்ச்சி 2ம் பக்கம்

## கல்வி மறுக்கப்பட்ட கலைமதிக் கிராமத்தில் இரண்டு மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தி

இப் படங்களில் காணப்படும் செல்வன் கிருஷ்ணமூர்த்தி ஜிஷாகரன், செல்வி கனகலிங்கம் கலீஸ்ரா ஆகிய இருவரும் இவ்வாண்டு புலமைப் பரீட்சையில் முறையே 154, 142 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்கள். மாணவன் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியிலும் மாணவி சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையிலும் கல்வி கற்பவர்கள். இவர்கள் இருவரையும் ஏன் புதிய பூமி குறிப்பாகச் சுட்டிக் காட்டி படங்களுடன் செய்தி வெளியிடுகிறது என்பது வியப்பாகவோ அன்றி வினாவாகவோ சிலருக்கு இருக்கலாம். ஏனெனில் இன்றைய கல்வித் திட்டம் அதில் புலமைப் பரீட்சை பற்றி புதிய பூமி ஒரு போதும் சாதமாகக் கருத்து வெளியிட்டதில்லை. அப்படி இருக்க இச் செய்தி வெளியிடுவதற்கு நியாயமான காரணம் இருக்கிறது.

வட புலத்தில் புத்தூர் கிராமம் நிலவுடைமைக்கும் அதன் கீழான சாதியத்திற்கும் பெயர் பெற்ற கிராமம். அதனால்



ஆண்டாண்டு காலம் சாதிய வர்க்க ஒடுக்கு முறையின் கீழ் மக்கள் கொடுமைகளுடன் நடாத்தப்பட்டு வந்தனர். அவ்வாறான கிராமப் பகுதியே கலைமதிக் கிராமமாகும். அதனை முன்பு வேம்பிராய் என்றே அழைக்கப்பட்டு வந்தது. அக்கிராமம் சகல நிலைகளிலும் ஒதுக்கப்பட்டு அடக்கப்பட்டு சாதிய ஒடுக்கு முறை கொடிகட்டிப் பறந்த கிராமமாக இருந்து வந்தது. அதனால் அக்கிராமத்திற்கு அண்மித்ததாக ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அமைந்திருந்தும் அங்கு அம் மக்களின் பிள்ளைகளுக்கு கதவுகள் இறுகப் பூட்டியே வைக்கப்பட்டு வந்தன. அதனால் இக் கிராமப் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியைக் கூடப் பெற முடியாதிருந்தனர். ஓரிருவர் கிறிஸ்தவ பாடசாலையில் எழுத வாசிக்க மட்டும் படித்தனர். அங்கே கூட நிலத்திலிருந்தே படிக்க முடிந்தது. இந்தக் கல்வி மறுப்பால் எண்பதுகள் வரை மாணவர்கள் அக் கிராமத்திலிருந்து முறையான கல்வி பெற முடியவில்லை. அவ்வாறெனில் ஒருவர் தானும் நடுத்தரக் கல்வியைப்பெற முடியவில்லை. ஓரிருவர் இருப்பின் வேறு பகுதியில் சென்று படித்தவராகவே இருப்பர். எவ்வாறாயினும் கல்வி இன்மையால் அக்கிராமம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு வந்தது.

இக் கிராமத்தில் எழுபதுகளின் இறுதியில் பொதுவுடைமைவாதிகள் காலடி எடுத்து வைத்த பின்பே மக்கள் தம் நிலை உணர ஆரம்பித்தனர். சோதிய அநீதிக்கு எதிராக சமூக விழிப்புணர்வுக்கு உள்ளாகி மக்கள் எழுச்சி பெற்றனர். தமக்கானவற்றை பெறவும் தம்முள் ஐக்கியப்படவும் புதிய ஜனநாயகக் கட்சியும் அதன் செங்கொடி உயர்த்திய அரசியலும் அங்கு வழி காட்டியது அதனால் வரலாற்றில் அன்று வரை ஏற்படாத மாற்றங்களை மக்கள் காண முடிந்தது. வெகுஜனப் போராட்ட மார்க்கமும் அதில் மக்கள் திரளின் எழுச்சியும் அடிநாதமாக அமைந்திருந்தன.

சோமாஸ்கந்த கல்லூரியில் அனுமதி வென்றெடுக்கப்பட்டது மட்டுமன்றித், தொடர்ந்து மாணவர்களிடையேயும் பெற்றோரிடமும் கல்வி ஆர்வம் தூண்டப்பட்டது. அதே வேளை கல்லூரியில் இம் மாணவர்களுக்கு காட்டப்பட்டு வந்த பாரபட்சங்கள் ஒதுக்கல்களுக்கு எதிராக தொடர்ந்து போராட வேண்டியேற்பட்டது. அதன் விளைவாக க.பொ.த.(சா), க.பொ.த (உ) வரை மாணவர்கள் படிக்கும் நிலை கொண்டு வரப்பட்டது. ஆனால் எவரும் பல்கலைக்கழகம் செல்ல வில்லை.

இச் சூழலில் கஷ்டங்கள் வாழ்க்கை நெருக்கடிகள் மத்தியில் சாதாரண அன்றாட உழைப்பில் வாழும் அடி மட்டக் குடும்பத்திலிருந்த இரண்டு மாணவர்கள் இப்புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தமை அக் கிராமத்தையும் மக்களையும் பெற்றோரையும் பொறுத்த வரை பெரிய தோர் விடயமேயாகும்.



வாய்ப்புகள் சமமாகவும் நீதியாகவும் வழங்கப்பட்டால் சாதாரண உழைப்பாளிகள் சாதியத்தால் அடக்கப்படுவோர் மத்தியிலான சிறுவர்களாலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியும் என்பதற்கு ஒரு உதாரணமாக இவ்விரு மாணவர்களும் உள்ளனர். இவர்களைப் புதிய பூமி உற்சாகப்படுத்தி வாழ்த்துகிறது. இதன் மூலம் ஏனைய மாணவர்களும் உற்சாகமும் அக்கறையும் கொண்டு கல்வியில் முன்னேற வேண்டும். அதன் மூலம் அக்கிராமத்தின் ஆண்டாண்டுகால அடக்குமுறை வாழ்வையும் மாற்றக்கூடிய அரசியல் சமூகப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்க வேண்டும்.

சாதியத்தால் அடக்கப்பட்ட புத்தூர் தாழ்த்தப்பட்ட மக்களின் வெயர்வை உழைப்பு இரத்தம் அத்தனையும் சோமாஸ்கந்த கல்லூரியின் கட்டிட மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் நிறைந்து நிற்கிறது. ஆனால் அத்தகையவர்களின் பிள்ளைகளுக்கு சுமார் 50 வருடங்களாகத் கதவுகள் திறக்கப்படாத கேவலம் எண்பதுகளிலேயே அதுவும் வடபுலத்தின் போராட்டங்களின் விளைவாகவே திறக்கப்பட்டது. இவற்றை வைத்துப் பார்க்கும் போதே இம் மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் அக் கிராம மக்களுக்கும் சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கும் மன ஆறுதல் தருவதாக உள்ளது. இம் மாணவர்களுக்கு அவ்விரு பாடசாலைகளிலும் வெளியிலும் சாதிய மன வக்கிரம் எதுவும் இன்றி அக்கறையோடு கல்வி கொடுத்த ஆசிரியர்களுக்கும் ஊக்கமளித்த பெற்றோருக்கு அம் மக்கள் சார்பாகப் புதிய பூமி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

## அரியது கேட்கின்

இந்தத் தெருவழியே நடக்கையில்
அய்யாவின் தோளிற் தொங்கிய சால்வையும்
அம்மாவின் மார்பை மூடிய ரவிக்கையும்
பருத்திச் சீலைதான், என்றாலும்
சரிகை வைத்த பட்டைவிட அழகானவை.
என் அம்மாவும் அய்யாவும்
எனக்கு வைத்த நீண்ட பேர்
மிகவும் பழையது தான், என்றாலும்
எந்தக் கவிதையையும் விடக் கேட்க இனியது.
பாடசாலையில் நான் அமர்ந்த பழங்கதிரை
மலிவான பலகைதான், என்றாலும்
எந்தச் சிம்மாசனத்தினும் சிறப்பானது.
சிற்றுண்டிச்சாலையில் நான் உறுஞ்சுங் கிண்ணம்
உள்நாட்டுப் பீங்கான் தான், என்றாலும்
மணிபதித்த பொற்கிண்ணத்திலும்
விலையுயர்ந்தது.
நான் நுழைகின்ற ஆலயமோ
உலகப் புகழ் பெற்றதல்ல, என்றாலும்
மதுரையையும் தஞ்சையையும் விட மகத்தானது.
ஊர்க் கிணற்றில் அள்ளிக் குளிக்கின்ற நீரோ
உவர்ப்பானது என்றாலும்
கங்கையையும் காவிரியையும் விடப் புனிதமானது.

ஏனென்று கேட்கிறாய்.

ஒவ்வொன்றும்
நானும் என் அம்மாவும் அய்யாவும்
பாட்டியும் பாட்டனும்
போராடி வென்றது.

புவனம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# செம்மொழி மாநாடும்

# சிவத்தம்பியின் தடுமாற்றமும்

உலக தமிழராய்ச்சி நிறுவனம் 45 ஆண்டுகளாகச் செய ற்பட்டு வந்துள்ள ஒரு அமைப்பாகும். அதன் முதலாவது சர்வதேசத் தமிழராய்ச்சி மாநாடு 1966ம் ஆண்டு கோலா ம்பூரில் நடந்தது. அதை நடத்துவதற்கு முன்னோடியாக இருந்தவர்களுள் இலங்கையரான தனிநாயகம் அடிகள் முக்கியமானவர். அந்த அமைப்பின் நோக்கம் தமிழ் மொழிக்குத் தொடர்பான பல்வேறு அம்சங்களிலும் ஆராய் வுகளை நடத்துவதும் அதன் எதிர்கால வளர்ச்சிக்கு வளஞ் சேர்ப்பதுமாகவே இருந்து வந்துள்ளது. அதன் மாநாடுகள் பின்னர் சென்னை (1968) பாரிஸ் (1970) யாழ்ப்பாணம் (1974) மதுரை (1981) கோலாம்பூர் (1987) மொறிஷஸ் (1989) தஞ்சாவூர் (1995) ஆகிய நகரங்களில் நடந்துள்ளன.

பின்னைய மாநாடுகளில் கனதியான ஆய்வுகளும் பயனுள்ள ஆலோசனைகளுமே மாநாடுகள் முன்வைக்கப்பட்டன என்று கூறுவது கடினம். ஏனென்றால் தமிழ் பற்றிய ஒரு உணர்ச்சி கலந்த பார்வையும் சில சமயம் ஒரு வெறித்தனமும் அதைவிட முக்கியமாகத் தமிழ் மொழி வெறியை அரசியலாக்குகிற போக்குக்களும் மாநாடுகளிற் குறுக்கிட்டுள்ளன. குறிப்பாகத் தமிழகத்தில் மாநாட்டைக் கட்சி அரசியல் நோக்கங்கட்காகப் பயன்படுத்துகிற முனைப்புக்கள் எப்போதுமே செயற்பட்டுள்ளன.



இந்த ஆராய்ச்சிகளின் மூலம் தமிழ் எவ்வளவு பயன் பெற்றது என்பது விவாதத்திற்கு உரியது. என்றாலும் இம் மாநாடுகளின் மூலம் இயலுமான சந்திப்புக்கள் தமிழ் பற்றிய சர்வதேச அக்கறையை உயர்த்துவதிலும் தமிழ் மொழி ஆராய்வாளர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றியுள்ளது. சோசலிச நாடுகளிலே பல கனதியான தமிழராய்ச்சியாளர்களும் அக்கறையுடைய தமிழ் ஆர்வாளர்களும் இருந்து வந்தனர். என்ற உண்மை கூடத் தமிழராய்ச்சி மாநாடுகள் மூலமே தமிழ்ப் பேசும் மக்களுக்குத் தெரிய வந்தது.

ஒவ்வொரு தமிழராய்ச்சி மாநாட்டையும் எந்த நாட்டில் எப்போது நடத்துவது என்பதைப் பற்றிய அடிப்படையான முடிவுகளை உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின் செயற்குழுவே எடுக்க வேண்டும். அதன் பின்பு அதன் செயற்படுத்தல் பற்றிய அலுவல்களை அந்த நாட்டுக்குரிய குழுவினர் முடிவு செய்ய வேண்டும். இம் முடிவுகளின் மீது பல்வேறு காரணங்களால் கடும் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. மாநாடுகள் அரசியல் நோக்கங்கட்காகப் பயன்படுத்தப் பட்டதன் விளைவான அனர்த்தங்களும் பின்னைக் கால முடிவுகளைப் பாதித்துள்ளன. எனினும் தமிழ் மொழி அறிஞர்கள் இலக்கியவாதிகள், தமிழ் ஆர்வலர்கள் எனப்படுவோருக்கு இம் மாநாடுகள் முக்கியமான நிகழ்வுகளாகவே இருந்துள்ளன. எல்லாரும் பங்குபற்றா விடினும், எல்லாருக்கும் தமது துறையும் அக்கறைகளும் சார்ந்த நிகழ்வுகளும் பங்களிப்புக்களும் பற்றி அறியும் ஆவல் இருந்தே வந்தது. குறிப்பாக நவீன தமிழ்த் தொழில்நுட்பத் தேவைகளும் செயற்பாடுகளும் தமிழராய்ச்சிக்கு முக்கியமான விடயங்களாகின்றன. எனினும் மாநாட்டை எப்போது எங்கே நடத்துவது என்பதில் உள்ளுர் அரசியல் காரணமாக நீண்ட விவாதங்களும் விரைவில் முடிவெடுக்க இல்லாதவாறான முட்டுக்கட்டைகளும் தவிர்க்க இயலாதனவாகிவிட்டன. உலகத் தமிழராய்ச்சி நிறுவனத் தலைமையகம் சென்னையில் அமைந்திருப்பதால். அதில் தமிழக அரசியற் குறுக்கீடுகள் தவிர்க்க இயலாதனவாகவே உள்ளமை விளங்கிக் கொள்ள வேண்டியதாகும். பல்வேறு காரணங்களால் 1995ல் நடந்த 8ஆம் மாநாட்டின் பின்பாக மாநாடு நடைபெறாமல் இழுபட்டு 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அப்போது தமிழகத்தில் தேர்தல் நடக்கும் என்பதால் அதைச் சிறிது பிற்போட நேரிடலாம் என அறியப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே கருணாநிதி தமிழ்ச் செம்மொழி மாநாட்டை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்த முற்பட்டார். அதற்கான ஒத்துழைப்பை அவர் தந்திரமான காய் நகர்த்தல்களின் மூலம் மேற்கொண்டார். முன்பு சி.பி.எம். ஆதரவாளராகத் தோற்றங்காட்டிப் பின்பு தி.மு.க. தலைமைக்குத் தன்னை நெருக்கமாக்கிக் கொண்ட பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி மூலம் பேராசிரியர் சிவத்தம்பியிடம் அவரது உடன்பாடு பெறப்பட்டது.

தமிழ் ஆர்வலர்கள் நடுவே செல்வாக்கிழந்து போனவரான கருணாநிதி தனது தமிழார்வத்தின் நம்பகத் தன்மையை வலுப்படுத்தவும் தனது ஆட்சியின் கீழேயே தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிட்டியது என்பதை நினைவூட்டவுமான அரசியற் காரணங்கட்காகவே இக் காய் நகர்த்தல் நடைபெற்றது. உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் இம் மாநாட்டை அங்கீகரிப்பதாக அதன் குழுவிற் பெரும்பான்மையோர் ஏற்பதாகக் கூறுவது தமிழராய்ச்சி நிறுவனம் தனது உரிமைகட்குப் புறம்பாகச் செயற்படுகிற ஒரு காரியமாகும். தமிழராய்ச்சி நிறுவனத்தின் பணி தனக்குட்பட்ட அமைப்புக்கள் மூலம் மாநாடு நடத்துவதே ஒழிய பிறர் நடத்தும் மாநாடுகட்கு அங்கீகாரம் வழங்குவதல்ல. எனினும் இங்கே கருணாநிதியின் நேர்மையீனம் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையில் இருந்த அ.தி.மு.க ஆட்சி கலைக்கப் பட்டதால் 1981ம் ஆண்டுத் தமிராய்ச்சி மாநாட்டை மதுமையில் திட்டமிட்ட நாளில் நடத்த இயலாது போயிற்று. இந்திரா காந்தி மூலம் எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கவிழ்ப்பித்த கருணாநிதியால் அடுத்து வந்த தமிழகச் சட்டசபைத் தேர்தலில் வெல்ல இயலவில்லை. பிற்போடப்பட்ட மாநாடு, 1981இல் மதுரையில் நடந்தபோது கருணாநிதி தலைமையில் தி.மு.க. அதைப் பகிஷ்கரித்தது. இதுவே தமிராய்ச்சி மாநாட்டின் முதலாவது அரசியற் பகிஷ்கரிப்பாகும்.

1992 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியிலிருந்த போது அவருடைய விடுதலைப் புலி எதிர்ப்பு வன்மம் புலம்பெயர்ந்த தமிழர் மீதான கடுமையாகவும் இலங்கைத் தமிழருக்கு எதிரான பகையுணர்வாயும் வெளிப்பட்டது. அவருக்கு ஆதரவாகச் செயற்பட்ட சோ. ராமசாமி போன்ற பிற்போக்காளர்களும் அதற்குத் தூண்டுதலாக இருந்தனர். 1995ம் ஆண்டு தமிழராய்ச்சி மாநாடு நடந்த போது தமிழ் நாடு அரசு இலங்கைத் தமிழ் அறிஞர்கட்கு அழைப்பு அனுப்ப மறுத்தது. தமிழக அரசின் அழைப்பில்லாமல் மாநாட்டிற் பங்கு பற்றலாம் என்று தமிழகத்திற்குச் சென்றிருந்த இலங்கைத் தமிழர்கள் மாநாட்டிற் பங்கு பற்றத் தடைவிதிக்கப்பட்டது. அவ்வாறு மாநாட்டிற் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டவர்களில் பேராசிரியர் சிவத்தம்பியும் ஒருவராவார். முற்றிலும் அரசியல் மயப் படுத்தப்பட்ட இந்த தமிழராய்ச்சி மாநாட்டிற்குத் தமிழகத்திற் சில கண்டனக் குரல்கள் எழுந்தாலும், தமிழறிஞர்கள் எனப்பட்டோரிற் பெரும்பாலோர் ஜெயலலிதாவின் மூர்க்கத்தனத்தை எதிர்த்து மாநாட்டைப் பகிஷ்கரிக்க முன்வரவில்லை.

இம் முறை நடக்கவுள்ள கருணாநிதியின் அரசியல் லாபத்திற்கான மாநாட்டிற்குப் பேராசிரியர் சிவத்தம்பியிடம் ஆதரவு கோரப்பட்ட போது பேராசிரியர் குழந்தைசாமியிடம் தனது ஒப்புதலைத் தெரிவித்ததையும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் ஒப்புதல் வழங்காவிடின் மாநாட்டைச் செம்மொழி மாநாடாக நடத்தும்படியும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. இராசேந்திரனுக்குச் சிவத்தம்பி ஒக்டோபர் 12 அன்று எழுதியுள்ளார். அதன் அடிப்படையிலேயே கருணாநிதி அவரை மாநாட்டுக் குழுவிலும் நியமித்துள்ளார். மாநாடு அறிவிக்கப்பட்ட பின்பு எழுந்த கடும் எதிர்ப்பின் பின்னணியில் 21ம் திகதி கலந்து கொள்வதில் தனது தயக்கத்தைத் தெரிவிக்கிற விதமாக ஒரு கடிதத்தை சிவத்தம்பி இராசேந்திரனுக்கு எழுதினார். சிவத்தம்பி



கலந்து கொள்ளமாட்டார் என்ற விதமான கருத்துக்கள் பல ஊடகங்களில் வெளியான போது ''பேராசிரியர் சிவத்தம்பி அழைத்து வரப்படுவார் அல்லது (கருணாநிதிக்கு ராஜபக்ஷவிடம் உள்ள செல்வாக்கின் மூலம்) இழுத்து வரப்படுவார் என்று இந்திய மேலாதிக்க நிறுவனத்தின் ஏடான தினமணி எழுதியிருந்தது.

''தமிழர் பிரச்சினையில் முதல்வருக்கு உறுதியான நிலைப்பாடு இல்லை" என்று குறிப்பிட்டு அதன் விளைவாகவே மாநாட்டுக்கு எதிர்ப்புக் கிளப்பியிருப்பதாகச் சிவத்தம்பி கூறியது 1.11.2007 ஞாயிறு வீரகேசரியில் கொட்டை எழுத்துத் தலைப்புடன் வெளியாகியிருந்தது.

சிவத்தம்பி சொல்வது தவறு. கருணாநிதிக்கு மிக உறுதியான நிலைப்பாடு உண்டு. ஈழத் தமிழர் எக்கேடு கெட்டாலும் தமிழகத்தில் தனது குடும்ப ஆட்சியை நிலை நிறுத்த டில்லிக்கு உடன்பாடாகவே செயற்படுவது பற்றி கருணாநிதிக்கு ஒரு தடுமாற்றமும் இல்லை. தடுமாற்றமெல்லாம் சிவத்தம்பிக்குத்தான். தனக்கு உதவுகிறவர்களும் கருணாநிதியை அண்டிப் பிழைக்கிறவர்களுமான ஒரு தமிழகப் பேராசிரியர் கூட்டத்தைப் பகைக்காமலும் தமிழ் மக்கள் மத்தியில் கருணாநிதியின் மீதான வெறுப்பு மாநாட்டு எதிர்ப்பாக விருத்தி பெற்றுள்ளதால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் தன்மீது வெறுப்பு ஏற்படாமலும் எப்படிக் காய் நகர்த்துவது என்றும் சிவத்தம்பி இப்போது கணக்குப் போடுகிறார்.

தினமணி சொல்வது தவறு. சிவத்தம்பியை அழைக்கவும் வேண்டியதில்லை. இழுக்கவும் வேண்டியதில்லை. தானாகவே போய்ச் சேருவதற்கு அவர் வழி தேடிக் கொண்டிருக்கிறார். எதிலும் உறுதியான நிலைப்பாடு இல்லாதவர் கருணாநிதியல்ல, சிவத்தம்பி தான்.

இவை ஒரு புறமிருக்க, மாநாட்டில் கலந்து கொள்வதா இல்லையா என்ற விவாதம் தமிழகத்தில் களைகட்டியுள்ளது. இ.அ.தி.மு.கவும் ம.தி.மு.கவும் போவதில்லை என்றும் பா.ம.க வும் பாராளுமன்ற இடதுசாரிகளும் போவது என்றும் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

நடக்கப் போகிற மாநாடு தமிழ் பற்றிய மாநாடல்ல. தமிழக அரசியல் என்கிற மட்டரகமான கூத்தொன்றின் மேடையேற்றம் என்பதையே இந்த நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குலோத்துங்க சோழனிடம் ''உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்"? என்று காறி உமிழ்ந்த கம்பனைப் போல நெஞ்சுரத்துடன் இந்தக் கருணாநிதிச் சோழனிடமும் தமிழகத்தைச் சுரண்டிப் பிழைக்கும் ஏமாற்றுத்தலைமைகளிடமும் சொல்லக் கூடிய தழிழறிஞர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழக அரசியற் சகதியிலிருந்து தன்னை மீட்டெடுத்துத் தமிழ் பற்றிய கனதியான ஆய்வுகட்கும் தமிழரின் எதிர்கால வளர்ச்சிக்குரிய ஆக்கமான சிந்தனைகட்குமான களமாகத் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும். சிவா

## இலங்கையின் ஆளும்

5ம் பக்க தொடர்ச்சி

அமை ந்து கொண்டது. இதன் மூலம் எழுந்த அமெரிக்க மேற்கு லக எதிர்ப்பையும் அழுத்தங்களையும் எதிர் கொள்ள இந்தி யாவின் மேலாதிக்கக் கரங்களைப் பற்றிக் கொள்ளும் நிலைக்கு இன்றைய அரசாங்கம் சென்றுள்ளது. இத்தகைய பின்புலத்திலேயே ஜனாதிபதித் தேர்தலிலும் அமெரிக்க மேற்குலகம் ரணில் தரப்பையும் இந்தியா மகிந்த தரப்பையும் ஆதரிக்கும் போக்கை வெளிப்படுத்தி வருகின்றன. ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் பொது வேட்பாளராக்க விரும்பும் சரத் பொன்சேகா அமெரிக்க 'கிறீன்காட்" பச்சை அட்டை வைத்திருப்பவர் என்பதும் மட்டுமன்றி அணமையில் அவரை விசாரிப்பதற்கு அமெரிக்க நிர்வாகம் தயாராகினும் இறுதி நேரத்தில் கைவிட்டதும் நோக்க வேண்டியதாகும். இப்பொழுது வேகமடைந்து வரும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதற்கான போட்டியாளர்களுக்குப் பின்னாலும் அதே அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியிலிருந்து வருகிறது. இந்தப் போட்டியை இலங்கையின் ஆளும் வர்க்க நிலைப்பாடும் ஆதிக்க அரசியல் போக்கும் கொண்ட நிலைமைக்கு மாற்று அரசியல் ஒன்று தோற்றுவிக்கப்படவும் முன்னெடுக்கப்படவும் வேண்டும். அது நடைமுறைச் சாத்திய மாக்கப்படாதவரை தெற்கேயும் சரி வடக்கு கிழக்கேயும் சரி மக்கள் இன்றைய அரசியல் அவலச் சேற்றிலிருந்து மீள முடியாது. மீண்டும் பழைய செக்கிழுத்த பாராளுமன்றப் பழைமைவாதப் பாதையில் பயணித்து மேலும் துயரங்களைச் சுமந்து செல்ல வேண்டியதாகவே இருக்கும். மக்கள் மத்தியில் கணிசமான தொகையினராவது மாற்று அரசியல் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இறங்க வேண்டிய காலம் வந்துள்ளது என்பது உணரப்பட வேண்டும். அதற்கு வெறுமையும் பழைமையும் கொண்ட பெரும் தேசியவாதமோ அன்றி குறுந்தேசியவாத நிலைப்பாடுகளோ வழி காட்ட மாட்டாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 4

- வெகுஜனன் -

1975ம் ஆண்டின் இரண்டாவது மாதத்தில் காங்கேசன் துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் இடம்பெற்றது. அதற்கான பிரசாரத்தின் மூலமும் அதன் அமோக வெற்றியினாலும் தமிழீழத்திற்கான கோரிக்கையானது அதன் சாதக பாதக கண்ணோட்டத்திற்கு அப்பால் தமிழின உணர்ச்சியைத் தூண்டி விட்டது. வன்முறை நடவடிக்கைகளை ஆங்காங்கே செய்து வந்த தமிழ் இளைஞர் பேரவைக்குள் தமிழரசுக் கட்சியின் இளைஞர்களும் அதே வேளை அக் கட்சியின் தலைமைத்துவத்தில் அதிருப்தியுற்ற இளைஞர்களும் இருந்தனர். தீவிரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களும் தமிழீழத்திற்கான தனியான இளைஞர் இயக்கம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தும் செயற்பட்டனர். அவ்வாறான ஒரு நிலை உருவாகுவதைத் தமிழரசுத் தலைமை விரும்பவில்லை. இளைஞர்களின் வற்புறுத்தலை நிராகரிக்காத நிலையிலும் அடுத்து வரவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் அதனை வைத்தே தமது பாராளுமன்ற ஆசனங்களை அதிகரித்துக் கொள்ளவும் தமிழர் கூட்டணி மேற்படி தீர்மானத்தைப் பிரகடனமாக்கும் முடிவுக்கு வந்தது. இதில் தமிழரசுக் கட்சியினர் மும்முரமாக இருந்தனர். தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வ நாயகத்திற்கு முழுமையான உடன்பாடு இருக்கவில்லை யாயினும், தனது வாழ்வின் இறுதிக்கால நிலையில் அமிர்தலிங்கம் போன்றவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கிப் போக வேண்டியதாயிற்று. செல்வநாயகத்திற்குத் தழிழரசுத் தந்தை என்ற படிமம் இருந்து வந்தமையாலும் அதிகம் பேசாதவரும் பதவிகளைப் பெறாதவருமாக இருந்த காரணத்தாலும் அந்தத் தந்தை தமிழ் மக்கள் மத்தியில் ஈழத்துக் காந்தியாகவே சித்தரிக்கப்பட்டார். அத்துடன் அவர் கிறிஸ்தவராக இருந்ததால் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து பீடங்களிலும் அவருக்கு தனிமதிப்பு வழங்கப்பட்டது. ஏனெனில், தப்பித் தவறிக்கூட ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களது நலன்களுக்கும் எதிராகச் செல்வநாயகம் ஒரு போதும் பேசியவரல்ல. மேலும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சைவ வேளாள மேட்டுக்குடியினைப் பிரதிநிதித்துவம் செய்த கட்சியாகவும் சேர் பொன் இராமநாதன் வழியில் வந்த தமிழர் பழைமைவாதக் கட்சியாகவும் இருந்து வந்தது. ஆனால் தமிழரசுக் கட்சியானது சைவ கிறிஸ்தவேளாள மேட்டுக்குடித் தலைமை கொண்டதாகவும் சாதியத்தில் ஓரிரு படியிறங்கிய நெகிழ்ச்சிப் போக்கை ஒரு தோற்றமாகக் காட்டுவதிலும் முன்னின்று வந்தது. எனவே பரவலான ஆதரவும் மதிப்பும் பெற்றவராக விளங்கி வந்த செல்வ நாயகத்தின் தலைமையில் அவரது வாயால் தமிழீழக் கோரிக்கைக்கான தீர்மானம் நிறைவேற்றப்படுவதையே தமிழ்த் தேசியவாதத் தரப்பினர் விரும்பினர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசிற்கு இதில் ஒத்த கருத்து இருக்கவில்லை. அதன் பொதுச் செயலாளர் மு. சிவசிதம்பரம், காங்கேசன்துறை திருநாவுக்கரசு, வவுனியா சிவசிதம்பரம் ஆகியோர் கூட்டணியில் இணைந்து நின்றனர். ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது மைந்தரான குமார் பொன்னம்பலமும் அவர்களது விசுவாசிகளும் அதற்கு ஒப்பவில்லை. ஆயினும், அதனைப் பகிரங்கமாக எதிர்த்து நிற்காமல், தமிழரசுக் கட்சி வழங்கி வந்த துரோகிப் பட்டத்தைத் தவிர்த்துக் கொண்டனர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சட்டப்படி தமதாக்கிம் கொள்வதற்காக இவர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சூழலிலேயே 1976ம் ஆண்டு மே மாதம் 14ஆந் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியின் பண்ணாகத்தில் அமிர்தலிங்கத்தின் வீட்டுக்கு அருகாமையில் தமிழர் கூட்டணியின் மாநில மாநாடு நடைபெற்றது. மெய்கண் டான் பாடசாலையிலும் சுழிபுரம் அம்மன் கோவில் வீதியிலும் மாநாடு தமிழ் உணர்ச்சியின் வேகமூட்டலுடன் இடம்பெற்றது. ஆட்சியில் இருந்த சிறிமாவோவின் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத நோக்குடைய இனவன்ம நடவடிக்கைகளின் மத்தியில் அவற்றுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகவும் அம் மாநாடு காட்சி கொடுத்தது. இம் மாநாட்டில் மலையகத் தமிழ் மக்களது தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பங்கு கொண்டது. எனவே தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், இ.தொ.கா. என்பன இணைந்தே தமிழீழப் பிரகடனத்தை வெளியிடுகின்றன என்றவாறே பிரசாரங்கள் அமைந்தன. ஆனால் விரைவாகவே தொண்டமான் அதிலிருந்து விடுபட்டுக் கொள்வதாகப் பகிரங்கமாகவே தெரிவித்துக் கொண்டனர். சற்று காலத்தின் பின் தனது செயற்பாட்டால் ஜி.ஜி. பொன்னம்பலம் தனது உடன்பாடின்மையை வெளிப்படுத்திக் கொண்டனர்.

தமிழீழத்திற்கான பிரகடனம்

மேற்படி தமிழர் கூட்டணியின் 1976ம் ஆண்டு மே 14ந் திகதிய வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழத்திற்கான முதல் வாசகம் இவ்வாறு அமைந்திருந்தது. ''இத் தீவில் உள்ள தமிழீழ நாட்டினத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு நாட்டினத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு சுதந்திர இறமையுள்ள மத சார்பற்ற சோஷலிசத் தமிழீழ அரசை மீழ்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது". இத் தீர்மானத்தின் கீழ் ஆறு அம்சங்களாக தமிழீழக் குடியுரிமை, மத பிரதேச சமத்துவம், சாதிய ஒழிப்பு, மதசார்பற்ற அரசு, தமிழ் மொழி அரச மொழி, சோஷலிச அமைப்பு என்பனவற்றை வற்புறுத்திக் கொண்டது.''

''இத்தகைய தமிழீழத்தை வென்றெடுக்கத் தயங்காது உழைக்குமாறு பொதுவாகத் தமிழ் இனத்திற்கும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம் மாநாடு அறைகூவல் விடுக்கிறது''. எனத் தீர்மானம் கேட்டுக் கொண்டது. அத்துடன் அடுத்து வரும் யூலை மாதத்தில் திருகோணமலையில் நடைபெற உள்ள தமிழர் கூட்டணி மாநாட்டில் இதற்கான செயல் திட்டத்தை முன் வைத்து விரைவில் போராட்டத்தை ஆரம்பிக்குமாறும் மேற்படி தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவிற்கு அம் மாநாடு பணிப்புரை வழங்கியது. அதே வேளை இம் மாநாடு தமிழர் கூட்டணி என்ற பெயரை தமிழர் விடுதலைக் கூட்டணி எனவும் மாற்றிக் கொண்டது. அதே பெயரில்



கட்சி பதிவு பெற்று உதய சூரியன் அதன் தேர்தல் சின்னமாகியும் கொண்டது. இவ் உதய சூரியன் தமிழீழத்திற்கான உதயத்தைக் குறிப்பதாகவும் பரப்புரை செய்யப்பட்டது.

ஒரு இனம் அல்லது சமூகம் ஆளும் வர்க்கத்தினாலும் அல்லது ஆதிக்க அதிகார சக்திகளினாலும் அடக்கப்படும் போது மக்களிடையே அதற்கு எதிரான எதிர்ப்புணர்வும் போராட வேண்டும் என்ற போர்க் குணமும் எழுவது இயல்பான தொன்றேயாகும். ஆனால் அத்தகைய சூழலில் அவ் இனத்தின் அல்லது சமூகத்தின் மத்தியில் உள்ள தலைமைத்துவ சக்திகள் எவ்வாறான தலைமையைக், குறிப்பாகக் கொள்கை அடிப்படை கொண்ட வழி காட்டலை, முன்வைத்து மக்களை வழி நடத்துவது என்பது மிகமிக முக்கியமானதாகும்.அந்த வகையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்த தமிழர் தலைமையான தமிழர் கூட்டணியானது மேட்டுக்குடி உயர்வர்க்கத் தலைமையாகவும் நிலவுடைமை வழிவந்த பழைமைவாதம் போற்றும் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளுடைய தலைவர்களை உடையதாகவும் விளங்கியது. இத்தகைய தலைமையை நம்பிக்கை விசுவாசத்துடன் ஏற்று நிற்பதிலும் நிலவுடைமை கொலனியல் அந்நியத்தனம் போற் றும் படித்த மத்தியதரவர்க்க சக்திகளுக்கு எவ்வித சிரமும் இருக்கவில்லை. ஏறத்தாழ யாழ்ப்பாண மையப்பட்ட இச் சிந்தனை மரபானது வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் மீது இன மேன்மை, ஆண்ட பரம்பரை, வீரம், தன்மானம் என்பனவற்றால் திணிக்கப்பட்டது. இது பாராளுமன்ற அரசியலிற்கும் பின்பு ஆயுதப் போராட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. இன, மொழி, பிரதேச, பண்பாட்டம்சங்களால் அநீதிக்கும் புறக்கணிப்புக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்ட தமிழ் மக்கள் தம் முன்னே உள்ள தமிழ்த் தலைமைகளின் உண்மையான வர்க்கத் தன்மை பற்றியோ முன்வைக்கப்பட்ட சாத்தியமற்றதும் வென்றெடுக்க முடியாத மண்குதிரைக் கொள்கை பற்றியோ சீர்தூக்கிப் பார்க்கவில்லை. அவ்வாறு சீர்தூக்கிப் பார்த்து கொள்கை ரீதியாகக் கருத்து முன்வைத்த மாக்சிச லெனினிசவாதிகளையும் இடதுசாரிகளையும் பற்றி தர்க்க நியாயமற்ற அவதூறுகள் பேசப்பட்டனவே தவிர, அவர்கள் கூறியவற்றில் பொதிந்து காணப்பட்ட உண்மைகளை பெரும்பான்மையோர் உணர மறுத்தனர் அல்லது மறுக்க வைக்கும் படி பிரசாரங்கள் திணிக்கப்பட்டன.''யார் கருத்துரைத்தவர் என்று பார்ப்பதைவிட உரைக்கப்பட்ட கருத்தில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதே சிறந்ததாகும்'' என்றொரு முது மொழி உண்டு. தமிழீழத்திற்கான பிரகடனம் தமிழ் மேட்டுக்குடித் தலைமையால் முன்வைக்கப்பட்ட போது அங்கு அதன் கருத்துக்களும் கொள்கைகளின் சாத்தியம் யதார்த்தம் எதிர்காலம் பற்றியெல்லாம் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. தலைவர்கள் மீதான விசுவாசமும் நம்பிக்கையுமே கண் மூடித்தனமாகப் பின்பற்றப்பட்டது. முப்பது வருட ஆயுதப் போராட்டத்திலும் அவ்வாறே பின்பற்றப் பட்டது. அதன் இன்றைய எதிர் விளைவுகளைக் காண அன்றைய தலைவர்கள் பலர் இல்லை. இளைஞர்களாக இருந்தவர்களில் சிலரே இன்று குற்ற உணர்வோடு ஏதாவது சாக்குப் போக்குக் கூறி பாராளுமன்றப் பாதையில் பயணிக்க நிற்கிறார்கள். முன்னின்ற பலர் புலம் பெயர்ந்து சென்று விட்டார்கள்.

1976ம் ஆண்டு மே 14ந் திகதி தமிழீழக் கோரிக்கை பிரகடனம் செய்யப்பட்ட எட்டாவது நாளான மே 22ம் திகதி இலங்கையின் 4வது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. அத்தினத்தைப் பகிஷ்கரிக்குமாறும் குடியரசு யாப்பை நிராகரிக்குமாறும் தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிய துண்டுப்பிரசுரங்கள் தமிழர் கூட்டணியால் விநியோகிக்கப்பட்டன. அதனை முக்கிய தலைவர்கள் யாழ் நகரில் பிரதான பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் புதிய சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக நின்று விநியோகித்தனர். இளைஞர்கள் அவற்றைச் சுவரொட்டிகளாகவும் ஒட்டினர். பொலீஸ் இவர்களில் முக்கிய தலைவர்களைக் கைது செய்தது. அவர்கள் மீது அவசரகாலச் சட்டத்தின் கீழ் குடியரசு யாப்பிற்கு எதிராகச் செயல்பட்ட தேசத் துரோகக் குற்றம் புரிந்ததாக வழக்கும் தொடரப்பட்டது. அதில் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் க. துரைரத்தினம், க.பொ. இரத்திலம், வி.என். நவரத்தினம் ஆகியோர் எதிரிகளாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீதான குற்றச் சாட்டை கொழும்பில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட யூரிமார் அற்ற நீதிமன்றம் விசாரணைக்கு 1976ம் ஆண்டு யூன் 18ஆந் திகதி எடுத்துக் கொண்டது. இராணி வழக்கறிஞர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் ஆகியோர் உட்பட அறுபத்தொரு வழக்கறிஞர்கள் இவ் வழக்கில் ஆஜராகினர். இந் நிகழ்வைக் கூடத் தமிழ்த் தலைமைகள் பரபரப்பாக்கித் தமிழனின் மூளைத் திறனைப் பார் என்ற விதமான பரப்புரை களைக் செய்தனர். தமிழ் ஊடகங்கள் தமிழ்ச் சட்ட மூளை களைப் பற்றி விதைந்துரைத்தன. இதில் முக்கியமான வாதங்களை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார். அவர் ஏற்கனவே பெரும் சட்ட வல்லுனர் எனப்பெயர் பெற்றிரு ந்தவர். ஏற்கனவே ஜி.ஜி.-செல்வா பிளவு 1948இல் இருந்து தொடர்ந்தது. இவர்களது அரசியல் தலைமைத்துவப் போட்டி பாராளுமன்ற அரசியலில் ஒருவரை—ஒருவர் நிராகரித்த நிலையில் இருந்து வந்தமை யாவரும் அறிந்ததேயாகும். அதன் நடுவேயே மேற்படி வழக்கில் தமிழரசு காங்கிரஸ் தலைவர்கள் ஆஜராகி இருந்தமை ஒருவகை ஐக்கியம் என்றும் கூறப்பட்டது. அதன் மூலம் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மீது தமிழரசுக் கட்சியினர் பிரசாரப்படுத்தி வந்த அரசியல் பழிகளும் கழுவப்பட்டன. அதே வேளை இவ் வழக்கின் ஊடாகத் தமிழீழத்தை உருவாக்கும் தமது கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வாதங்கள் வலுவடையும் என்றும் சிலரால் நம்பிக்கையூட்டப்பட்டது. ஆனால் ஜி.ஜியின் சட்டவாதம் தமிழீழம் பற்றியதாக இருக்கவில்லை. அதாவது தொடுக்கப்பட்ட வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்பதாகவே அமைந்திருந்தது. ஆனால் இவ்வழக்கில் ஒரு சுவார்ஸ்யமும் அடங்கியிருந்தது. இவ்வழக்கை தொடுத்த சட்டமா அதிபராக சிவா பசுபதி இருந்தார். நீதிபதிகள் மூவரில் ஒருவராக சிவா செல்லையா இருந்தார். எதிரிகளுக்காக இலங்கையின் முன்னணி வழக்கறிஞர்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

களாக மேலே கூறிய மூவரும் ஏனைய அறுபத்தோரு பேரும் சுத்தத் தமிழர்களாக இருந்தனர். வழக்கு விசாரணை முடிவின் போது 1976ம் ஆண்டு செப்ரம்பர் 10ம் திகதி அவசரகால விதிகளின் கீழான இவ்வழக்கு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அத்துடன் சட்டமா அதிபர் வழக்கை மீளப் பெற்றும் கொண்டார். இவையெல்லாம் பெருமையாகவும் புகழாகவும் மட்டுமன்றி இதுபோன்ற நடவடிக்கைகளால் தமிழீழம் கிடைத்துவிடும் எனவும் அப்பாவித்தனமாக மக்கள் நம்ப வைக்கப்பட்டனர். ஏற்கெனவே 1975ஆம் ஆண்டின் நடுக் கூறிலே தமிழ் இளைஞர் பேரவையில் பிளவு ஏற்பட்டு தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (TPLF) ஆரம்பிக்கப்பட்டது. இதில் இளைஞர்கள் பலர் இணைந்தனர். ஆனால் 1974இல் தமிழ்ப் புதிய புலிகள் (TNT) என்ற பெயரில் ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு அதில் வே.பிரபாகரன் இன்பம், பற்றிக் போன்ற இளைஞர்கள் சேர்க்கப்பட்டும் டனர்.



பொன்னாலையில் யாழ் மாநகர முதல்வர் கொல்லப்பட்ட இடத்தில் இதே ரி.என்.ரி. (TNT) என்ற எழுத்துப் பொறுக்கப்பட்ட கடதாசி அட்டை இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதே பெயர் தான் வட்டுக்கோட்டை மாநாடு நடைபெறுவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்பாக 5.5.1976 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எனப் பெயர்மாற்றப்பட்டது. இது முற்றிலும் ஆயுத நடவடிக்கைகளை முன்னெடுத்துத் தமிழீழத்தை வென்றெடுக்கும் தமிழ் இளைஞர்களின் அமைப்பாகவே தோற்றுவிக்கப்பட்டது. அதன் போதும் முன்னிலை வகித்த இளைஞர்கள் மத்தியில் முரண்பாடுகள் இருந்து வந்தன. அதனால் ஒருவரை ஒருவர் தீர்த்துக் கட்டும் முயற்சிகளும் இடம் பெற்றன. இந்த அமைப்பின் ஊடாகவே வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது ஆற்றல்களைப் பயன்படுத்தியும் கொல்ல வேண்டியவர்களை அவ்வப்போது கொன்றும் அரவணைக்க வேண்டியவர்களை அணைத்தும் பயணிக்கத் தொடங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையானது 33 வருடங்களுக்குப் பின்பு கடுமையான யுத்தத்தினால் இலங்கை ராணுவத்தால் முல்லைத்தீவு முள்ளி வாய்க்காலில் வைத்து அழிக்கப்பட்டது.

1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக தமிழீழக் கோரிக்கை பிரகடனப் படுத்தப்பட்ட பின் அதனை முன்மொழிந்தவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பத்து மாதங்கள் மட்டுமே உயிர் வாழ்ந்தார். அந்த வகையில் அவர் தனக்கு இடப்பட்ட தந்தை என்ற படிமப் பெயரைப் பாதுகாத்துக் கொண்ட நிலையில் 1977ம் ஆண்டு ஏப்ரல் 27ம் திகதி உயிர் நீத்தார். அவர் உடல் சுகவீனமுற்ற நிலையிலும் தெற்கின் பேரினவாத வெறித்தனங்கள் அதிகரித்து வந்த சூழலிலும் இறுதியாகக் கூறிய அரசியல் தீர்க்கத் தரிசன வசனம் ''தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்பதாகவே இருந்தது. இது தமிழீழத்தைப் பற்றிய இயலாமையின் கூற்றா அல்லது வென்றெடுக்க முடியாமையின் தீர்க்கத் தரிசனம் மிக்க சொல்லா என்பதை செல்வநாயகத்தை தீர்க்கதரசி எனக் கொண்டாடுவோர் தான் தீர்மானிக்க வேண்டும்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மறைவுடன் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ. அமிர்தலிங்கம் அதிகாரமும் ஆதிக்கமும் மிக்க தலைவரானார். தமிழ்க் காங்கிரசில் இருந்து சென்ற மு. சிவசிதம்பரம், திருநாவுக்கரசு, ஆனந்தசங்கரி போன்றவர்கள் உச்ச நிலைக்கு வர முடியவில்லை. இது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததை எடுத்துக் காட்டியது. அதே வேளை செல்வநாயகத்தின் மகனான சந்திரகாசன் தந்தைக்குப்பின் வாரிசுரிமையாகக் கட்சிக்குள் வளர்ந்து தலைமைத்துவத்திற்கு வருவதை அமிர்தலிங்கம் ஆரம்பகாலம் முதலே தவிர்த்து அதற்குரியவாறு காய்நகர்த்தி வந்தார். அதில் முக்கிய நிகழ்வே காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடும் முடிவாகும். தோல்வியடைந்த வட்டுக்கோட்டையில் (தனது சொந்தத் தொகுதி) ஒரு போதும் மீளவும் நிற்க மாட்டேன் என்ற அமிர்தலிங்கத்தின் சபதத்தின் பின்னால் சந்திரகாசனை ஓரங்கட்டும் உள்ளார்ந்தம் இருந்து வந்தது.

செல்வநாயகத்தின் இறப்புக்கு முன் பின்னாக ஜி.ஜி.பொன்னம்பலம், மு.திருச்செல்வம் ஆகியோரும் இறந்தனர். திருச்செல்வத்தின் மகனான நீலன் திருச்செல்வம் கொழும்பு வாசியாக இருந்தமையால் அமிர்தலிங்கத்திற்கு அச்சுறுத்தல் தரும் தலைமைப் போட்டியாளராக இருக்கவில்லை. ஆனால் தமிழரசு--காங்கிரஸ் போட்டியின் நீட்சியாகத் தந்தையின் இடத்திற்கு வந்து கொண்ட குமார் பொன்னம்பலத்தை உள்வாங்குவதில் அமிர்தலிங்கம் மிகுந்த எச்சரிக்கையாகவே நடந்து கொண்டார். அதனை 77ம் ஆண்டு தேர்தலின் வேட்பாளர் தெரிவில் காண முடிந்தது. இவ்வாறான சூழலிலும் தமிழீழத்திற்கான பரப்புரைகள் வேகமடைந்தன. அதேவேளை தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகள் முன்தள்ளப்பட்டன. காட்டிக் கொடுப்போர், உளவு சொல்வோர், இரகசியப் பொலிசார் போன்றவர்கள் கொலைகட்கும் கொலை முயற்சிகட்கும் உட்பட்டனர். ஏற்கனவே சந்தேகத்தின் பேரிற் சிறைகளில் வைக்கப்பட்டோருடன் மேலும் பல இளைஞர்கள் விசாரணையின் பேரில் தடுத்து வைக்கப்பட்டனர். அத்தகைய சூழலில் இன உணர்வுக்கும் போராட்ட திடசங்கற்பத்திற்கும் தமிழ் இளைஞர் யுவதிகள் முன்வந்தமையானது ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வின் பாற்பட்டதேயாகும். அக்காலத்தில் அவ்வாறான இளைஞர்களும் யுவதிகளும் சிறை சித்திரவதை போன்றவற்றை அனுபவித்தமை எவ்வகையிலும் மறுப்பிற் கொச்சைப் படுத்தல்களுக்கும் உட்படுத்தக் கூடியன அல்ல. அவர்கள் தமிழீழ இலட்சியத்தைக் கொண்டிருந்தனர். அதற்கான தியாகம் அர்ப்பணிப்பு என்பனவற்றையும் தந்தனர். அத்தகைய இளைஞர்களில் ஒருவரான காங்கேசன்துறை மயிலிட்டியைச் சேர்ந்த சி. புஸ்பராஜா (மாணவர் பேரவை, இளைஞர் பேரவை மற்றும் இயக்கங்கள் எனச் செயல்பட்டு இறுதியில் பிரான்சில் புகலிடம் பெற்று மறைந்தவர் தனது ''ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்'' என்னும் நூலில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தானும் அனுபவித்த சிறை சித்திரவதைகளைப் பதிவு செய்திருந்தார். இதனைக் குறிப்பிடுவது ஏனெனில் இது போன்ற ஆயிரமாயிரம் இளைஞர்களின் இரத்தம், வியர்வை, சிறைவாழ்க்கை, சித்திரவதைகள், உயிரிழப்புக்கள் யாவும் இன்று புறக்குடத்து நீராகி விட்டதே என்பது தான் வேதனை தரும் ஒன்றாகும். இவ்விடத்திலேதான் யாருக்காக இவற்றைச் செய்வது என்ற மிக முக்கியமான கேள்வியினை கம்யூனிஸ்டுக்கள் அன்றிலிருந்து கேட்டு வருகிறார்கள். மக்களுக்காகவா அன்றி ஒரு சில தலைவர்களுக்காகவும் அவர்கள் முன்னெடுத்த சாத்தியமற்ற வெறும் உணர்ச்சி பூர்வமான பிற்போக்குக் கொள்கைகளுக்காகவா என்பதே பிரதான கேள்வியாகும். அதன் அனுபவமாகவே சீனப் புரட்சியின் போது மாஓசேதுங் கூறினார். ''மக்களுக்காக இறப்பது பாரிய தை மலையை விடப் பாரமானது. பிற்போக்கு வாதிகளுக்காக இறப்பது இறகை விட லேசானது'' இத்தகைய தமிழீழக் கோரிக்கை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு இரண்டரை லட்சம் மக்களும் இளைஞர் யுவதிகளும் கொன்றழிக்கப்பட்ட நிலையில் எத்தகைய கொள்கைக்காக எந்த லட்சியத்துடன் எவ்வாறான தலைவர்களுக்காக போராளிகளும் மக்களும் தமது இன்னுயிர்களை ஈந்தனர் என்ற கேள்வி ஒவ்வொரு நேர்மையான தமிழர்களையும் சிந்திக்க வைக்கிறது. இவ்வாறு கூறுவதன் மூலம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகவும் அநீதி அட்டூழியங்களுக்கு எதிராகவும் போராடியது தவறானது என்று யாரும் கூறிவிட முடியாது. எங்கு அடக்கு முறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கவே செய்யும். ஆனால் போராட்டத்தைப் பரந்துபட்ட மக்களின் நலன்கள் தேவைகளில் இருந்து உண்மையான விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கும் போதே அதற்கு அர்த்தமும் பெறுமதியும் இறுதியில் வெற்றியும் கிடைக்க முடியும் என்பதே பட்டறிவாக உள்ளது.

1977இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து வந்தது. டட்லி சேனநாயக்கவின் மறைவுக்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்த்தன அடுத்துவர இருந்த தேர்தலில் வெற்றி பெறும் வகையிலான பிரச்சாரங்களை முடுக்கி விட்டும் வந்தார். இதில் இ.தொ.காவின் எஸ். தொண்டமானும் ஏனைய முஸ்லிம் தலைவர்கள் சிலரும் இணைந்தனர். ஆனால் ஏற்கனவே தமிழீழப் பிரகடனத்தை தமிழர் கூட்டணியினர் செய்து அதற்கான பிரசாரத்தை வேகப்படுத்தி வந்தமையால் இயல்பான பேரினவாத முதலாளித்துவ வாதியான ஜே.ஆர். அதன் மீது வெறுப்புற்றவராகவே இருந்து வந்தார். ஏற்கெனவே தமிழரசுக் கட்சியின் மாநாட்டின் போது ஜே.ஆர். பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு மல்லாகத்திலிருந்து காங்கேசன்துறை வரை ஊர்திப் பவனியில் செல்வநாயகத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார் என்பது நினைவூட்டத்தக்கது.

இத்தகைய ஜே.ஆர். 1977ம் ஆண்டு தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ் முற்றவெளியில் சிகரம் கட்டி ஐக்கிய தேசியக் கட்சி கூட்டம் நடாத்தியது. ஜே.ஆர். பேச ஆரம்பித்த சிறிது நேரத்தில் கூட்டம் குழப்பப்பட்டது. ஒரு புறத்தில் தமிழ் இளைஞர்களும் மறுபுறத்தில் இடதுசாரி இளைஞர்களும் குழப்பத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். ஜே.ஆர். தனது பேச்சின் போது ''நான் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் அமர்ந்திருந்து தமிழரசுக் கட்சி மாநாட்டு ஊர்வலத்தில் இரண்டு மணி நேரம் ஊர்திப் பவனியாகச் சென்றேன். ஆனால் கண்டி யாத்திரை பற்றி ஒரு வார்த்தை தானும் செல்வநாயகம் தன்னிடம் கூறவில்லை'' என்று கூறினார். அத்துடன் கூச்சல் குழப்பம் செருப்பெறிகள் என இரு புறத்திலிருந்தும் மேடையை நோக்கி இளைஞர்களும் மக்களும் திரண்டனர். இதனாற் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்த முடியாது போகவே இடைநடுவில் கூட்டம் கைவிடப்பட்டது. அக் கூட்ட ஆரம்பத்தில் காமினி திசநாயக்கா மட்டுமே தனது பேச்சை முழுமையாகப் பேசி கொழும்பு திரும்புவதற்காகச் சென்று விட்டார். அன்று ஜே.ஆருக்கு கிடைத்த அவமானமானது கண்டி யாத்திரை சென்றமைக்கான தமிழ் மக்களின் முறையான கண்டனந்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் விருப்பத்தையும் மீறி இளைஞர்கள் வெளிப்படுத்தினர். அதில் இடதுசாரி இளைஞர்களும் தங்களுக்கான பங்களிப்பைச் செய்திருந்தனர். ஆனால் ஜே.ஆர். அச் சம்பவத்தைத் தனது பதவி ஏற்பிற்குப் பின் மறக்காது பேரினவாதப் பழி வாங்கலாக்கிக் கொண்டமை நோக்க வேண்டியதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வரப்போகும் 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிடச் சகல ஆயத்தங்களையும் செய்து வந்தது. அதே வேளை 1970-77 கால கட்டத்தில் பல்வேறு தொழிற்சங்க அரசியல் இயக்கங்களையும் சாதியத்திற்கு எதிரான தொடர் செயற்பாட்டையும் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்து வந்தது. அத்துடன் தமிழர் கூட்டணி பிரகடனப்படுத்திய தமிழீழத்திற்கு கொள்கை ரீதியான எதிர்ப்பையும் தெரிவித்து வந்தது. துண்டுப் பிரசுரங்களும்



சுவரொட்டிகளும் வெளியீட்டுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடாத்தி வந்தது. தமிழ் முதலாளி களைக் கொண்ட தனியார் துறையிலும் கூட்டுத்தாபன உள்ளூராட்சி மன்றங்களிலும், தொழிலாளர்களும் ஊழியர்களும் பிரச்சினைகளை முன்னெடுத்தும் வந்தனர். குறிப்பாக யாழ் மாநகர சபையின் தொழிலாளர்களும் ஊழியர்களும் இன்றும் அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகள் யாவும் அக் காலகட்டத்தில் போராடிப் பெற்றவைகள் தான் என்பது குறிப்பிட வேண்டியதாகும். அதே வேளை ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஒவ்வொரு மக்கள் விரோத, தொழிலாளி வர்க்க விரோத, தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதிலும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தனது புரட்சிகர நிலைப்பாட்டுடன் இருந்து வந்தது.

இச்சூழலிலேயே 1977ம் ஆண்டு யூலை மாதம் 21ம் திகதி இலங்கைப் பாராளுமன்றமான தேசிய அரசுப் பேரவைக்கான பொதுத் தேர்தல் இடம்பெற்றது. மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலை முற்றாகப் புறக்கணித்து பகிஷ்கரித்துக் கொண்டது. அதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் திற்கான மக்களின் ஆணையைப் பெறும் தேர்தல் எனக் கூறி அதில் வழமையான தேர்தல் நீரோட்டத்தில் நீச்சல் அடித்துசென்றது அனைத்துத் தொகுதிகளிலும் தமிழர் கூட்டணி வெற்றி பெறுவதன் மூலம் உலகிற்கு தமிழீழ கோரிக்கையின் ஞாயத்தை எடுத்து காட்டி அதனை வென்றெடுப்போம் என்றனர் ஆனால் மாக்சிஸ லெனினிஸ கம்யூனிஸ கட்சி தேர்தலை முற்றாக புறக்கணித்ததுடன் தமிழீழக் கோரிக்கையின் சாத்தியமின்மை பிறபோக்கு தனம் போன்றவற்றை மக்களுக்கு பல்வேறு கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலம் எடுத்து விளக்கியும் வந்தது. ஆனால் தமிழ்த் தேசிய இன உணர்வுக் பிரசாரமுமே மேலோங்கியது.

வளரும்.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 23

## அரசாங்கத்தை நடுங்க வைத்த மாபெரும் எழுச்சி

1953ம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டம் மக்கள் மீது ஏற்றிய சுமையின் காரணமாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட கொதிப்புணர்வை ஓகஸ்ற் 12ம் திகதியன்று நாடளாவிய ஒரு ஹர்த்தால் போராட்டமாக முன்னெடுப்பது என்ற முடிவை லங்கா சமசமாஜக் கட்சியும் சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்த ஃபிலிப் குணவர்தனவின் தலைமையில் அமைந்த புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி என்ற அமைப்பும் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியும் கூட்டாக எடுத்தன. 1940 முதலாகக் கடும் பகையுடனேயே நடந்து வந்த ட்ரொட்ஸ்கியவாதிகளுக்கும் கம்யூனிஸ்றுக்களுக்குமிடையே முழுமையான ஒற்றுமை கொண்ட ஒரு நடவடிக்கையாக இந்த ஹர்த்தாலைக் குறிப்பிடலாம். 1952ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஃபிலிப் குணவர்தனவின் தலைமையிலான கட்சியும் கம்யூனிஸ்றுக்களும் இணைந்து ஒரு அணியிற் போட்டியிட்ட போதும் அது எந்தவிதமான தெளிவான பொது அரசியல் வேலைத் திட்டத்தினதும் அடிப்படையிலான கூட்டணியாக அமைய இயலாமைக்குத் தத்துவார்த்த அடிப்படையிலான வேறுபாடுகளும் கட்சியமைப்புக்கள் தொடர்பான வேறுபாடுகளும் இருந்தன. சமசமாஜக் கட்சிக்கும் புரட்சிகர சமசமாஜக் கட்சிக்குமிடையிலான முரண்பாடு மிகவும் கடுமையானதாக இருந்தது. இதிற் கவனிக்க வேண்டியது என்னவென்றால் 1947ம் ஆண்டு ஒரே அணியில் இருந்த ஃபிலிப் குணவர்தனவும் என்.எம்.பெரேராவும் எதிரெதிர் அணிகட்குப் போனதும் தீவிரமான நிலைப்பாடெடுத்து இந்தியப் புரட்சியை நடத்தினாலே இலங்கைப் புரட்சியை நடத்தலாமென்று வாதித்து பொல்ஷெவிக் லெனி... றோர் என்.எம். பெரேராவின் நண்பர்களுடன் ஒட்டிக் கொண்டதுமாகும்.

இரண்டாம் உலகப் போரின் போதான ட்ரொட்ஸ்கிய நடத்தையின் பின்புலத்தில் ட்ரொட்ஸ்கியம் சர்வதேச அளவில் ஒவ்வொரு நாட்டிலும் செல்லாக் காசாகிப் போனாலும், இலங்கையில் மட்டும் அது செல்வாக்குடன் இருந்து வந்தது. இலங்கையில் ட்ரொட்ஸ்கியத்தின் பிதாவான ஃபிலிப் குணவர்தனவின் புரட்சி, பேச்சில் இருந்தளவில் சிந்தனையிலே செயலிலோ இருந்து வந்ததாகக் கூற இயலாது. அவர் பாராளுமன்ற அரசியல் எதிர்பார்ப்புக்களுடனேயே 1952ம் ஆண்டு கம்யூனிஸ்றுக்களுடன் கூட்டணி அமைத்தார் என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம். சமசமாஜக் கட்சியின் ''ஸ்டாலினிய'' விரோத வன்மம், சோவியத் யூனியனுக்கு எதிரான பகை உணர்வாக வலுவாகவே இருந்து வந்தது. எனினும் மக்களிடையில் இருந்த நியாயமான கோபத்தையும் அவர்கள் எதிர் நோக்கிய இன்னல்களையும் மனதிற் கொண்டு, இடதுசாரிகள் ஒன்றுபட்டது மெச்சத்தக்கது. 1940க்குப் பின், இது போன்று நியாயத்தின் அடிப்படையில் இடதுசாரிக் கட்சிகள் மக்களுக்காக ஒன்றுபட்டு மக்களை அணிதிரட்டிப் போராடிய முதற் தருணம் இதுவே. வருந்தத்தக்க விதமாக இதுவே அத்தகைய இறுதித் தருணமாயும் இதுவரை இருந்து வந்துள்ளது.

இடதுசாரிக் கட்சிகளும் அவற்றுக்குப் பின்னாலிருந்த தொழிற் சங்க அமைப்புக்களும் ஹர்த்தாலில் பூரண ஈடுபாட்டுடன் பங்குபற்றின. யூ.என்.பி. அரசாங்கத்திற்கு எதிரான அனைத்து அரசியற் கட்சிகளதும் அமைப்புக்களதும் மக்களதும் ஆதரவை வேண்டி, மூன்று கட்சிகளும் அவை சார்ந்த தொழிற்சங்க நிறுவனங்களும் அழைப்பு விடுத்தன. ஏ.ஈ.குணசிங்ஹவின் மகனின் தலைமையிலிருந்த இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமும் ஹர்த்தாலில் பங்குபற்றுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தது. பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. அதிற் பங்குபற்ற மறுத்தது. ஆயினும் தனது ஆதரவைத் தெரிவித்தது. தோட்டத் தொழிலாளரிடையே ஏறத்தாழ ஏகபோகஞ் செலுத்திய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற மறுத்தது. ஆனாலும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துத் தனியே கூட்டம் நடத்துவதாக அறிவித்தது. இன்று பலரையும் வியக்கச் செய்யக் கூடிய விதமாகத், தமிழரசுக் கட்சி ஹர்த்தாலில் பங்குபற்றுவதாக அறிவித்தது.

பண்டாரநாயக்காவின் நழுவற் போக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையின் சந்தர்ப்பவாதமும் அவர்களுடைய வர்க்க நலன்களதும் நிலைப்பாடுகளதும் கண்ணோட்டத்தில் நாம் எதிர் பார்த்திருக்கக் கூடியவையே. தமிழரசுக் கட்சி தனது நீண்ட வரலாற்றில் எடுத்த மெச்சத்தக்க ஒரே அரசியல் நடவடிக்கை ஹர்த்தால் என்றே சொல்லலாம். இது எப்படி இயலுமானது என்றால், அதற்குச் சில முக்கியமான காரணங்கள் இருந்தன. தமிழரசுக் கட்சி நிறுவப்பட்ட காலம் முதலாக அதைக் கூட்டங்கள் நடத்த விடாமல் தமிழ்க் காங்கி ரஸ் ஆதரவான காடையர்கள் குழப்பி வந்தபோது, வட பிரதேசக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தமக்கு ஆதரவான மக்களை அணி திரட்டிக் கூட்டங்களை நடத்தத் தமிழரசுக் கட்சியினருக்கு இயலுமாக்கியமை. மற்றது அதன் எதிரியான தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்தில் கூட்டாளியாக இருந்து வந்தமை. மக்களால் வெறுக்கப்பட்ட ஒரு ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பது தமிழரிடையே கணிசமான தொகையினரான நடுத்தர வர்க்கத் தமிழ் அரசாங்க ஊழியரிடையே அதற்கு ஒரு ஆதரவுத் தளத்திற்கு வழி செய்யும் என்ற கணிப்பும் ஒரு காரணமாயிருந்திருக்கலாம். அதை விடப், பாராளுமன்றத்தில் இருந்த ஒரே வட பிரதேசத் தமிழரசுக் கட்சித் தலைவரான வன்னியசிங்கம் நிதானமும் பொறுப்புணர்வுமுடைய ஒருவராக இருந்தமையும் தமிழரசுக் கட்சியின் இந்தச் சரியான முடிவுக்கு உதவியது.

ஹர்த்தாலை ஏற்பாடு செய்த இடதுசாரித் தலைவர்கள் எதிர்பார்த்ததை விட வலுவான ஆதரவு ஹர்த்தாலுக்குக் கிட்டியது. அனைத்து அரசாங்க நாட்சம்பள ஊழியர்களும் பெரிய தனிநபர் கம்பனி ஊழியர்களும் துறைமுக போக்கு வரத்து கொழும்பு மாநகரசபை ஊழியர்களும் உட்படப் பல தொழில் நிறுவன ஊழியர்களும் மேற்கொண்ட நடவடிக்கையால், ஓகஸ்ற் 12ம் நாள் காலை 11.00 அளவில் நாடே செயற்பாடற்றுப் போயிற்று. மரங்கள் வெட்டப்பட்டுப் பெரு வீதிகளின் குறு க்கே பொலிஸ் ராணுவப் போக்குவரத்திற்கு இடையூறாக இடப்பட்டன. தந்திக் கம் பங்களும் வீதிகட்குக் குறுக்காகச் சரிக்கப்பட்டன. புகையிரதப் பாதைகள் சேதப்படுத்தப்பட்டன. தெற்கே சென்ற ஒரு புகையிரதத்தை மக்கள் வழிமறித்துக் கைப்பற்றினர். மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் ஹர்த்தாலுக்கு மக்களின் வெகு உற்சாகமான ஆதரவு இருந்தது. சப்ரகமுவ மாகாணத் திலும் கிழக்கிலும்



மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறிப்பிடத் தக்களவில் பங்குபற்றல் இருந்தது. ஹர்த்தால் நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் மக்களது ஆதரவைப் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. அவ்வாறே தோட்டத் தொழிற் சங்கத் தலைமைகளை மீறித் தொழிலாளரில் அரைவாசிப்பேர் வேலைக்குச் செல்லாமல் ஹர்த்தாலில் பங்கு பற்றியமையும் கவனிக்க உகந்தது.

அரசாங்கத்தால் இந்த மக்கள் எழுச்சிக்கு முகங் கொடுக்க இயலாது போயிற்று. எனவே அமைச்சரவையின் கூட்டம் கடலில் நங்கூரமிடப்பட்ட ஒரு கப்பலில் அன்றிரவு நடைபெற்றது. மக்களின் கொதிப்பிற்கு முகங்கொடுக்க இயலாத அரசாங்கம், ஹர்த்தாலின் வெற்றிக்குப் பழி வாங்கும் விதமாக அவசரகாலச் சட்டத்தைப்பிரகடனம் செய்து ஊரடங்கை நடைமுறைப் படுத்தியது. இதற்கு முன்பு, 1915ம் ஆண்டில் சிங்கள-முஸ்லிம் கலவரத்தின் போதே அவசர காலச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. ஹர்த்தாலின் போது பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் வெவ்வேறு இடங்களில் எல்லாமாகப் பன்னிரண்டு பேர்வரையிற் சொல்லப்பட்டனர். எனவே அரசாங்கம் தனது கடும் நடவடிக்கை மூலம் எதிர்ப்பியக்கத்தை முறியடிக்க முற்பட்டது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 1500 பேர் வரையில் கைதாகினர். எனினும் தொழிற்சங்க, அரசியற் கட்சித் தலைவர்களைக் கைது செய்ய இயலவில்லை. இடதுசாரிக் கட்சிகளது அலுவலகங்கள் உடைத்து நொறுக்கப்பட்டன. எதிர்க் கட்சிப் பத்திரிகையின் அலுவலகங்கள் மூடப்பட்டன. ஹர்த்தாலை ஆதரித்த கொழும்பு மாநகரசபை இடைநிறுத்தப்பட்டது. மொரட்டுவ நகரசபை கலைக்கப்பட்டது. கூட்டங்களும் ஊர்வலங்களும் தடைசெய்யப்பட்டன. பொலிஸ் ராணுவ அடாவடித்தனத்தால் பல நூறுபேர் காயமடைந்தனர்.

ஹர்த்தால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் நாட்டில் புரட்சிகர ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்று சிலர் வெகுகாலங் கடந்து கற்பனையில் இறங்கியுள்ளனர். அது யதார்த்தத்திற்குப் பொருந்தாது. ஆனால் ஹர்த்தால் போராட்டத்தை மேலுஞ் சில நாட்களேனும் தொடர்ந்து நடத்தி அதன் மூலம் மக்களை அரசி யல் மயப்படுத்தியிருக்க இயலும். அங்கே இடதுசாரித் தலைமைகள் தவறிவிட்டன. அது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

முதலாவதாக இடதுசாரித் தலைமைகள் ஒரு நாட் போராட்டத்திற்கு மேலாக எதையுமே திட்டமிட்டிருக்கவில்லை. இரண்டாவதாக அரசாங்கத்தினளவுக்கு அவர்களும் ஹர்த்தாலின் வெற்றியின் அளவை எதிர்பார்த்திருக்கவில்லை. மூன்றாவதாக அப் போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாக வளர்ந்து காலப் போக்கில் ஆயுதக் கிளர்ச்சியாக விருத்தியடைகிறதற்கு இடதுசாரித் தலைமையின் பாராளுமன்றச் சீர்திருத்தவாதப் போக்கு அனுமதித்திருக்குமா என்பது முக்கியமான பிரச்சினை. ஏனெனில் மூன்று இடதுசாரிக் கட்சிகளினது தலைமைகளும் 1947 முதல் பாராளுமன்றப் பதவிகளின் மூலமான சமூக அந்தஸ்த்திலும் அதிகாரத்திலும் சொகுசுகளிலும் விருப்பங்கொள்ள தொடங்கிவிட்டனர். அவர்களது கட்சிகளின் அதிகாரம் பாராளுமன்ற பிரதிநிதிகளின் கைகளிலும் அவர்களுக்கு உடன்பாடான தொழிற்சங்கத் தலைமைப் பீடத்தினரது கைகளிலும் இருப்பது அவர்கட்கு வசதியாய் இருந்தது. மக்கள் அரசாங்கத்தை எதிர்த்தளவுக்கு ஒரு மாற்று அரசாங்கம் பற்றி அப்போது சிந்திக்கவில்லை. மாற்று அரசாங்கத்திற்கு ஆயத்தமானோர் கூட ஒரு மாற்று ஆட்சிமுறை பற்றிச் சிந்திக்கவில்லை. எனவே மக்கள் எதற்காகப் போராடினர் என்பதை விளங்கிக் கொள்ளாமல் அவர்கள் புரட்சிக்கு ஆயத்தமாய் இருந்தனர் என்று கூறுவது பொருந்தாது. அவர்கள் போராடி அரசாங்கத்தைப் பணிய வைக்க ஆயத்தமாய் இருந்தனர் என்பது உண்மை. ஹர்த்தாலை மேலும் சில நாட்கள் தொடரவும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று மக்கள் போராடவும் வாய்ப்பு இருந்தது. அது நடந்திருந்தால் மக்கள் அதன் மூலம் பெற்ற பாடங்கள் பின்னைக் கால இடதுசாரி இயக்க வளர்ச்சிக்கு ஒரு வலுவான ஆதாரமாகியிருந்திருக்கும். இடதுசாரிக் கட்சிகளின் தலைமை அதற்கு வழி செய்யத் தவறியமை விமர்சனத்துக்குரியது. அதே வேளை அது அத் தலைமையில் மேலோங்கி வந்த வர்க்கக் கண்ணோட்டத்தையும் அடையாளப் படுத்தியது.

ஹர்த்தாலால் இரண்டு அரசியல்வாதிகள் நன்மை பெற்றனர்.



ஒருவர் சேர் ஜோன் கொத்தலாவல. மற்றவர் பண்டாரநாயக்க. ஹர்த்தாலை அடுத்த காலத்து ராணுவக் கொடுமையின் பின்பு தன்னால் ஆட்சியில் தொடர முடியாது என்று டட்லி சேனநாயக்க பதவி விலகினார். அப் பதவிக்காகக் காத்திருந்து ஏமாந்த கொத்தலாவல தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அவரால் நீண்டகாலம் ஆட்சியில் நிலைக்க முடியவில்லை. யூ.என்.பி ஆட்சிக்கு எதிரான மக்கள் உணர்வை வெளிப்படுத்திய ஹர்த்தாலின் பயனாக பண்டாரநாயக்காவால் யூ.என்.பி ஆட்சிக்கு எதிரான மக்கள் உணர்வை வெளிப்படுத்திய ஹர்த்தாலின் பயனாக பண்டாரநாயக்க யூ.என்.பிக்கு எதிரான ஒரு மாற்றுச் சக்தியாகத் தன்னை அடையாளப்படுத்தி மக்களின் நடுவே இருந்துவந்த பல்வேறு மனக்குறைகளைப் பயன்படுத்த ஒரு தேர்தல் அரசியல் உபாயத்தைத் திட்டமிட்டார். ஹர்த்தாலை மேலும் நீடித்து மக்களை அரசியல் ரீதியாக வளர்த்து ஒரு போராட்டச் சக்தியாக்கும் வாய்ப்பைத் தவறவிட்ட இடதுசாரிகளின் இழப்பு பண்டாரநாயக்கவின் லாபமாயிற்று.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றமும் நில அபகரிப்பும்

2006ம் ஆண்டின் மாவிலாற்றில் தொடங்கிய வடக்கு கிழக்கு நோக்கிய போர் 2009 மே 19 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. புலிகள் தோற்கடிக்கப்பட்டதும் தமிழ் மக்கள் அகதிகளாக்கப் பட்டமையும் உலகறிந்த விடயமாகும். முதலில் வெற்றி கொள்ளப்பட்டதாக அரசாங்கம் உரிமை கொண்டாடிய கிழக்கில் மீள் குடியேற்றம் இடம்பெற்று முடிந்துள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இன்னும் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டிய கிராமங்களும் இருந்து வருகிறதாகவே பொதுவான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதில் அரசாங்கத்திற்கு உள்ளார்ந்த நோக்கங்கள் இருந்து வருகின்றன. பாரம்பரிய தமிழ், முஸ்லீம் மக்களது பிரதேச வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் சத்தமின்றிச் செய்து கொள்வது. அதற்கு முன்னோடியாக பௌத்த விகாரைகளைத் தோற்றுவித்து அதற்கு பூர்வீக நியாயங்களைக் கற்பிதம் செய்வது. இதற்கு ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியினரும் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் கூறும் நியாயம் மூவின மக்களும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதாகும். இவற்றை நடைமுறைப்படுத்த திருகோணமலை, அம்பாறை, அரசாங்க அதிபர்கள் முற்றிலும் பேரினவாத அதிகார நடைமுறைப்படுத்தல்களைச் செய்து வருகிறார்கள் என்ற குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. இவை அனைத்திற்கும் அரசாங்க அதியுயர் பீடங்களில் இருந்து சம்மதம், ஆணைகள், பச்சைக் கொடிகள் காட்டப்பட்டும் வருகின்றன.

இவை திட்டமிட்ட வகையிலும் தனிப்பட்ட நில அபகரிப்புகளாகவும் முற்றிலும் இனவாத நோக்கிலேயே கிழக்கில் இடம்பெற்று வருகின்றன. இவற்றைக் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும் உறுப்பினர்களும் உட்படப் பலர் சுட்டிக்காட்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. இதனைப் பாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதே வேளை, அபகரிக்கப்பட்டு வரும் முஸ்லீம் தமிழ் மக்களது நிலங்கள் பற்றி விரிவான ஏக்கர் - பரப்பு புள்ளிவிவரங்களைக் குறிப்பிட்டு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றி இருந்தார். அதன் மூலம் நில அபகரிப்பு உயர் அதிகாரிகளினதும் பேரினவாதிகளதும் தூண்டுதலில் நடைபெறுவதைக் காண முடிகிறது.

மேலும், கிழக்கில் சில வளமான காணிகளை அந்நிய முதலீட்டாளர்களுக்கும் உள்ளூர் முதலாளிகளுக்கும் வழங்கும் முயற்சிகள் கச்சிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலக் குத்தகையும் நில விற்பனையும் மாகாண சபையின் முதலமைச்சர் முதல் தமிழ் முஸ்லீம் உறுப்பினர்கள் வரை யாருக்கும் தெரியாதவாறு, "சிறுபான்மை இனம் என்ற ஒன்று இந்நாட்டில் இல்லை என்ற ஜனாதிபதியின் நோக்கத்திற்கும் போக்கிற்கும் உட்பட்டதாகவே யாவும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் அடிப்படையிலேயே கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரில் 500 ஏக்கர் நிலம் இந்தியாவிற்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது. அனல் மின்நிலையம் உருவாக்குவதற்காக அப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுப், பன்நெடுங்காலமாக அப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வது தடுக்கப்பட்டுள்ளது. வளமான விவசாய நிலங்களையும் குடியிருப்புக்களையும் கொண்ட பாரம்பரிய நிலங்களில் இருந்து சுமார் ஏழாயிரம் மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து மீள முடியாது முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். உரு வாகப்பட உள்ள அனல் மின் நிலையம் கட்டுமான வேலைகளுக்காக ஒரு சில முஸ்லிம்களும் சேர்க்கப் படலாம். ஆனால் சம்பூரைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் முன்பு வைத்திருந்த புலிகளின் செயற்பாட்டைக் காரணங் காட்டித் தமிழ் மக்கள் முற்று முழுதாகப் புறக்கணிக்கவே படுவார்கள். இதுவே ஏற்கனவேயும் திருகோணமலையின் துறைமுகம் உள்ளிட்ட அபிவிருத்திகளில் இடம்பெற்ற இன ஒதுக்கல் கொள்கைகளாகும். இதில முன்னாள் இராணுவ அதிகாரியான ஒருவர் அரசாங்க அதிபராக இருத்தி வைக்கப்பட்டு வருவதன் மூலம் பல விடயங்கள் பேரினவாதத் திசையிலேயே இடம் பெற்றும் வந்துள்ளன. இவ்வாறே அம்பாறை மாவட்ட நிலைமையும் இருந்து வருகிறது. அதனாலேயே தமிழ் பேசும் மக்களுக்கான தனிப் பிரதேச செயலர் பிரிவு வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸினர் வலியுறுத்தியும் வருகின்றனர் அம்பாறை தமிழ் முஸ்லிம் மக்களைக் கூறு போடுவதிலும் அவர்களது இன விகிதாசாரத்தைக் குறைத்துச் சிங்கள மக்களை முற்றிலும் பேரினவாதச் சிந்தனை க்கு உட்படுத்திக் குடியேற்றங்களை விஸ்தரித்து வருவதிலேயே கண்ணும் கருத்துமாகவே இருந்து வருகிறார்கள்.

கிழக்கின் நிலை இவ்வாறெனில் வடக்கு நிலை போருக்குப் பின்னான தற்போதைய சூழலில் எத்தகைய நோக்கிலும் போக்கிலும் உள்ளது என்பது முக்கியமானதாகும். ஏனெனில் 5/19க்குப் பின் ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் மீளக் குடியமர்த்தப்படவில்லை. கண்ணிவெடி அகற்றல் என்பதன் கீழ் மீள் குடியேற்றம் தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே செல்லப்படுகிறது. இக் கண்ணிவெடி அகற்றுதல் என்பதற்கு அப்பால் வேறு உள்நோக்கிலான திட்டங்கள் இருந்து வருகின்றன. அவற்றில் மூன்று விடயங்கள் அடையாளங் காணக் கூடியன. அவை ஊகங்களாயினும் அவற்றுக்கான சாத்தியங்கள் இருக்கின்றன. ஒன்று, வன்னிப் பிரதேசத்தை முழுமையான ராணுவக் கட்டுப்பாடு கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதற்கான ராணுவக் கட்டமைப்பை உருவாக்குதல். இரண்டாவது. ஆங்காங்கே முக்கியத்துவமுடைய பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திப் பாதுகாத்து முன்னெடுத்தல். அதன் மூலம் கிழக்கைப் போன்று வடக்கிலும் மூவின மக்களும் சமனாக வாழக் கூடிய பிரதேசமாக மாற்றி தனித்தமிழ்ப் பிரதேச அடையாளத்தை காலப் போக்கில் இல்லாதொழித்தல். மூன்றாவது அந்நிய முதலீடுகளுக்கான இடங்களையும் வளங்களையும் கண்டறிந்து மீள் குடியேற்றத்தின் போது அவ்விடங்களில் மக்கள் செல்லாதவாறு மாற்று இடங்களு க்கு அனுப்புதல். இது ஏற்கனவே சம்பூரில் செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பெருமுதலீட்டாளர்களும் நிறுவனங்களும் முனைப்புக்காட்டி நிற்கின்றன. ஏற்கெனவே உயர் பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை இந்தியப் பெருமுதலாளித்துவ நிறுவனமான பிர்லா குழுமத்திற்குக் கையளிக்கப்பட்டதுடன் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியும் இந்தியாவிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

மேற்படி திட்டங்கள் நோக்கங்களை விளங்கிக் கொண்டதாலேயே இந்திய மத்திய ஆளும் வர்க்கத் தரப்பு போரின் போது மட்டுமன்றி போருக்குப் பின்பும் இலங்கை அரசாங்கத்திற்குத் தன் மௌன அங்கீகாரத்தை வழங்கி வருகின்றது. முழு இலங்கையையும் தனது கொலனியாதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவே இந்தியா விரும்புகிறது. சீன, பாகிஸ்தான் பூச்சாண்டி காட்டிக் கொண்டு குறிப்பாக வடக்கு கிழக்கில் தனது கால்களை இறுகப் பதித்துக் கொள்ளவே இந்தியா செயலாற்றி தனது காய்களை நகர்த்தி வருகிறது.

இவ்விடத்திலே வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் தான் தமக்கான எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர். நாட்டிற்குள் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் நாட்டிற்கு வெளியே இந்திய, அமெரிக்க மேற்குலக யப்பானிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளும் வடக்கு கிழக்கைச் சாட்டாக வைத்த முழு நாட்டையும் தத்தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முனைந்து நிற்கின்றன. அதே வேளை அவற்றுக்கிடையிலான உள்ளார்ந்த போட்டிகளும் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக ஏதோ வடக்கு கிழக்கு மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவை பரிந்து பேசுவது போன்றும் தோற்றம் காட்ட முற்படுகின்றன. அதற்கான காட்சிகளையும் அறிக்கைகளையும் காண முடிகிறது.

மேற்கூறியவாறு ஒன்றுடன் ஒன்றை தொடர்புபடுத்தி விடயங்களை அணுகி ஆராயும் போதே இன்றைய அரசாங்கத்தின் நோக்கையும் போக்கையும் அதன் நகர்வுகளையும் கண்டு கொள்ள முடியும். இந் நிலையில் வடக்கு கிழக்கின் மக்கள் வெறுமனே தூர நோக்கற்ற உறுதியற்ற கொள்கைகளுடன் முன் செல்ல முடியாது. இத்தனைக்குப் பின்பும் இந்திய ஆளும் வர்க்கத்திடம் எதிர்பார்த்து நிற்பதற்கு எதுவும் இல்லை என்பது உணரப்பட வேண்டும். அதே போன்று வெறுமனே பாராளுமன்றம் செல்வதற்கு அளவான கொள்கைகளையுடைய தமிழ் முஸ்லீம் கட்சிகளின் குறுகிய நோக்குடைய நிலைப்பாட்டாலும் வடக்கு கிழக்கு மக்கள் விமோசனம் பெறமுடியாது. எனவே இதுவரையான தோல்வி கண்ட அரசியல் பாதைகளில் பயணிப்பதை தவிர்த்து மக்கள் அணிதிரளும் வெகுஜனப் போராட்டப் பாதையில் பயணிப்பதற்கான உறுதியான கொள்கைகளை வகுத்து முன் செல்ல வேண்டும். அதுவே எதிர்காலத்திற்கான விமோசனப் பாதையாகும்.

- சண்முகம் -



# ஒரு பொதுவுடைமைவாதியின வாழ்வும் நினைவும்

உலகின் ஒவ்வொரு நாட்டிலும் பொதுவுடைமைவாதிகள் இருந்து வருகிறார்கள். அவர்கள் நாடு இனம் நிறம் மொமி பண்பாடு போன்றவற்றால் வேறுபட்டவர்களாயினும் மாக்சிச உலக நோக்கினாலும் மாக்சிசம் லெனினிசம் என்றும் பொது மொழியினாலும் ஒன்றுபட்டவர்கள். அதனால் அவர்கள் சர்வதேசியவாதிகள். இவை அவர்களது வாழ்விலும் அன்றாட செயல்களிலும் கெட்டியாகப் படிந்திருப்பவை. அவர்களது இலக்கும் பயணமும் முழு மனிதகுல விடுதலை நோக்கியதாகும். அதனைச் சொந்த நாட்டினதும் மக்களினதும் விடுதலையில் இருந்தே ஆரம்பிக்கிறார்கள். இந்தப் பயணத்தின் முதல் அடியினை ஒவ்வொரு பொதுவுடைமைவாதியும் தத்தமது குடும்பங்களில் இருந்தே எடுத்து வைத்தே ஆரம்பிக்கிறார்.

அத்தகைய பொதுவுடைமைவாதிகளில் ஒருவராகவும் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும் வாழ்ந்து செயலாற்றி மறைந்தவர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம். தோழர் மணியம் அல்லது மணியம் தோழர் எனக் கட்சித் தோழர்களாலும் மக்களாலும் தோழமையுடனும் அன்போடும் அழைக்கப்பட்டவர் கே.ஏ. சுப்பிரமணியம். அவரது வாழ்வும் பணியும் நினைவும் விரித்து நோக்கப்பட வேண்டியது. அது விரைவில் செயலாக்கம் பெறும். இதனை அதற்கான சிறு குறிப்பு என்றே கொள்ளப்பட முடியும்.



தோழர் மணியம் சுமார் நாற்பது ஆண்டுகள் வரை பொதுவுடைமைவாதியாக முழு நேர அரசியலில் உழைத்து வந்தவர். அந்த உழைப்பு தனிமனித ஈடேற்றத்திற்கான உழைப்பு அல்ல. மனிதகுல விடுதலை என்ற மகத்தான இலட்சியத்தை வென்றெடுப்பதற்கான உழைப்பு. அதனை உழைப்பு என்பதைவிடத் தவம் இயற்றியமை என்று கூறலாம். அதிலும் கடும் தவம் புரிந்தவர் தோழர் மணியம். தனதும் தனது குடும்பத்தினதும் ஈடேற்றத்திற்கு வரம் வேண்டிய நின்ற ஒருவர் அல்ல. இலங்கையின் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவிற்காகப் போராடியவர். குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் வர்க்க சாதிய நிலைகளில் காணப்பட்ட ஒடுக்குமுறைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிரான பொதுவுடைமைக் கட்சி முன்னெடுத்த கொள்கை வழிப்பட்ட போராட்டத்தில் நம்பிக்கை தரும் தலைமைத்துவப் பாத்திரத்தை வகித்து நின்றவர் தோழர் மணியம். அத் தலைமைத்துவதற்கு வெறும் நியமன மூலம் வந்த ஒருவர் அல்ல அவர். மக்கள் மத்தியிலான வேலைகளின் ஊடாகவும், கட்சி அமைப்புகளின் அணி திரட்டல் மூலமாகவும், அவற்றுடன் கூடிய வெகுஜன அரசியல் வேலை முறைகளையும், போராட்டங் களின் முனைகளைத் திறந்து முன்னெடுத்தமை மூலமாகவும் அவரது தலைமைத்துவ ஆற்றல் விருத்தி பெற்று வந்தது. பொதுவுடைமைவாதிகள் மீன்கள் போன்றவர்கள். மக்கள் தண்ணீர் போன்றவர்கள். தண்ணீரில் இருந்து மீன்களை வெளியே எடுத்தால் இறப் புத்தான் நிகழும். அது போலவே பொதுமக்கள் மத்தியிலிருந்து பொதுவுடைமைவாதிகள் வெளியே வந்தால் அவர்களுக்கும் அதுவே ஏற்படும். இந்த உதாரணம் தான் பொதுவுடை மைவாதிகளின் வாழ்வுக்கு வழிகாட்டியாகும்.

வடபுலத்து சமூகச் சூழல் மிகவும் சிக்கலானதும் சில வேளைகளில் மிகப் பொல்லாததுமாக இருந்து வந்ததாகும். அத்தகைய சமூக-குடும்பச் சூழல் விதிக்கும் எல்லைகளையும் சமூக பண்பாட்டு விழுமியங்களின் பழைமைவாதப் பிற்போக்குத் தன்மைகளையும் மீறி ஒருவர் பொதுவுடைமைவாதியாகவும் அதிலும் முழுநேர ஊழியராகவும் வருவதென்பது துணிவும் தூர நோக்குமுடைய ஒரு சிலருக்கே முடியக் கூடியதாகும். அது மட்டுமன்றித் தான் வரித்துக் கொண்ட கொள்கை நடைமுறைகளை ஏற்கனவே கெட்டியாக உள்ள சமூக மத பண்பாட்டு நடைமுறைகளுடன் எச் சந்தர்ப்பத்திலும் சமரசத்திற்கு உட்படுத்தாது வாழும் வாழ்க்கையானது தான் அற்புதமான வாழ்க்கையாகும். அவ்வாறே ஏகாதிபத்தியம் காலத்திற்குக் காலம் விரித்து வரும் நச்சுப் பண்பாட்டம்சங்கள் என்ற வலைகளில் வீழ்ந்து கொள்ளாது இவ்வாறு தான் வாழ வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாய் வாழ்ந்து சென்றவரும் தோழர் மணியம் என்பது நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

அவர் நிலவுடைமைக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் கொண்ட பழைமைவாத கிராமச் சூழல் உடைய ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர். ஆனால் அவர் மாக்சிச உலக நோக்கை தெளிவாகவும் உறுதியாக பற்றி நின்று உள்வாங்கிக் கொண்டமையால் பழைமைவாதத்தை முற்றாகக் களைந்து நின்றார். அதனாலேயே தற்பெருமை, தன்முனைப்பு, புகழ் நாட்டம், பதவி மோகம், பணம் சேர்ப்பு, ஆடம்பர வாழ்வு, அனைத்தையும் துறந்ததொரு வாழ்வை மேற்கொண்டார் தோழர் மணியம். இவ்வாறான ஒரு வாழ்க்கை முறை அவருக்கு பல்வேறு வாழ்க்கைக் துன்பங்களைக் கொண்டு வந்து சேர்த்தது என்பது உண்மையே. இல்லாமையும் பற்றாக் குறையும் காரணமாக அடிப்படைத் தேவைகளின் ஆகக் குறைந்தவற்றைக் கூட அவரது குடும்பம் பெற முடியாமல் இருந்தது ஆனால் தானே விரும்பி மணம் முடித்த மனைவி குடும்பத்தின் வாழ்வுப் பாரத்தைச் சுமந்து தோழர் மணியம் வழி நடந்த பொதுவுடைமை இலட்சியப் பயணத்தில் கூடவே வழி நடந்தார் என்பது குறிப்பிட வேண்டியதாகும். ஒவ்வொரு ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் இருக்கிறாள் என்று பொதுவாகக் கூறப்படும் கூற்று ஆணாதிக்கம் மிக்க தொன்றாகும். ஆனால் ஒரு பொதுவுடைமைவாதியின் இலட்சியப் பயணத்திற்கு பெண்கள் துணையாகவும் இணை யாகவும் வழிநடப்பதென்பது மாக்சிச லெனினிச அறம் சார்ந்த ஒன்றாகும். அதனை தோழர் மணியத்தின் குடும்ப வாழ்வில் காண முடிந்தது.

தோழர் மணியம் தலைமைத்துவ ஆற்றல் மிக்கவராக இருந்தார் என்பதற்கு அவரது காலத்தில் இடம்பெற்ற வெகுஜன தொழிற்சங்கப் போராட்டங்கள் சான்று பகரும். அதே வேளை கட்சியை அமைப்பு ரீதியாகக் கட்டியெழுப்பதிலும் வழிகாட்டும் பாத்திரத்தை வழங்கி வந்தமை என்றும் நினைவுக்குரியவையாகும். குறிப்பாக இலங்கையில் பொதுவுடைமை இயக்கப் பரப்பில் திரிபுவாதம், அதிதீவிரவாதம் தனிமைவாதம் சீர்குலைவுவாதம் போன்றவற்றுக்கும் அப்பால் நிதானமான நேர்மைமிக்க ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியின் அவசியத்தை மாஓ சேதுங் சிந்தனை வழிகாட்டலில் கட்டியெழுப்புவதில் உறுதியாக இருந்தவர் தோழர் மணியம். தூர நோக்கிலான அவரது வழிகாட்டலிலேயே இன்றைய புதிய ஜனநாயக கட்சி உறுதியான மாக்சிச லெனினிசக் கட்சியாக வளர்ந்து வந்திருக்கிறது. அத்தகைய வளர்ச்சிக்கு தோழர் மணியத்தின் பங்களிப்பு பாரிய தொன்றாகும்.

தோழர் மணியம் தனது 59வது வயதில் 1989ம் ஆண்டு நவம்பர் 27ஆந் திகதி இயற்கை எய்தினார். அவர் கட்சியின் வாழ்வோடும் எதிர் கொண்ட போராட்டங்களோடும் மட்டுமன்றி ஏற்பட்ட உள்வெளிக் காயங்கள், நோய்களோடும் போராடியவாறே உயிர் நீத்தார். இறுதி நேர வாழ்வின் போதும் கட்சி மக்கள் போராட்டங்கள் போன்றவற்றின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு நம்பிக்கையுடனேயே உயிர் நீத்தார். அவரது நம்பிக்கை வெறும் தனிமனித ஈடேற்றத்திற்கான நம்பிக்கை அல்ல. மனித குலவிடுதலை என்ற மகத்தான இலட்சியத்தின் மீதான நம்பிக்கை. அதனை நமது கட்சியின் ஊடாகவும் தன்னோடு பயணித்த தோழர்கள் நண்பர்கள் குடும்பத்தவர்கள் என்போருக்கு ஊடாகவும் எதிர்பார்த்தவாறே இயற்கையுடன் கலந்தார். அந்த நம்பிக்கைக்கு என்றென்றும் சேவை செய்வதில் நம்மை மேலும் அர்ப் பணிப்போமாக! அதுவே தோழர் மணியத்திற்குரிய பெறுமதி மிக்க நினைவுகூரலாகும்.

சி.கா.செ.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர்களும் தமிழீழமும் ⟷ யூதர்களும் இஸ்ரேலும்

விடுதலைப் புலிகளின் தலைமையின் சனநாயகமின்மையும் மக்கள் சாராத அரசியலும் சுத்தமான ராணுவ அணுகு முறையும் போரில் அதன் தோல்விக்கு முந்திய சில மாதங்களில் பாரிய பல தவறுகட்குக் காரணமாயிருந்தன. ஒரு விடுதலைப் போராட்டம் வரன்முறையான போரிற் தோல்வியை எதிர் நோக்குகிற போது, அது மாற்று வழிகளைத் தேடுகிறது. போராட்ட முறைகளை மாற்றித் தன்னைத் தற்காக்கவும் அதிலும் முக்கியமாக மக்களுக்குப் பாதுகாப்பைப் பெற்றுத் தரவும் முயல்கிறது.

விடுதலைப் புலிகளின் விடயத்தில் முன்னர் இவ்வாறு நடந்துள்ளது. இம்முறை ஏன் நடக்கவில்லை? இறுதி இரண்டு மூன்று மாதங்களில் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தினர் என்ற குற்றச் சாட்டை நியாயப்படுத்துகிற விதமாகவே அவர்களது நடத்தை அமைந்திருந்தது. கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பிறகு, விடுதலைப் புலிகளின் தலைமையை மேற்குலகக் குறுக்கீட்டின் மூலம் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கை பல்வேறு வடிவங்களில் ஊட்டப்பட்டு வந்துள்ளது என்பதற்கு ஆதாரமாகவே புலம் பெயர்ந்த விடுதலைப் புலி ஆதரவுப் பிரமுகர்களதோ விடுதலைப் புலிகளினதோ நேரடி அல்லது மறைமுகக் கட்டுப்பாட்டில் உள்ள இணையத் தளங்களும் விடுதலைப் புலிகட்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிட்டுப் பழகிய ஊடகங்களும் நடந்து கொண்டுள்ளன.

இவற்றைத் தற்செயலானவை என்றோ ஒரு சிலரது தவறுகள் என்றோ தட்டிக் கழிக்க இயலாது. இவற்றுக்குப் பின்னாற் செயற்படுகிற சிந்தனைகள் உள்ளன. அதிகார வலைப் பின்னல்கள் உள்ளன. அவை தம்மை இடையிடையே வெளிக் காட்டிக் கொள்கின்றன.

ஒபாமாவுக்கு ஆதரவான தமிழர்கள் என்றொரு குழுவினர் சனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரித்தும் அவருக்காக நிதிதிரட்டி வழங்கியும் தமிழரை ஆதரிக்குமாறு அவரை வற்புறுத்தலாம் என்று நம்பினர். இன்னமும் ஒபாமாவை நம்புகின்றனர். ஒபாமாவும் திருமதி கிளின்றனும் தமிழருக்கு அனுதாபமாகவும் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கரிசனை தெரிவித்து நாலு சொற்கள் பேசியதற்கும் மேலாக எதுவுமே வெல்லப்படவில்லை என நாம் அறி வோம்.

இன்னொரு புறம் அமெரிக்க அரசியல், ஊடக நிறுவனங்களிற் செல்வாக்கு மிகுந்த யூத அமைப்புக்கள் மூலம் தமிழீழ விடுதலைக்கோ தமிழருக்குச் சாதகமான ஒரு தீர்வுக்கோ வழி தேடலாம் என்ற பாதையிற் போகிற போக்கு உருவாகியுள்ளது. எலி வீஸெல் என்கிற நொபெல் பரிசாளரான யூதப் பிரமுகர் இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்ததற்கு விடுதலைப் புலி ஆதரவு இணையத் தளங்கள் முக்கியத்துவம் அளித்திருந்தன. இந்த மனிதாபிமானி இதுவரை இஸ்ரேலின் மனித உரிமை மீறல் எதையுமே கண்டித்திராதவர். கால் நூற்றாண்டுக் காலமாக இலங்கையின் இன ஒழிப்புப் போருக்கு இஸ்ரேல் ஆயுதங்களும் பல்வேறு ராணுவத் தளவாடங்களும் வழங்கி வந்ததைப்

## ஸியோனிசவாதிகளுடனான புது உறவுகள்

பற்றியோ இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளித்து வந்ததைப் பற்றியோ அவர் விமர்சித்துப் பேசவில்லை.

எலி வீஸெலின் கண்கள் எப்போது இலங்கையின் பக்கம் திருபபின என்றோ எவர் அவரது கவனத்தை அத்திசையிற் திரும்பினாரென்றோ எவ்வாறு அவரது கவனம் ஈர்க்கப்பட்டது என்றோ என்னாற் கூற இயலாது. ஆனாலும் இலங்கை அரசாங்கம் ஈரானுடன் ஏற்படுத்தியுள்ள நட்புக்கு அதில் ஒரு சிறு பங்கிருக்கலாம். எனினுஞ், சில மாதங்கட்கு முன்னர் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரேரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமைச் சபையில் மேலை நாடுகள் முன் வைப்பதற்கு முன்னமே இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை முறியடித்ததை மெச்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இஸ்ரேலும் அதை ஆதரித்து வாக்களித்ததை இங்கு நினைவு கூர்தல் தகும்.

இஸ்ரேல் உலகநாடுகளின் உள் அலுவல்களின் பல வழிகளிற் குறுக்கிட்டுள்ளது. அமெரிக்காவாற் செய்ய இயலாத சில கீழ்த்தரமான வேலைகளை அது செய்துள்ளது துருக்கியின் குர்திய விடுதலை இயக்கமான குர்தியத் தொழிலாளர் கட்சித் தலைவரான அப்துல்லா ஒச்சலானை வெளிநாடொன்றிற் சிறைப் பிடித்துத் துருக்கிய அடக்கு முறை ஆட்சியிடம் இஸ்ரேல் ஒப்படைத்தது என்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராளிகள் மறக்கக் கூடாத உண்மை.

இப்படிப்பட்ட இஸ்ரேலின் ஆதரவாளர்களான வட அமெ ரிக்க ஸியோனியவாதிகளுக்குத் தமிழருடனான ஈடுபாடு எப்படி வந்தது? உறவுகள் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டன? எவருடைய நலன்கள் அதன் பின்னால் இருந்து இயங்கு கின்றன? இவை பற்றி நாம் தீர விசாரிக்க வேண்டும்.

வட அமெரிக்காவில் உள்ள தமிழ்ச் செல்வந்தர்கட்கு யூத வணிகப் பிரமுகர்கள் மூலமான தொடர்புகள் இருக்கலாம். ஒபாமாவின் ஆதரவாளர்கள் எனப்பட்டோர் ஒபாமாவின் ஆதரவாளர்களிடையே உள்ள ஸியோனிஸவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கலாம். இவற்றுக்கும் மேலாகத்தனிப்பட்ட நட்புக்களும் தொழில் உறவுகட்கும் இடமுண்டு:. நாடுகள் கடந்த ஈழ அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆலோசகராக உள்ள ஒரு தமிழ்ப்பிரமுகர் செல்வாக்கு மிக்கவரும் உயர் பதவி வகிப்பவருமான ஒரு யூதப் பெண்ணை மணமுடித்துள்ளார் எனவும் அறியக் கிடைத்துள்ளது.

இவ்வாறான தனிப்பட்ட செல்வாக்குக்களைப் பாவித்து ஈழத் தமிழர் ஸியோனிஸ்ற்றுக்களாற் பயன்பெறுகிறார்களா, அல்லது ஈழத் தமிழர் ஸியோனிஸ்றுக்களாற் பயன்படுத்தப் படுகிறார்களா? இதுவே நம்முடைய கவனத்துக்குரிய விடயம்.

நாளை இலங்கையில் ஆட்சிக்கு வரக்கூடிய மற்றோரு பேரினவாத அடக்குமுறை ஆட்சி, அமெரிக்காவுக்குப் பூரண விசுவாசமாகவும் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் இந்தி யாவைப் பகைக்காமலும் இந்தியாவுடனும் தனது உறவை வலுப்படுத்தி வருகிற இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் நடந்து கொள்ளுமாயின், அமெரிக்க ஸியோனிச நண்பர்கள் யாரை ஆதரிப்பார்கள் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இஸ்ரேலுக்கும் ஸியோனிஸத்திற்கும் நெருக்கமாகச் செல்லுகிற போக்குத் தமிழரை அவர்களது இயல்பான நேச சக்திகளிடமிருந்து தனிமைப்படுத்தும் என்பதை நாம் மறக்கலாகாது. இலங்கை வாழ் முஸ்லிம்களுடன் தமிழ் மக்களை நெருக்கமாகக் கொண்டு வரக்கூடிய ஒரு சர்வதேசப் பிரச்சனை பலஸ்தீனப் பிரச்சனை. அவ் விடயத்திற், தமிழ் மக்கள் நீதியின் பக்கம் நிற்பதால் முஸ்லிம்கள் நடுவே முற்போக்கான நேச சக்திகளை ஊக்குவித்து ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்ப இயலும். புலம் பெயர்ந்த தமிழ்ச் சந்தர்ப்பவாதப் பிரமுகர்கள் தமிழ் மக்கள் உலகின் பெருந் தொகையான மக்களிடமிருந்து அந்நியப்பட்டு ஏகாதிபத்தியவாதிகளை நம்பி ஏமாறுவதற்கே மீண்டுமொரு முறை திட்டந் தீட்டுகின்றனர். அனைத்துத் தமிழ் மக்களும் அதைப்பற்றி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

முற்றும்

**- நரசிம்மா -**

# ஆள் அமைப்பு ஆளுமை 8

சி.சிவசேகரம்

சமுதாயத்தில் ஒருவர் தானும் பயன்பெற்றுப் பிறரும் பயன் பெற வாழுவதற்குச் சமுதாயத்தில் தானும் ஒரு அங்கம் என்பதையும் தனது நலன்கள் சமுதாயத்தின் நலனுடன் நெருக்கமாகப் பிணைந்து இருப்பதையும் நன்குணர வேண்டும். இந்த அணுகுமுறை ஊர், பிரதேசம், இனம், நாடு என்ற எல்லைகளைத் தாண்டி விரிவடையுமாயின் நாம் ஒவ்வொருவரும் சிறந்த உலகக் குடிமக்களாக வாழ இயலும்.

மேற்கூறியவாறு நம்மை ஒரு முழுமையின் பகுதியாகக் காணுவதால் ஒருவர் தனது சுயத்தை இழந்து விடுவதாகச் கருதிச், சிலர் தமது தனித்துவத்தைக் காப்பாற்றுவதே முக்கியமானது என்று வாதிடுவர். இவ்வாறு ஒவ்வொருவரும் தனது சுயத்தையும் சுய நலனையும் சுய உணர்வையுமே பேண முற்பட்டால் மனித சமுதாயத்தின் இருப்பே கேள்விக்குரியதாகி விடும். எனவே எவ்வளவு தான் தமது சுயத்தையும் அதன் தனித்துவத்தையும் பேணுவதாக ஒருவர் சொல்லிக் கொண்டாலும் அந்த நோக்கத்தின் பேரிலேயே அவர் பாரிய விட்டுக் கொடுப்புக்கள் பலவற்றைச் செய்ய நேருகிறது. பிற மனிதர் இல்லாத ஒரு இடத்தை நாடி ஒருவர் தனது சுயத்தைப் பேணுவதானால், நிச்சயமாக அவர் பேணவிரும்பிய சுயமும் அவருக்குப் பேண இயலுமான சுயமும் ஒன்றாயிராது.

சமுதாய மனிதர்களாக வாழுகிற போது சமுதாயத்துடன் நமக்குப் பல உடன்படிக்கைகள் ஏற்படுகின்றன. பொதுப்பட ஒவ்வொருவரும் அவற்றிற் பெரும்பானவற்றைக் கேள்வியின்றியே ஏற்கிறோம். கேள்விக்கு உட்படுத்துகிறவற்றிற் பலவற்றைக் கூட நடைமுறையில் கடைப்பிடிக்கிறோம். சில சமயம் மீறியும் நடக்கிறோம். ஒவ்வொருவரதும் வாழ்க்கைச் சூழலின் நிர்ப்பந்தங்கள் அவரைச் சமூக விதிகளை ஏற்கவோ மறுக்கவோ ஏற்றோ ஏற்காமலோ அவற்றின் வழி நடக்கவோ அவற்றை மீறி நடக்கவோ தூண்டுகின்றன. எவ்வாறாயினும் நமது விருப்பு வெறுப்புக்கள் நாம் வாழுகிற சமுதாய அறங்களுடனும் நடைமுறைகளுடனும் எப்போதும் உடன்பட வேண்டியதில்லை.

நாம் சரி பிழைகளை உணருகிறோம். சமூகத்தில் சில விடயங்கள் மேலும் வலுவாகத் தொடருவதை விரும்புகிறோம். சில நீக்கப்பட விரும்புகிறோம். சமூக விருத்தி பற்றிய பார்வையையும் கொண்டிருக்கிறோம். சமூகத்தில் எதுவும் தனியொருவருக் கேற்ப மாறாது. எனவே எந்த விதமான மாற்றமும் வளர்ச்சியும் கூட்டு முயற்சியை வேண்டி நிற்கின்றன. சமூகத்தில் உள்ள அமைப்புக்கள் சமூகப் பரப்பிற் செயற்படுகிற பலவாறான கூட்டு முயற்சிகளை இயலுமாக்குகிற கருவிகளாகச் செயற்படுகின்றன. ஒவ்வொரு அமைப்பின் செயற்பாடும் தனது உடனடியான நோக்கங்கள், நீண்டகால நோக்கங்கள் என்று வரையறுக்கப்பட்ட களங்களில் நிகழுகிறது. சமூகத்தால் ஏற்கப்பட்ட அல்லது முழுச் சமூகத்தின் மீதும் அதன் ஒரு பகுதியினரால் திணிக்கப்பட்ட பல அமைப்புக்களில் ஒரு பகுதியானவற்றிற் செயற்படுகிறோம். அது போலவே நாம் சுயமாகத் தெரிவுசெய்தோ அமைத்தோ கொண்டுள்ள அமைப்புக்களிலும் இயங்குகிறோம். இவ்வாறான அமைப்புக்களில் நமது இயக்கமும் ஈடுபாடும் நம்மைத் தனிமனிதராகவும் சமுதாய மனிதராகவும் அடையாளப்படுத்தி விருத்தி பெறச் செய்கின்றன. நாம் உணர வேண்டிய முக்கியமான

## தன்னடையாளமும் தன்முனைப்பும்

உண்மை ஏதெனின் தனிமனிதர் என்ற அடையாளத்தைச் சமுதாய மனிதர் என்ற அடையாளத்திலிருந்து பிரித்து நோக்க இயலாதவாறு ஒன்றை ஒன்று ஊடுருவி நிற்கின்றமையாகும்.

எனவே தான், தனிமனித உயர்வென்பது சமுதாயச் செயற்பாடுகளின் மூலம் சமுதாயத்தில் உள்ள பல்வேறு அமைப்புக்களின் பங்குபற்றுவதன் மூலமே இயலுமாகிறது.

**தனிமனிதவாதம் என்பது ஒரு நோய். அது நம்மை எப்போது வேண்டுமானாலும் தொற்றிக் கொள்ள முடியும். அது மனிதரது ஆளுமையைச் சிதைப்பதுடன் தன்னடையாளத்தைப் பொருளற்றதாகவே ஆக்கிவிடும்.**

சமுதாயத்திலிருந்து தாம் பெற்றவற்றைப் பற்றிய உணர்வெதுவும் இல்லாமல், தம்மைச் சுயம்பானவர்களாகக் கருதுகிற தன்முனைப்புடையோரைக் காணுகிறோம். அவ்வாறு தற்பெருமை பேசுவோர் மனமறியப் பொய் கூறுகிறவர்களாகவும் பின்னர் தமது பொய்களைத் தாமே நம்பி அந்த மயக்கத்தில் ஆழ்ந்து கிடப்போராகவும் இருக்கக் காணலாம்.

எல்லா மனிதரிடமும் ஆற்றல்கள் உள்ளன. அவை தன்மையிலும் அளவிலும் வேறுபடலாம் ஆனால் எந்த ஆற்றலினதும் முக்கியமான பக்கம் ஏதென்றால் அது எவ்வாறு பயன்படுகிறது என்பது தான். இங்கே தான் அமைப்புக்களின் முக்கியத்துவம் கவனிப்புக்குரியதாகிறது.

அமைப்புக்களால் அவற்றின் நோக்கமும் இயல்பும் வலிமையுஞ் சார்ந்து அவற்றின் உறுப்பினர்களிடையே பொறுப்புணர்வு, சமூக அக்கறை, மனித உறவுகள், கட்டுப்பாடான நடத்தை, ஒழுங்கான சிந்தனை போன்றவற்றை வலுப்படுத்த இயலுகிறது. மேற் சொன்ன ஒவ்வொன்றும் ஓரளவுக்கு ஒருவரது சுதந்திரத்தில் குறுக்கிடுவது போலத் தோன்றலாம். ஆனால் ஒட்டுமொத்தத்தில் அச் சுதந்திர மறுப்பு உண்மையிற் பெருமளவிலான சுதந்திரத்தை உறுதி செய்கிறது. நல்ல அமைப்புக்கள் சனநாயகமானவையாகவும் ஒழுங்கு விதிகளைப் பேணுகிறவையாயும் தமது நோக்கங்கள் செயற்பாடு விதிமுறைகள் போன்ற அனைத்தையும் எப்போதும் மீளாய்வுக்கு உட்படுத்த ஆயத்தமானவையாயுமே இருக்க முடியும். அத்தகைய அமைப்புக்கள் சமூக அக்கறையும் செயலூக்கமும் ஆற்றலும் உள்ள மனிதர்களது விருத்திக்கு வழி செய்வதால் ஒரு நல்ல சமூகத்தின் உருவாக்கத்திற்கு அவை அவசியமானவையாகின்றன.

ஆள் வேறு அமைப்பு வேறு என்கிற மனநிலையிலிருந்து விடுபட்டு, நாம் இரண்டையும் ஒரு கூட்டுத் தொகுதியின் வெவ்வேறு தோற்றப்பாடுகளாக நோக்குவோமானால் முழுமைக்குப் பகுதிக்கும் உள்ள உறவை விளங்கிக் கொள்வோம்.

தனிமனிதவாதம் என்பது ஒரு நோய். அது நம்மை எப்போது வேண்டுமானாலும் தொற்றிக் கொள்ள முடியும். அது மனிதரது ஆளுமையைச் சிதைப்பதுடன் தன்னடையாளத்தைப் பொருளற்றதாகவே ஆக்கிவிடும்.

கூட்டுச் செயற்பாடுகளும் சமூக நடவடிக்கைகளிற் பங்குபற்றுவதும் ஒவ்வொரு மனிதரையும் தன்னடக்கமுள்ளவராகவும் அதே நேரத்தில் சிறந்த ஒரு தனிமனிதராகவும் உயர்த்த வல்லன.

எனவே நம் ஒவ்வொருவர் முன்பும் உள்ள தெரிவு எளிமையானது. நாம் கற்பனையான ஒரு சுயத்தைத் தேடி நம் வாழ்வைச் சமூகப் பயனற்றதாக்கிக் கொள்ளப் போகிறோமா, அல்லது சமுதாயத்தில் நமது இருப்பைச் சரிவர அடையாளங் கண்டு சமூகச் செயற்பாட்டின் மூலம் சமூகத்தையும் நம்மையும் மேம்படுத்தப் பணி செய்யப் போகிறோமா என்பது தான் அது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வாய் வீச்சில் எதிர்ப்பும் அடிபணிந்த செயலும்

மேற்கு நாடுகளில நாம் தங்கியிருக்க வேண்டியதில்லை யென அவ்வப்போது கொல்லைப் புறத்தில் இருந்து பொறுப்புள்ள அரசின் தலைவர்கள் சிலர் உரத்துக் குரைக் கின்றனர். அவ்வாறு அவர்கள் நடந்து கொள்வது விடயங் கள் விளங்காமலா அல்லது மக்களை ஏமாற்றுவதற்காகவா என்பது தான் புரியவில்லை.

ஆனால் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா சென்ற மாதம் கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்க வர்த்தக தூதுக்குழுவைச் சந்தித்த போது அமெரிக்கர்கள் இலங்கையில் மேலும் முதலீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் தெரிவித்த தகவலின்படி இலங்கைப் பொருள் களுக்கு அமெரிக்கா பாரிய சந்தையாகத் திகழ்வதுடன் இலங்கையின் முழு ஏற்றுமதியில் 38 வீதம் அமெரிக்கா வுக்கு செல்கிறது. இதிற் பெரும் பகுதி தைத்த ஆடைகள். முதலீட்டைப் பொறுத்தமட்டில், அமெரிக்கா எவ்வளவோ செய்ய வேண்டிய உள்ளதெனத் தெரிவித்த அமைச்சர் இன்று 204 அமெரிக்க நிறுவனங்கள் நேரடியாக இலங் கையில் 20 கோடி 70 இலட்சம் டொலர்களை முதலீடு செய்துள்ளன என்பதுடன் அதிற் பெரும் பகுதி தகவல் தொழில் நுட்பத்துறையைச் சார்ந்தது எனவும் கூறியுள்ளார். ''ஐரோப்பிய சமூகமே இன்று உலகின் பெரிய வர்த்தக மையமாகவுள்ளது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் கிட்டத்தட்ட இலங்கையின் சகல உற்பத்திப் பண்ட ங்களும் தீர்வையின்றி ஐரோப்பிய சமூகத்தினுள் ஜி.எஸ்.பி. + மூலம் செல்கின்றது. வெளிநாட்டில் நேரடி முதலீட்டின் மூலம் தேசத்தை புனர்நிர்மாணம் செய்வதோடு சமாதான த்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தலாம்'' என்கிறார் யாப்பா. ''யுத்தத்தினால் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவும் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்களும் சுமார் இருபதாயிரம் கோடி (200,000, 000,000) டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.'' எனத் தெரிவித்த அமைச்சர் இலங்கைப் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு முதலீடு கிடைக்கும் போது பாதிப்பின் கணிச மான தாக்கத்தை குறைக்க முடியும் என மேலும் தெரிவித துள்ளார்.

பிரதமர் மேற்குலகைத் திட்டுகிறார், சவால் விடுகிறார். ஆனால் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் வெளிநாட்டு முதலீட்டுக்காக அமெரிக்க முதலீட்டாளரிடம் கெஞ்சுகிறார். அரசியல் மேடைகளில் அப்பாவி வாக்காளரிடம் வீரதீரப் பேச்சுப் பேசினாலும் இலங்கையின் பொருளாதாரம் முதலா ளித்துவ தாரக மந்திரமான சுதந்திர வர்த்தகம் என்ற வட்டத்துக்குள் சிக்கியுள்ளமையே யதார்த்தமாகும். நாட்டை அன்னிய முதலீட்டாளருக்கு திறந்துவிட்ட முறையில் நாட்டின் சுதந்திரம் இறைமை என்பதெல்லாம் வெட்டிப் பேச்சாகும். இனவாதிகளையும் பிற்போக்குச் சக்திகளையும் கவருவதற்காகவே இறைமையையும் தேசப்பற்றையும் பேசப்படுகிறதே தவிர அவை இழக்கப்பட்டு பல ஆண்டுகள் சென்றுவிட்டன. எஞ்சியிருப்பதையும் அமெரிக்க, மேற்குலக, இந்திய, யப்பானிய முதலீட்டாளர்கள் பங்கு போட்டு வருகி ன்றனர்.

நமது நாட்டின் வர்த்தகம் எவ்வாறு மேற்குலகுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை அரசின் உத்தியோக புள்ளிவிபர ங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

2008ம் ஆண்டில் இலங்கை 810 கோடி (8,100,000,000) டொலர்களை ஏற்றுமதி வருமானமாகப் பெற்றது. இதில் 50 சதவீதத்திற்கு மேலான தொகையான 440 கோடி (4,400,000,000) டொலர்கள் ஆறு மேற்கு நாடுகளிடமிருந்து பெறப்பட்டது. அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், இத்தாலி, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ் என்பனவே அந்த ஆறு நாடுகளுமாகும்.

இலங்கைக்கும் சில மேற்கு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மிகுதி, மிகவும் இலங்கைச் சார்பாகவே உள்ளது. 2008இல் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தகம் 158 கோடி (1,580,000,000) டொலர் அளவு இலங்கைக்குச் சார்பாய் இருந்தது. சென்ற ஆண்டில் இலங்கை அமெரிக்காவுக்கு (1,880,000,000) கோடி டொலர் பெறுமதியான ஏற்றுமதி செய்தது.

ஐரோப்பிய சமூகத்துடனான வர்த்தகத்திலும் சென்ற ஆண்டில் இலங்கைக்கு சாதகமான 127 கோடி (1,270,000, 000) டொலர் இருந்தது. ஐரோப்பிய சமூகத்தில் மொத்தம் 27 நாடுகள் தற்போது உள்ளன. சென்ற ஆண்டில் ஐரோப்பிய சமூகத்திற்கு இலங்கை 301 கோடி (3,010, 000,000) டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்தது.

இலங்கை சுங்கப் பகுதி வெளியிட்ட தகவலின்படி, ஐரோப்பிய சமூகத்துடனான ஏற்றுமதி அதிகரிப்பதற்கு ஜி.எஸ்.பி. + சலுகை முக்கிய காரணம். இந்த ஜி.எஸ்.பி.+ சலுகையைப் 16 நாடுகள் பயன்படுத்துகின்றன.

வெளிநாட்டு நேரடி முதலீடு

முதலீட்டுச் சபையின் தகவலின்படி ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த 275 கம்பனிகள் இலங்கையில் இயங்குகின்றன. இந்தக் கம்பனிகள் 20,400 கோடி (204,000,000,000) ரூபாய் முதலீடு செய்துள்ளன. இலங்கையைச் சேர்ந்த 74,653 பேர் இக் கம்பனிகளில் வேலை செய்கின்றனர்.

முதலீட்டுச் சபையின் நிபந்தனையின் கீழ் 77 அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் இயங்குகின்றன. ஏனைய கம்பனிகளும் இயங்குகின்றன. மொத்தமாக 2152 கோடி (21,520,000,000) ரூபாயை அமெரிக்கா இலங்கையில்

**ஜீ.எஸ்**

முதலீடு செய்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை யில் இயங்கும் இந்தக் கம்பனிகளில் 24,502 இலங்கையர் வேலை செய்கின்றனர்.

நிலையான முதலீடுகள்

மேற்கில் நிரந்தரமாய் வசிக்கும் வெளிநாட்டவர் தமது நிதி முகாமையாளர், முதலீட்டாளர் மூலம் அரசாங்க உண்டியலில் முதலீடு செய்துள்ளனர். அரசாங்க திறைசேரி முறியில் அமெரிக்காவில் இருக்கும் Templeton Fund 87 கோடி 50 இலட்சம் (875,000,000) டொலர் முதலீடு செய்துள்ளது. லண்டன் நியூயோக் பிராங்க்'போர்ட் ஆகிய மேற்கத்தைய நிதிச் சந்தைகளில் இயங்கும் சிறிய முகா மையாளர்கள், தமது டொலர்களை இலங்கை அரசாங்க த்தின் உத்தரவாதமுடைய கடன் பத்திரங்களில் முதலீடு செய்யுமாறு, சுமார் இருநூறு (200) அந்நிய முதலீட்டாளர் கட்குப் பணிப்புரை வழங்கியுள்ளனர்.

பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தையிலும் மேற்கத்திய நிதிய முகாமையாளர் குறிப்பிட்டளவு தாக்கத்தை செலுத்துகின்ற னர். இலங்கையில் இயங்கும் மேற்கத்தைய கம்பனிகள் பல தமது பங்குகளை இலங்கைப் பங்குச் சந்தையில் நிரற்படுத்தியுள்ளனர். சிலோன் டுபாக்கோ (பிரித்தானிய அமெரிக்க கம்பனி) அமெரிக்காவின் நெஸ்லே அமெரிக்கா வின் செவ்றொன் லுப்ரிகன்ஸ் பிரித்தானியாவின் அவிவர் (Avivar).

சுற்றுலாத்துறை

2008இல் 438,475 வெளிநாட்டு உல்லாச பயணிகள் நாட்டிற்கு வந்தனர். இதில் 167,187 பேர் மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், ஜேர்மனி, நெதர்லாந்திலிருந்து வந்தவர்கள்.

கடன் தந்தவர்கள்

2008 டிசம்பரில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 144,800 கோடி ரூபாவாக (1,448,000,000,000) இருந்தது. யப்பானே ஆகக் கூடிய கடன் தொகையான 42,690 கோடி (426,900,000,000) ரூபாவை 2008 டிசம்பரில் வழங்கியி ருந்தது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தகம்:

| ஆண்டு | மொத்த ஏற்றுமதி டொலரில் | மொத்த இறக்குமதி டொலரில் | வர்த்தக மிகுதி |
|---|---|---|---|
| 2006 | 202.25 கோடி | 20.23 கோடி | 82.2 கோடி |
| 2007 | 198.25 கோடி | 25.52 கோடி | 172.48 கோடி |
| 2008 | 188.25 கோடி | 29.75 கோடி | 158.91 கோடி |

மத்திய வங்கி வெளியிட்ட புள்ளி விபரத்தின்படி 2008 டிசம்பர் முடிவில் இலங்கை பின்வரும் நாடுகளுக்குக் கொடுக் குமதியாய் இருந்த கடன் தொகை (ரூபாயில்):-

குறிப்பு: மேற்குலக நாடுகளி டமான கடன் விபரம் மட்டுமே இங்கு தரப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும் இடையிலான வர்த்தகம்

| ஆண்டு | மொத்த ஏற்றுமதி டொலரில் | மொத்த இறக்குமதி டொலரில் | வர்த்தக மிகுதி டொலரில் |
|---|---|---|---|
| 2006 | 232.1 கோடி | 142.73 கோடி | 89.28 கோடி |
| 2007 | 288.15 கோடி | 140.2 கோடி | 148.13 கோடி |
| 2008 | 301.97 கோடி | 174.6 கோடி | 127.91 கோடி |

மேற்கூறியவற்றிலிருந்து உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் எவ்வாறு ஏகாதிபத்திய முதலீ டுகள் இங்கு இருந்து வருகின் றன என்ற விபரங்களில் ஒரு பகுதி வெளிப்படுகிறது. இவற்று டன் இந்திய, சீன, பாகிஸ்தான் முதலீடுகளையும் இணைக்கும்

| நாடுகள் 2008 | டிசம்பரில் செலுத்த வேண்டியது |
|---|---|
| ஜேர்மனி | 6152.8 கோடி (61,528,000,000) |
| அமெரிக்கா | 5070.8 கோடி (50,708,000,000) |
| ஐக்கிய ராச்சியம் | 2368.6 கோடி (23,686,000,000) |
| பிரான்ஸ் | 1242.4 கோடி (12,424,000,000) |
| கனடா | 771.8 கோடி (7,718,000,000) |

போதே நமது பொருளாதாரத்தின் அப்பட்டமான நிர்வாணத் தன்மையைப் பார்க்க முடிகிறது. மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கீழ் தேசிய பொருளாதாரம் சுய உற்பத்தி நாட்டு வளங்களைக் காப்பாற்றுதல் என்பதெல்லாம் வெறும் வாய்வீச்சேயாகும். இப் பொருளாதாரப் புள்ளி விபரமானது நவதாராள பொருளாதார ஊடுருவல்களையும் நமது நாட்டின் நவகொலனித்துவ அமைப்பையும் வெளிக்கா ட்டுகின்றது.

# அமெரிக்காவிற்கு மற்றொரு வியட்நாம்

2001ம் ஆண்டு ஒக்டோபர் 7ஆந் திகதி, அல் குவைடா பயங்கரவாதி களை அழித்தொழிப்பதென்று கூறி அமெரிக்கா ஆ'ப்கானித்தானை ஆக்கிரமித்தது. நியூயோக்கின் உலக வர்த்தக மையத்தையும் அமெரிக்க படைத் தலைமையகமான பென்ரகனையும் 9/11 தாக்கியத ற்கு அல் குவைடா தான் காரணம் என்பதால் அவ்வியக்கத்தின் தலைவரான ஓசாமா பின் லாடனைக் கைது செய்து தலிபான் அர சைக் கவிழ்ப்பதென்ற நோக்கில் அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட டன. தலிபான் அரசு சில வாரங்களுள் கவிழ்க்கப்பட்டது. நிரந்தர விடுதலை என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது முதற் சில நாட்களில் அமெரிக்க-பிரித்தானிய கூட்டுப்படைகளின் ஈவிரக்கமற்ற கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சில் சுமார் 3500 குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது 104,000 அமெரிக்கா நேட்டோ படையினர் ஆ'ப்கானிஸ்தா னில் உள்ளனர். இவற்றுள் அமெரிக்க படையினரின் எண்ணிக்கை 68,000. ஆ'ப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ கூட்டுப் படையின் தளபதி அமெரிக்க ஜெனரலான ஸ்ரான்லி மக்கிறிஸ்றல். தலிபானை அழித் தொழிப்பதாக உறுதி பூண்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 12,000 படையினரைக் கூடுதலாக அனுப்பிய சில மாதங்களில் மேலும் 40,000 படையினரை ஆப்கானித்தானுக்கு அனுப்ப வேண் டுமென பராக் ஒபாமாவை அமெரிக்கரான தளபதி ஸ்ரான்லி மக் கிறிஸ்றல் கோரியிருக்கிறார்.

பராக் ஒபாமா அமெரிக்கப் படைகளை அனுப்புவதில் தயக்கம் காட்டும் அதே வேளை, நேட்டோ அங்கத்துவ நாடுகள் மேலதிக படைகளைத் தந்துவ வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்க படைகளை அனுப்புவதில் தயக்கம் காட்டுவதைத் தளபதி ஸ்ரான்லி மக்கிறிஸ்றல் கடுமையாக விமர் சித்திருக்கிறார். ஜனாதிபதியின் நடவடிக்கை பிரயோசனமற்றதும் குறுகிய பார்வையுடையதெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். தளபதியின் விமர்சனம் அல்லது எச்சரிக்கை ஒபாமா நிர்வாகத்திற்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. ஆனால் ஜனாதிபதி ஒபாமா ஹரி ட்ரு மன் 1951ல் செய்தது போல தளபதி ஸ்ரான்லி மக்கிறிஸ்றலை பதவி நீக்கவில்லை.

கொரிய யுத்தத்தின் உச்ச கட்டத்தில் ஜெனரலை டக்ளஸ் மக்காதர் ஜனாதிபதி ட்ருமனைக் கலந்தாலோசிக்காமல் சீனாவுக்கு இறுதி எச்சரிக்கை யொன்றை விடுத்திருந்தார். கொரிய யுத்தத்தை சீனாவுக் குள் கொண்டு செல்ல வேண்டுமென்பதே இரண்டாவது உலக யுத் தத்தின் போது உயர் பதக்கங்களைப் பெற்ற மக்காதரின் திட்டம். இந்த யோசனையை ஜனாதிபதி ட்ருமன் ஏற்றுக் கொள்ள வில்லை. வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதி பதிக்கே உண்டு. இராணுவம் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பறித்தெடுக்க முடியாதென்பதை உறுதிப்படுத்தும் வகையில் மக்காதர் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டு ஜெனரல் மத்தியூ றிட்ஜ்வே (Ridgway) புதிய தளபதியாக நியமிக்கப்பட்டார். இது பழைய கதை. இப்போது தளபதி மக்கிறிஸ்றலுடன் கொப்பன்ஹேகனில் நேருக்குநேர் சந்தித்து ஜனாதிபதி ஒபாமா சமரசம் பேசினார். டென்மார்க்கில் 2016 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை சிக்காகோ நகரில் நடாத்துவதற்கு ஆதரவு கோரிய ஜனாதிபதி ஒபாமா கொப்பன்ஹேகனுக்குச் சென்றிருந்த வேளையிலேயே அவர் மக்கி றிஸ்றலைச் சந்தித்திருந்தார்.

எட்டு வருடங்களைத் தாண்டிய பின்பும் ஆப்கானிஸ்தானில் வெற்றி விலகிச் சென்று கொண்டிருப்பதைப் போல 2016க்கான ஒலிம்பிக் விளையாட்டு மைதானமும் ஒபாமாவை விலகிச் சென்றுள்ளது. லண்டனில் இருந்து வெளியாகும் இன்டிபென்டென்ற பத்திரிகையில் றொபேட் 'பிஸ்க் என்ற மூத்த பத்திரிகையாளர் மேற்காசிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளும் அமெரிக்காவுடன் மிகவும் நெருக்கமாகவுள்ளவையுமான சவூதி அராபியாவும் குவைத்தும் சீனாவுடனும் ரஷ்யாவுடனும் கடந்த இரண்டு வருடங்களாக இரகசியமாகச் சந்தித்து எண்ணெய் பொருளாதாரத்தை டொலரி லிருந்து விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளார். டொலரின் நிலைமை தொடர்பாக அச்சம் கொண்ட நிலையில் யூரோ, யென், ரூபிள் போன்ற நாணயங்களை எண்ணெய் பரிமாற்றங்களுக்கு பயன்படுத்தக் குறித்த நாடுகள் விரும்புகின்றன. இச் செய்தியை சவூதி அராபியா மறுத்துள்ள போதும் 'பிஸ்க் தனது கட்டுரையின் தொடர்ச்சியாக அல் ஜஸீரா தொலைக்காட்சியில் தனது செய்தி உண்மையெனத் தெரிவித்து ள்ளார்.

சீனாவும், அரபு நாடுகளும் தம் வசமுள்ள இலட்சம் கோடி டொலர்க ளைக் கொடுத்து நாணயச் சந்தையில் ஏனைய நாணயங்களைக் கொள்வனவு செய்தால் அது அமெரிக்க டொலருக்கு மரண அடியாய் அமையும். இந்தச் சூழலிலே, நிதித்துறையில் பலவீனமான அமெரிக்கா ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் தனது ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியுமா என்பதே எழுந்துள்ள கேள்வியாகும்.

தளபதி மக்கிறிஸ்றலின் கோரிக்கையை நிறைவேற்ற மேலதிகமாக நாற்பதாயிரம் படையினரை ஆப்கானிஸ்தானுக்குள் ஒபாமா அனுப் பினால் வியட்நாம் யுத்தத்தின் போது ஜனாதிபதி ஜோன்சன் செய்தது போல யுத்தத்தில் கவனம் செலுத்தி உள்நாட்டு விடயங்களை உதாசீனம் செய்தால், லிண்டன் ஜோன்சன் ஒரு முறை தான் அமெ ரிக்க ஜனாதிபதியாய் இருக்க முடிந்தது போல, ஒபாமாவும் ஒரு முறை மட்டுமே ஜனாதிபதியாய் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். வியட்நாம் யுத்தம் காரணமாக உள்நாட்டில் செல்வாக்கிழந்த ஜோன்சன் இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட முன்வரவில்லை. அந்த நிலை ஒபாமாவுக்கும் ஏற்படுமா?

முன்னாட் படையினர்களிலும் தற்போது சேவையில் உள்ளவர்களிலும் 18.5 சதவீதமானோர் மன அழுத்தம் அல்லது மன அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு யுத்தங்களிலும் 16 இலட்சம் பேர் ஈடுபடுத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தலைமை அலுவலகம் கூறுகிறது. சுமார் மூன்று இலட்சம் படையினர் ஏதோ மனோவியா தியால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு கூறுகிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## ஒபாமாவிற்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு: சொக்கிப்போக என்ன இருக்கிறது?



உலகின் எந்தவொரு விருதும் பரிசும் பெறுபவரின் திறமையை எடுத்தியம்பும் கட்டியங்களல்ல. விருதுகளும் அத்தனை புனிதமானவை அல்ல. இது இலங்கையில் வழங்கப்படும் சாகித்திய விருது தொட்டு ஆஸ்கார் விருது, நோபல் பரிசு வரை எல்லா விருதுகளுக்கும் பொருந்தும். இருந்தாலும் கூட சமாதானத்திற்கான நோபல் பரிசு குறித்த பெருத்த எதிர்பார்ப்பு இன்னமும் இருந்து வருகிறது. ஆனால் உலகின் மிகப்பெரிய கொலைகாரர்களான கென்றி கிஸிஞ்சர், அல்கோர், ஜிம்மி காட்டர் முதற்கொண்டு ஆபிரிக்க மக்களை மனிதர்களாகவே மதிக்காத அல்பேர்ட் சுவைச்சர் வரை சமாதானத்தோடு தொடர்பில்லாதவர்களுக்கே இப்பரிசு காலகாலமாய் வழங்கப்பட்டு வந்துள்ளது.

அவ்வகையில் இம்முறை விருது பொருத்தமானவருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உலகில் ஒபாமை விடப் பெரிய கொலைகாரனைத் தேட முடியாது. சரியான தேர்வைச் செய்த நோபல் பரிசுக் குழு பாராட்டப்பட வேண்டியது. ஒருவேளை இவர்கள் வேறு யாரையாவது தெரிந்தெடுத்திருந்தால் சர்ச்சைகள் உருவாக வாய்ப்புண்டு, யார் உலகின் பெரிய கொலைகாரன் என்று. ஆக மொத்தத்தில் உலக அமைதிக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பவருக்கே உலக சமாதானத்திற்காக நோபல் பரிசு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பது குறித்து ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

இம்முறை இப்பரிசுக்காக ஆராயப்பட்டவர்கள் வரிசையில், சிம்பாபே பிரதமர் மோர்கன் சுவாங்கிராய், கொலம்பிய அரசியலாளர் இங்கிரிட் பெத்தான்கோர்ட், ஆப்கானிய மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் சீமா சமர், ரஷ்ய மனித உரிமையாளர் ஸ்வெத்லானா கன்னுஷீனா, சீன மனித உரிமை செயற்பாட்டாளர் ' ஜியா. இவர்கள் எல்லோரும் ஒபாமாவுக்கு சளைத்தவர்கள் அல்லர். அனைவரும் ஏகாதிபத்தியத்தை அமெரிக்காவின் சர்வாதிகாரத்தை தங்கள் தங்கள் நாடுகளில் வேறு வேறு பெயர்களில் முகமூடிகளில் நிலைநிறுத்தியவர்கள் தான்.

நோபல் பரிசுக்கு பெயர்களை பரிந்துரைக்க கடைசித்தேதி பிப்ரவரி 1 அதாவது ஒபாமா, பதவியேற்ற 12 நாட்களில் நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார். அந்தப் 12 நாட்களில் உலக சமாதானத்திற்காக ஒபாமா பெரிதாக ஒன்றும் கிழிக்காவிட்டாலும் அதை தொடர்ந்த காலங்களில் உலக சமாதானத்திற்காக அவர் நிறையவே கிழித்திருக்கிறார். இஸ்ரேலின் தாக்குதல்களை நியாயப்படுத்தியது, நோபல் பரிசு பாகிஸ்தானிய பழங்குடிமக்களை குண்டு போட்டுக் கொன்றது, ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் மக்களைக் கொல்வது உட்பட்ட இன்ன பல நற்காரியங்களை செய்வது, இலங்கையில் ஒரு மனிதப்பேரவலம் நடக்கும் போது அமைதிகாத்தது என எவ்வளவோ செய்திருக்கிறார். இவை ஒவ்வொன்றுமே தனித்தனி நோபல் பரிசு பெறுமளவுக்கு தகுதிவாய்ந்த அற்புதமான விடயங்கள்.

அமெரிக்காவில் புயலால் பாதிக்கப் பட்ட நியூ ஆர்லியன்ஸ் மாகாணத்தை ஒபாமா பார்வையிடுகையில், அங்கு பொதுமக்களை சந்தித்துப் பேசியபோது ஒபாவைப் பார்த்து டைரன் ஸ்காட் என்ற 9 வயதுச் சிறுவன் கேட்டான் "மக்கள் ஏன் உங்களை வெறுக்கிறார்கள்?". அவனது கேள்வியால் தடுமாற்றமடைந்த ஒபாமா, சமாளித்துக்கொண்டே "நான் ஜனாதிபதித் தேர்தலில் ஏராளமான வாக்குகளைப் பெற்றுள்ளேன். அதனால் என்னை எல்லோருமே வெறுக்கிறார்கள் எனக் கூறமுடியாது" எனப் பதில் அளித்தார். அந்தச் சிறுவனின் கேள்வி சரியான ஒருவருக்குத்தான் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நிறுவுகிறது.

இதற்கிடையில் ஒபாமாவுக்கு வழங்கப்பட்டது ஆச்சரியமளிப்பதாக பலர் கூறத்தொடங்க இனி ஒபாமா செய்ய இருக்கின்ற உலகைக் காக்கின்ற செயல்களுக்காக இந்த விருது வழங்கப்பட்டிருப்பதாக விளக்கம் அளிக்கப்படுகிறது. ஒன்று மட்டும் நிச்சயம். உலகம் அமைதிப் பூங்காவாக மாறப்போகிறது என்று நம்புபவனைப் போன்ற முழு முட்டாள் வேறு யாராகவும் இருக்க முடியாது.

கருணாநிதி 'அண்ணா விருதை' தானே உருவாக்கி அதை தனக்கே கொடுத்துக் கொள்வதற்கும் ஒபாமாவுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்ததற்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லைத்தானே!

# ஆளும் வர்க்க நலன் காக்கும் நக்கீரன் இதழின் திரிப்புச் செய்தி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) இன் பொதுச் செயலாளர் கணபதி Open சஞ்சிகையிற்கு ஒரு நேர்காணலை வழங்கியிருந்தார். அதில் இந்திய மாவோவாதிகள் இயங்கும் விதம் முதற்கொண்டு பல விடயங்கள் பேசப்பட்டிருந்தன. அதில் இலங்கை தொடர்பாக "இலங்கையில் புலிகளின் பின்னடைவிற்குக் காரணம் என்ன?" என்றவொரு கேள்வி கேட்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்த தோழர் கணபதி "புலிகளின் தோல்விக்கும் குறிக்கத்தக்க அழிவிற்கும் பின்னர் தனியான தன்னாதிக்கமுள்ள தமிழ் ஈழத்திற்கான இயக்கம் பாரிய பின்னடைவிற்கு உள்ளாகியுள்ளது என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. தமிழர்களும் போராட்டமும் இப்போது தலைமையில்லாதுள்ளது. இன்று வரைக்கும் தமிழ் ஈழத்தை கோருவதற்காக ஏற்பட்ட அதே நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ் தேசத்திற்கும், பண்பாட்டிற்கும், மொழிக்கும் எதிரான தனது இனவாதக் கொள்கைகளை சிங்கள பேரினவாத அரசு மாற்றிக்கொள்ளப் போவதில்லை. பிரபாகரன் கொல்லப்பட்டதும் புலிகள் தோற்கடிக்கப்பட்டதுமான முதல் வாரத்தில் அதையொட்டி இலங்கை அரசாலும் பேரினவாதக் கட்சிகளாலும் இலங்கை முழுவதும் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் அணிவகுப்புக்களும், கொண்டாட்டங்களும், அப்பாவிச் சிங்கள மக்களின் சிந்தனையை நச்சூட்டும் பேரினவாதக் கருத்துக்களை வளர்த்தெடுக்கும் எல்லைவரை தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள அமைப்புக்கள் உருவாக்கி வளர்த்த தேசிய வெறுப்புணர்வைச் சுட்டிநிற்கிறது. இலங்கை அரசு தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்காக முன்வைக்கும் அதே சதித்திட்டமுள்ள கருத்தைத் தான் இஸ்ரேலிய சியோனிச அரசும் முன்வைக்கிறது. நீண்ட காலமெடுத்தாலும், புலிகளின் தோல்விக்கான காரணங்களின் படிப்பினைகளிலிருந்து, தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பது புத்துயிர்ப்புப் பெறுவது நிச்சயமானது. பாட்டாளி வர்க்கச் சிந்தனை முறையையும் பார்வையையும் முன்வைத்து, புதிய தந்திரோபாயங்களை வகுத்துக்கொண்டு, பரந்துபட்ட ஜனநாயக மற்றும் தேசிய சக்திகளுடனான இணைவைக் கட்டியெழுப்புவதனூடாக ஒடுக்கப்பட்ட தமிழ் தேசத்தின் விடுதலை என்பது சாத்தியமானதே. சரியான திசையையும், தலைமையையும் வழங்குவதற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு திசைவழியை ஏற்படுத்துவதற்கும் மாவோயிச சக்திகள் தேவையான அளவிற்குப் பலமடைவதும் அவசியம்." என்றார்.

இந்த நேர்காணல் வெளியாகிய இருநாட்களின் பின் இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற நக்கீரன் இதழ் "இலங்கை தமிழர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கி போராட்டத்தை தீவிரப்படுத்துவோம்: மாவோயிஸ்ட் தலைவர்" என்ற தலைப்புடன் தோழர் கணபதியின் நேர்காணலை திரித்து வெளியிட்டது. அச்செய்தியில் "புலிகளுக்கு நாங்கள் நவீன ஆயுதங்கள் வழங்கி சுதந்திர போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். இதற்கான விஷயங்களை நாங்கள் வகுத்து வருகிறோம். அண்டை நாட்டில் உள்ள தமிழர்கள் கொடூர சித்ரவதை செய்யப்படுவதை அனுமதிக்க மாட்டோம். அதிநவீன படகுகள் மூலம் கடல் வழியாக ஆயுதங்களை இலங்கைக்கு கொண்டு செல்வோம். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. தமிழர்களிடம் ஆயுதங்கள் இருந்தால் இலங்கை ராணுவத்தினர் அங்குள்ள பெண்களை கற்பழிக்க மாட்டார்கள். இளைஞர்களையும் சுட்டுக்கொல்ல மாட்டார்கள். எனவே எங்களிடம் உள்ள நவீன ஆயுதங்களை தமிழர்களுக்கு வழங்குவோம். சித்ரவதை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நாங்கள் இலங்கை தமிழர்களுக்கு ஆயுத உதவி செய்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இதற்கென்று தனி குழுக்களை ஏற்படுத்தி உள்ளோம். எங்களது நக்சலைட் இயக்கத்தில் தமிழகம் - கேரளாவைச் சேர்ந்த நிறைய இளைஞர்களை சேர்க்க முடிவு செய்துள்ளோம். இதற்காக தமிழகம் - கேரளா எல்லைப்பகுதிகளில் விரைவில் முகாம்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்." என்று தோழர் கணபதி சொன்னதாக செய்தி வெளியிட்டது நக்கீரன்.

நக்கீரன் இந்த செய்தியை வெளியிட்டு ஒரே பரபரப்பை ஏற்படுத்தியிருக்க இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் "இந்திய மத்திய புலனாய்வு பிரிவின் அறிக்கையின்படி, இலங்கையின் தமிழீழ விடுதலைப்புலிகளும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும், தென் மற்றும், மத்திய இந்திய காடுகளில், பயிற்சி மற்றும், கூட்டங்களை நடத்தி வருகின்றனர். அத்துடன் முகாம்களையும் அமைத்துள்ளனர்" என்று தெரிவித்தார். அதே வேளை இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் "இந்திய படைகளுக்கு எதிராக மாவோவாத தீவிரவாதிகளை முனைப்புப்படுத்தல் மற்றும், இலங்கைப் படையினரிடம் சந்தித்த தோல்வியைச் சரிசெய்து கொள்வதற்காக, தென்னிந்தியாவில் புதிய தளங்களை அமைப்பது ஆகிய இரண்டு நோக்கங்களை விடுதலைப்புலிகள் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்" என செய்தி வெளியிட்டது. மொத்தத்தில் இந்திய மாவோவாதிகளுக்கு சேறு பூசுகிற காரியத்தையும் அற்ப பரபரப்புச் செய்திகள் மூலம் இலாபம் தேடுகிற வேலையையும் நக்கீரன் போன்ற இதழ்கள் செவ்வனே செய்கின்றன. நக்கீரன் திட்டமிட்டுச் சொல்லாமல் விட்ட தோழர் கணபதியின் பதில் ஒன்றையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். "புலிகள் அமைப்பிற்கும் தமது கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாம் அவர்களுடன் தொடர்புகளைப் பேண முயன்று வந்தோம். ஆனால் விடுதலைப்புலிகளின் தலைமை மாவோவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருக்க விரும்பவில்லை. ஆனாலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்துள்ளோம்." என்றார்.

மிகுந்த கவனத்தோடு தோழர் கணபதியின் நேர்காணலை வாசிக்கின்ற போது சில கேள்விகள் எழுவது இயற்கையானது.

1. விடுதலைப் புலிகளின் தலைமை ஏன் மாவோவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருக்க விரும்பவில்லை?
2. இலங்கை அரசு தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்காக முன்வைக்கும் அதே சதித்திட்டமுள்ள கருத்தைத் தான் இஸ்ரேலிய சியோனிச அரசும் முன்வைக்கிற போது இஸ்ரேல் போன்று தமிழீழத்தை உருவாக்கப் போவதாக தமிழ் தேசியவாதிகள் சொல்வது அபத்தமில்லையா?

அதனிலும் மேலாக நக்கீரன் எவ்வாறு புலி ஆதரவு என்ற போர்வையில் இந்திய மத்திய அரசின் நலனுக்காக செயற்படுகிறது. மக்களைத் திசைதிருப்புகிறது என்பதையும் நோக்க வேண்டும். புலியல்லாத தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கக் கூடிய சக்திகளை நக்சலைட்டுகள் என்று சொல்லி கைது செய்வதற்கும் இந்திய மேலாதிக்கம் இலங்கையில் தொடர்வது பற்றிக் கண்டிக்கக்கூடிய சக்திகளை ஒடுக்கவுமே நக்கீரன் வழி அமைக்கிறது. ஈழத் தமிழர் ஆதரவு என்பது எவ்வளவு அபாயகரமான திசைவழி நோக்கித் திரும்பியிருக்கிறது என்பதும் ஈழத் தமிழர் ஆதரவை இந்திய ஆளும் வர்க்கம் தனது நலன்களுக்காக எப்படியெல்லாம் பயன்படுத்தி வருகிறது என்பது பற்றி அவதானமாக இருக்க வேண்டிய தருணம் இது.

நக்கீரனும் தமிழ்த் தேசியவாதிகளும் தமிழீழம் கேட்பவர்களும் இந்திய மத்திய அரசும் சிதம்பரமும் ஒரே புள்ளியில் சந்திப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

பாழ் நகரத்தில்
5ம் பக்க தொடர்ச்சி

அப்போது ஹக்கீம் அந்தத் தொனியிற் பேசினார். யூ.என்.பியின் பேரினவாதம் பற்றியும் கண்டித்துப் பேசினார். ஆனாலும் எப்போதும் அவரது கண் வாக்குப் பெட்டி மீதே இருந்தது. சில மாதங்கள் முன்பு யூ.என்.பியைக் கண்டித்துப் பேசிய மனோ கணேசனுடைய நிலையும் அதுவே தான்.

இந்த ஆறுகட்சிக் கூட்டணிக்கு ஒரு வேலைத்திட்டமும் இல்லை. அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு ராஜபக்ச சிலரை நோக்கி வீசுகிற எலும்புத் துண்டுகள் ரணிலிடம் பொறுக்கக் கூடியவற்றைவிடப் பெரியளவாகத் தெரிந்தால் இந்தக் கூட்டணி காற்றோடு போய்விடும்.

ஒற்றைச் சிதையினிலே // உங்கள் எல்லாரையுமே
வைச்சு எரிச்சாலும் // வயித்தெரிச்சல் தீராது.

என்ற புதுமைப்பித்தனின் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பெங்குவினும் தமிழ்க் கவிதையும் ஒரு பித்தலாட்டம்

பெங்குவின் உலகப் புகழ்பெற்ற நூல் வெளியீட்டகம். அதன் வெளியீடுகள் பொதுவாகவே தரமானவை. எனவே அதன் ஆபிரிக்க, நவீன அரபு, கரிபியன் கவிதைத் தொகுப்புக்கள் போன்று தமிழ்க் கவிதைகளின் ஆங்கில மொழியாக்கத் தொகுப்பும் பலரது எதிர்பார்ப்புக்களைக் கிளறிவிட்டிருக்கும். எனினும் இத் தொகுப்பில் பாரதிதாசனைப் பற்றியோ முருகையனைப் பற்றியோ ஒரு சொல் கிடையாது. மகாகவி பற்றி விரிவான குறிப்பு ஒன்று முன்னுரையில் உள்ளது. அதைவிட நீளமான குறிப்பு ஒன்று சேரன் பற்றியது. பாரதிக்கு முந்திய கவிதைகளில், கிறிஸ்தவ, முஸ்லிம் காவியங்களோ கவிதைகளோ பற்றிய ஒரு கவனிப்பும் கிடையாது. பௌத்தஞ் சார்ந்த கவிதை வரிகளை விடப் பன்மடங்கு பெரும் அளவில் சைவ, வைணவ, மதஞ் சார்ந்தவை இடம்பெற்றுள்ளன. சமண மத நம்பிக்கைக்கு இடமே இல்லை. பௌத்தச் செய்யுட்கள் கூடத் தெய்வ வழிபாடு பற்றியன அல்லாது பௌத்தச் சிந்தனை பற்றியனவல்ல. சித்தர்கள் பற்றிய குறிப்பில் அவர்களது ஆணாதிக்கம் பற்றிப் பேசப்படுகிறது. பிற மதங்கள் தொடர்பாக அவ்வாறான ஒரு கருத்தும் கூறப்படவில்லை.

நவீன செய்யுட்களில் மாக்சிய இடதுசாரிச் சிந்தனையை வெளிப்படுத்துகிற விதமானவை கிடையாது. நிந்திக்கிற விதமான சொற்கள் முன்னுரையில் உள்ளன. சுந்தர ராமசாமியும் அவரை அண்டிய இலக்கிய வட்டங்கள் சார்ந்த சிலரும் கவித்துவத்தின் சிகரங்களாகப் போற்றப்படுகின்றனர். ஈழத்திலிருந்து நு'மானையும் சோலைக் கிளியையும் விட்டால் முஸ்லிம் கவிஞரே கிடையாது. தமிழகத்தில் மனுஷ்ய புத்திரனும் சல்மாவுமே உள்ளனர். விடுதலைப் போராட்டத்தின் போக்கில் உருவான ஒரு கவிதை கிடையாது. மலையகத்திலிருந்தும் ஒரு கவிதையும் இல்லை.

தலித்தியக் கவிதைகளின் போர்க் குணமான முனைப்புப் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் வழங்கப்பட்ட கவிதைகளில் அம் முனைப்பின் சாடையே கிடையாது. நூலைத் தொகுத்தவர்களுடைய பார்ப்பனியப் பார்வையில் இவையெல்லாம் பற்றிய நேர்மையான அக்கறை இருக்க நியாயமில்லை.

ஆனால் நூலுக்கு ஆலோசனை வழங்கிய இலங்கையர் மூவரின் பேர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தன் மலையக அடையாளம் பற்றிப் பெருமைப்படுகிற மு. நித்தியானந்தன் ஒருவர். தன்னை ஒரு வகையான மாக்சிய இடதுசாரியாகக் கூறிக்கொள்கிற நு'மான் இன்னொருவர். ஈழத் தமிழ் இலக்கியத்தின் (இடதுசாரிகள் தவிர்ந்த) முக்கியமான படைப்பாளிகளையும் படைப்புக்களையும் உலகறியச் செய்வதாகப் பேசப்படுகிற பத்மநாப ஐயர் மற்றவர். இவர்கள் எல்லாரும் எந்தவிதமான ஆலோசனை வழங்கினார்கள்?

இந்த நூல் பற்றிய சி.சிவசேகரத்தின் விரிவான விமர்சனம் Third Eye இணையத்தளத்தில் இரண்டு பகுதிகளாக வெளி வந்துள்ளது. அதற்கு நூலின் தொகுப்பாளர்களின் பதில் என்ன? அவர்களின் ஈழத்து ஆலோசகர்களின் பதில் என்ன? இந்தக் குழறுபடியான நூலை வெளியிட்டது பெங்குவினின் இந்தியக் கிளை நிறுவனம். அது தாய் நிறுவனத்தினின்றும் வேறுபட்ட ஒரு விலங்கினமா என்று அங்கே சிவசேகரம் கேள்வி எழுப்பியிருந்தார்.

# ஒடுக்கலால் உடையாது உலகம்

நெற்றி பிளக்கும் உச்சிவெயில்
கொதிப்படையும் இரத்தம்
கொப்பளித்து வெளியேறும் வியர்வை

வெட்டுண்டு வீழ்ந்த வாதுகள் நிறைந்த நிரைகளில்
நிமிராமல் நகர்கிறான்
அவனது ஒட்டுமொத்தக் கோபங்களையும்
அமைதியாய் வாங்கிச் சரியும்
தேயிலை வாதுகள்

குளிரில் விறைத்த கைகளில்
மடக்க முடியாதபடி விரல்கள்
பனிப்பொழிவில் வெடித்துப்போன உதட்டை
நொடிக்கொருதரம் ஈரப்படுத்தும் நாக்கு
பிஞ்சுத்தளிர்களை பிய்த்துப்போட்டபடி
விறைத்த விரல்களைச் சூடாக்குகிறாள்

முடமாகிப் போன வாழ்வை
இழுத்து இழுத்து நடக்கின்றன நாட்கள்
ஏமாற்றும் ஏமாற்றுக் காரர்களும்
நிறைந்து போன வாழ்வில்
நிம்மதியைத் தேடி நிச்சயமில்லாப் பயணம்

திருவிழாக் கூத்தில்
தொலைந்துபோன குழந்தைகளாய்
திக்கு தெரியாமல் திரிந்தபடி இருக்க
தேர்தல் காலங்களில்
தேடிப்பிடித்து சீராட்டி மகிழும் பூச்சாண்டிகள்
பின் மீண்டும்
திருவிழாக்கூடத்தில் குழந்தைகளைத்
தொலையும் தொழிலாளர்கள்

அடிமைச் சித்தாந்தத்தின் அண்டப் புளுகுகளை
ஊடகச் சாத்தான்கள் வேதமாய் ஓதி
மண்டையை நிரப்புகின்றன.
சினம் கொண்டு சீறும் போது
சிரித்தபடி சிரசுதடவிப் புறமுதுகில் குத்தி வீழ்த்துவர்
சிலகாலம் எழமுடியாதபடி

மறுபடியும் மாற்றம் வேண்டி எழுந்து நிற்கையில்
எந்திரத்துப்பாக்கிச் சகிதம் ஓநாய்கள்
ஒடுக்கலின் கட்டியக் குரலாய் ஊளையிடுகின்றன.

ஒடுக்கலால் உடையாது உலகம்
ஒடுக்கலால் ஒன்றுபடுவர் மக்கள்
புதிய சூரியனை நோக்கிப் புதிய பூக்கள் சிரிக்கும்
பெரிய ஆறு அணையுடைத்துப் பிரவகிக்கும்
கரைகளெங்கும் பசுமை நிரம்பி வழியும்.

# அழகு பற்றிய சில குறிப்புகள்!

நிலைக்கண்ணாடி முன் நின்று கொண்டு தனது முக அமைப்பின் ஒழுங்குகள் குறித்து கவலைப்படுவதும், அதைக் குறைந்த பட்சம் முடி, முகப்பூச்சு மூலம் செப்பனிடுவதற்காக மிகுந்த பிரயத்தனம் செய்வதும் விடலைப் பருவத்தின் தவிர்க்க இயலாத பழக்கம். பிறகு திருமணம், குழந்தைகள் என்று வாழ்க்கையில் நிலைபெற்ற பிறகு இவை மறந்து போனாலும் தனது அழகின் தரம் பற்றி எல்லோருக்கும் ஒரு ஏக்கமும், எதிர்பார்ப்பும் இருக்கும். எது அழகு? எதெல்லாம் அழகின்மையோ அவற்றைத் தவிர மற்றெதுவும் அழகுதான். எவையெல்லாம் அழகின்மைகள்? அவற்றை ஊடகங்களும், சினிமா உலகமும், அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் பன்னாட்டு நிறுவனங்களும் வடிவமைத்து கற்றுத் தருகின்றன. இளவயதில் விழும் வழுக்கை, மாற்ற முடியாத கறுப்புநிறம், சீரற்றிருக்கும் பல்வரிசை, உட்கார்ந்து வேலை செய்பவருக்கு வரும் தொந்தி, பெண் மார்பகத்தின் சிறிய அளவு, குறைய மறுக்கும் பின்னழகு, படியாத முடி, சதையற்ற புஜங்கள், கறுப்பு வளையத்தால் சூழப்பட்டிருக்கும் இமைகள், வயிற்றுப் பிரச்சினைகளால் வரும் வாய் நாற்றம், கட்டுப்படுத்த முடியாத வியர்வை மணம்... இவையெல்லாம் வர்த்தகமயமாகும் கல்வி, வேலையின்மை போன்ற இளையோரின் முக்கியமான பிரச்சினைகளை முந்திச் செல்லும் அளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றன.

சீர்வரிசையான அணிவகுக்கும் இந்த அழகின்மைகள் இருந்தால் உங்கள் வாழ்க்கை விரும்பத்தக்கதாக இருக்காது என்பதை ஊடகங்கள் ஓயாமல் பயமுறுத்துகின்றன. தொடர்ந்து ஓதப்படும் அழகின்மையின் அபாயங்கள் மனதின் ஆழத்தில் உறுதியாகப் பதிந்து விடுகின்றன. தனக்கு கிடைக்காத நட்பு, காதல், திருமணம், தாம்பத்தியம் முதலானவற்றுக்கு தன்னிடம் இருக்கும் அழகின்மையே காரணமென்று ஒரு தாழ்வு மனப்பான்மை அச்சுறுத்தும் வண்ணம் தலைதூக்குகின்றது. இந்த தாழ்ந்து போதல் நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டிய வாழ்க்கையை சோர்வுடன் இயங்க வைக்கின்றது. அழகின்மையின் இலக்கணங்கள் ஆளுமையின் உருவாக்கத்திற்குள் ஊடுருவுவதிலும் தவறுவதில்லை. தன்னுடைய உருவத்தின் போதாமையால் இதற்குமேல் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்று சாதிக்க வேண்டிய வயதில் விடலைப்பருவம் சுருக்கிக் கொள்கின்றது.

பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் தனித்துவம் இல்லாமல் வாழவேண்டிய ஒரு பெண்ணுக்கு அழகின் வாய்ப்பாடங்கள் அத்துபடியாகும் அளவுக்கு ஒரு தவிர்க்க இயலாத பிரச்சினை அது. வயதுக்கு வந்தது முதல் வளைகாப்பு வரை அவள் தன்னழகை மிகச்சிறப்பாகப் பேணிக்காக்கும் கட்டாயத்திற்கு ஆளாக்கின்றன. அவளது வாழ்வின் பெரும்பகுதியை அலங்காரத்திற்கு அர்ப்பணிப்பது நிர்ப்பந்தமாகவே இருக்கின்றது. அழகின் இலக்கணத்தில் ஒன்று குறைந்தால் கூட பலவற்றை இழப்பதற்கு அவள் தயாராக இருக்க வேண்டும். அழகு குறித்த அச்சமே ஒரு பெண்ணின் வாழ்க்கை குறித்த அச்சமாக மாறுகின்றது. குழந்தையாக இருக்கும் போது காது குத்துதல், பெயர் சூட்டுதல் வைபவம், வயதுக்கு வந்ததும் பூப்பெய்தும் சடங்கு, நிச்சயார்த்தம், தாலிக்குப் பொன்னுருக்கல், வளைகாப்பு, கணவன் இறந்தால் அலங்காரங்களைத் துறக்கும் விதவைச் சடங்கு எனக் கருவறை முதல் கல்லறை வரை ஒரு பெண்ணின் அடிமைத்தனத்தை அறிவிக்கும் விசேசங்கள் எல்லாவற்றிலும் அழகு நிழல் போல பின் தொடர்ந்து மிரட்டுகின்றது. ஒரு ஆண் எத்தனை அழுக்காக இருந்தாலும் ஒரு பெண் குளித்து முடித்து பூச்சூடிச் சுத்தமாக இருக்க வேண்டும். அவள் தாலியும், நெற்றியின் உச்சியில் வைக்கப்படும் பொட்டும் அலங்காரத்திற்கு மட்டுமல்ல, அவள் கன்னி கழிந்தவள் என்பதை ஆண்களுக்கு தெரிவிக்கவும் செய்கின்றன.

அழகிற்காகச் செலவிடப்படும் தொகை வேண்டுமானால் வேறுபடலாமே ஒழிய அழகு குறித்த கவலைக்கும் ஒதுக்கீட்டிற்கும் வர்க்க வேறுபாடு இல்லை. ஏற்றுமதி நிறுவனத்தில் ஓரிரு ஆயிரங்களுக்கு வேலை செய்யும் பெண்ணுக்கும், மென்பொருள் துறையில் பல ஆயிரங்களுக்கு வேலை செய்யும் பெண்ணுக்கும் அவர்களது வருமானத்தில் கணிசமான அளவை அழகின் வேலைப்பாடுகளுக்காக ஒதுக்குவது இயல்பானது. நடுத்தர வர்க்கப் பெண்கள் அழகு நிலையம் செல்வது இப்போது முன்னெப்போதையும் விட அதிகரித்திருக்கின்றது. வேலைக்குச் செல்லும் பெண்கள் நாளொன்றுக்கு ஒரு ஆடை வீதம் பல ஜோடிகளை அடுக்கி வைப்பது கட்டாயம் ஆடைக்கேற்ற அலங்காரப் பொருள்கள் பை, செருப்பு, அவளது கைப்பையை நிரப்பும் முகப்பூச்சுப் பொருள்கள். முடிவில்லாமல் நீளும் இந்தப் பட்டியலை அவர்கள் அன்றாடம் பராமரிக்க வேண்டும்.

ஒரு மனிதர்களின் அழகு அவர்களுடைய தோற்றத்தில் இல்லை. அவர்களுடைய நடத்தைதான் அவர்களுடைய அழகின் வெளிப்புறமாக இருக்கின்றது. தோற்றத்திற்கும் நடத்தைக்குமான முரண்பாட்டில் நாம் ஒருவரின் அழகை வைத்தா மதிப்பிடுகின்றோம்? ஒரு நாவலோ, திரைப்படமோ முதலில் நம் மனதில் பாதிப்பை ஏற்படுத்துவது அதன் உள்ளடக்கமானது தான். இலக்கியத்திற்குப் பொருந்தும் இந்த நியாயம் வாழ்க்கைக்கும் பொருந்துமல்லவா? ஆனால் நடப்பு உலகம் பெரும்பாலும் அப்படி இயங்குவது இல்லை. கறுப்புத் தமிழச்சி என்னதான் அழகாக ஆங்கிலம் பேசினாலும் அவள் ஒரு போதும் விமானப் பணிப்பெண்ணாக வரமுடியாது. ஹீரோக்களின் எதிர்மறைத் தோற்றத்தில் இருப்பவர்களே காமடியன்களாக வர முடியும். வேட்டி சட்டையோடு யதார்த்தமாக வரும் ஒரு தமிழனுக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க அலுவலகத்தில் இடம் கிடையாது. நவீன அழகியல் கோரும் அம்சங்கள் இல்லாத பெண்கள் என்னதான் அழகாக தமிழில் பேசினாலும் தொகுப்பாளினியாகப் பணியாற்ற முடியாது. கிராமத்து தோற்றம், நடத்தையுடன் வரும் நாட்டுப்புறத்து மனிதர்களை அதிகார வர்க்கம் அலட்சியமாகவே நடத்தும்.

இப்படி சமூகம் அழகை வைத்து தான் பாகுபாடு காட்டி நடத்துகின்றது என்றாலும் சமூக வாழ்க்கையில் இதைத் தமது ஆளுமையால் வென்றவர்களும் இருக்கின்றார்கள். சுயநலமின்றி மற்றவருக்காகக் கவலைப்படுவதும், அதற்காகத் தமது வாழ்க்கையைச் செலவிடுவதற்கேற்ப ஒரு மனிதனின் அழகு அவனது தோற்றத்தை மீறி ஒளிர்கின்றது. மக்கள் நிபந்தனையில்லாமல் நேசிக்கும் ஒரு மனிதன் மற்றவர்களால் விரும்பப்படக் கூடியவனாகவும் இருப்பான். தான் செய்யும் தொழிலை இன்முகத்துடன் மற்றவர்களுக்கு பணியாற்றக் கிடைத்த வாய்ப்பு என்ற மரியாதையுடன் செய்பவனை நாடி மக்கள் கூட்டம் நிச்சயம் மொய்க்கும். இவர்களெல்லாம் தலைவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை.

ஆம், அழகு என்பது நிலைக்கண்ணாடியில் பிரதிபலிப்பதல்ல, மற்றவர்களுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ளும் மனிதர்கள் தான் இதுவரை மனித சமூகம் கண்ட பேரழகு மனிதர்கள். நீங்கள் அழகுள்ளவரா என்பதை அறிந்து கொள்ள உங்கள் உருவத்தை சமூகக் கண்ணாடியில் பார்ப்பதற்கு முயலுங்கள். நம் அழகைத் தெரிந்து கொள்வதற்கு இதுதான் ஆகச் சிறந்த வழி!

நன்றி : புதிய ஜனநாயகம்

13ம் பக்க தொடர்ச்சி

அமெரிக்கவிற்கு

19 சதவீதம் அல்லது 320,000 எண்ணிக்கையானவர்களுக்குத் தலையிற் காயம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வு கூறுகிறது. இவர்கள் அமெரிக்கப் பிரஜைகளாகவே உள்ளனர். இது அமெரிக்க சமூகத்தில் பாரிய தாக்கங்களை விளைவித்து வருகிறது. இது ஒரு புறமிருக்க, அமெரிக்கா உலகில் 46 நாடுகளிலும் பிரதேசங்களிலுமாக 909 இராணுவ வசதிகளையும் 115,000 குடிசார் ஊழியர்களையும் 190,000 படைவீரர்களையும் கொண்டுள்ளது. இந்த நிலைமையைத் தொடர்ந்தும் பேணுவதாக உறுதி பூண்டுள்ள பராக் ஒபாமாவுக்கே சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது. இந்த நோபல் பரிசு ஆப்கானிஸ்தான் போரில் உடைபடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் இறுதியில் காகிதப் புலியே என்று விரைவில் நிரூபிக்கப்படும். சிறி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

நவம்பர் 2009

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



கடந்த ஒக்ரோபர் 29 ம் திகதி 26 வயதான தமிழ் இளைஞன் (மன அழுத்த நோயாளி) பம்பலப்பிட்டியில் இரண்டு பொலிசாரால் கடலில் வைத்து கரையேற விடாது பொல்லுகள் கொண்டு தாக்கப்பட்டு நீரில் மூழ்கி கொலையுண்டார். பட்டப்பகல் கொலையுண்ட இளைஞனை நாய் அடிப்பது போன்று அடித்து மூழ்கடிக்கப்பட்ட காட்சியே இங்கு காணப்படுகிறது. இது தான் எங்கள் நாட்டின் மனிதஉரிமையின் ஜனநாயகத்தின் அவலம். பொலீஸ் அராஜகத்தின் அப்பட்டமான வெளிப்பாடு.



இப்படத்தில் காணப்படும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோரை சற்று நிதானித்துப் பாருங்கள். அவர்களது சுயரூபங்களை தரிசிக்கலாம். தமிழ் மக்களின் உயிர் உடைமைகளை அழிவுற வைத்து பேரவலங்களுக்கு மத்தியில் அம் மக்களை அலைய விட்ட தலைவர்கள் என்போர் மானம் வெட்கம் இன்றி வீற்றிருக்கிறார்கள் . முஸ்லீம் மக்களுக்கு வழிகாட்ட முடியாதவர்களும் மலையகத் தமிழ் மக்களின் சந்தாப் பணத்திலும் பாராளுமன்ற பதவிகள் மூலமும் சொத்து சுகம் அனுபவித்து வருபவர்களும் இங்கே இருக்கிறார்கள். இத்தகையவர்கள் சிறுபான்மை இன மக்களுக்காக எவ்வாறு ஐக்கியப்படுவர்கள். ஏன் எதற்காக யாரால் யாருக்காக இக்கூட்டம் சூரிச் நகரில் நடாத்தப்பட்டது?



இதில் கை கோர்த்து நிற்பவர்களை மக்களுக்கு நன்கு தெரியும். ஐக்கிய தேசிய முன்னணி என்னும் பாராளுமன்ற எதிர்க் கட்சிகளின் கூட்டு என்று கூறியே கை கோர்த்துள்ளனர். இவர்களது கொள்கை என்ன? பொருளாதாரத்தை எவ்வாறு மீட்பார்கள். அமெரிக்க எசமானரை எதிர்ப்பார்களா? தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு? வாழ்க்கைச் செலவின் உயர்வு வேலைஇன்மை சம்பள உயர்வுக்கு என்ன தீர்வு? கூறுவார்களா இக் கூட்டணியினர்.



மீள்குடியேற்றத்திற்காக மல்லாவி பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டு அங்குள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் சென்று சந்தித்தார். அவர் அம்மக்களிடம் எதை விசாரித்தார் எதனை வழங்குவதாக வாக்குறுதி அளித்தார். யார் அறிவார் இதனை.












கடந்த 15-11-2009 அன்று கொழும்பில் தோழர்நவம் மறைவின் 5வது ஆண்டு நினைவு தினக் கூட்டமும் தோழர் சி.கா.செ. நேர்காணல் நூலின் வெளியீடும் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு தலைமை தாங்கிய தோழர் தேவராஜா உரையாற்றுவதையும், தோழர் நவம் நினைவுரையை தோழர் சி.கா.செந்திவேல் நிகழ்த்துவதையும், இன்றைய அரசியல் நிலைமை பற்றிய ஒரு நேர்காணல் நூலின் வெளியீட்டுரையை தோழர் இ.தம்பையா ஆற்றுவதையும், முதற்பிரதியை மூத்த தோழர் இ.செல்வநாயகம் பெறுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.